ஆரம்பக்கல்வி

ஆசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்.

ஆசிரியர் : பி. வீரராகவன்

ஆண்டு சந்தா ரூ. 3] [தனி இதழ் 25 ந. பை.

மலர் 30	செப்டம்பர் 1966	இதழ் 9

புகழ் மாலைகள் சூட்டினால் போதுமா ?

"வருங்காலக் குடிமக்களை உருவாக்கும் நிகழ்காலச் சிற்பிகள்"

"ஈடு இணையற்ற பணிபுரியும் ஒப்பு உயர்வற்ற சமுதாயத்தினர்."

"மிகக் குறைந்த ஊதியத்தைப் பெற்றுக்கொண்டு மிக உயர்ந்த பணியாற்றும் பெருமக்கள்"

"அறிவுக் கண்களைத் திறக்கும் அருஞ் செயல்புரியும் அண்ணல்கள்"

"கல்வி என்னும் கோயிலுக்கே அடிப்படை போல அமைந்திருப்பவர்கள்"

"நாட்டின் நலன் பெருக வேண்டுமானால் ஆசிரியர்களின் நலன் பெருகியாகவேண்டும்"

“மக்கட் சமுதாயத்தின் இதய நாடியாக இருப்பவர்கள் ஆசிரியர்களே”

“இந்தியா உயர வேண்டுமானால் கல்வி உயர வேண்டும். கல்வி உயர வேண்டுமானால் ஆசிரியர்கள் உயர வேண்டும்.”

இப்படிப்பட்ட புகழ் மாலைகள் ஏராளமாகவும் தாராளமாகவும் சூட்டப்பட்டிருக்கின்றன—ஆசிரியப் பெருமக்களுக்கு—செப்டம்பர் 5ஆம் நாளன்று.

இந்தியக் குடியரசின் தலைவரும், தலைசிறந்த தத்துவ ஞானியும், ஈடு இணையற்ற ஆசிரியப் பெருமகனும் ஆகிய டாக்டர் இராதா கிருஷ்ணன் அவர்களின் பிறந்த நாள், செப்டம்பர் 5.

மறைந்த மாமேதை பண்டித ஜவகர்லால் நேரு அவர்களின் பிறந்த நாள் குழந்தைகள் திருநாளாகக் கொண்டாடப்பட்டு வருவதைப்போல, சென்ற சில ஆண்டுகளாக, டாக்டர் இராதா கிருஷ்ணன் அவர்களின் பிறந்த நாள், “ஆசிரியர் திருநாளா”கப் போற்றிப் புகழப்பட்டு வருகிறது.

தலைசிறந்த ஆசிரியப் பெருமகனாகிய டாக்டர் இராதாகிருஷ்ணனின் பிறந்த நாள், ஆசிரியர்கள் ஆற்றும் அரும்பணியின் செம்மையையும் சிறப்பையும் நன்றியுடன் எண்ணிப் போற்றும் ஏற்றம் மிக்க நாளாகக் கொண்டாடப்படுவது, முற்றிலும் பொருத்தமான செயலேயாகும்.

சென்ற சில ஆண்டுகளைப் போலவே இந்த ஆண்டிலும், செப்டம்பர் 5ஆம் நாளன்று, ஆசிரியப் பணியின் அருமை பெருமைகளைப் பற்றி,

> நாடாளும் அமைச்சர்கள், அரசாங்க நிர்வாகிகள், தொழில்துறை வல்லுநர்கள், பத்திரிகை அதிபர்கள், அரசியல் தலைவர்கள், எழுத்துலக வேந்தர்கள், சொல்லின் செல்வர்கள், வாணிபக் கோமான்கள், கலையுலக ஒளி விளக்குகள்.

ஆகிய பல்வேறு சாராரும் போற்றித் திரு அகவல் பாடியுள்ளார்கள்.

பாராட்டு, அதன் முழு அளவிலும் கிடைத்திருக்கிறது, ஆசிரியர்களுக்கு. மறுக்கமுடியாத உண்மை இது.

எழில் மிக்க இந்த நிலை இந்திய சமுதாயத்தில் பூத்திருப்பது குறித்து நாம் மட்டற்ற மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறோம்.

இந்திய சமுதாயத்தின் பல்வேறு நிலையினரும் வகையினரும் ஆசிரியத் தொழிலின் வன்மையையும் உண்மையையும் தெள்ளத் தெளிவாக உணர்ந்திருப்பது, பூரிப்பை அளிக்கத்தக்க பொன்னான நிலைமை என்பதில் ஐயம் என்ன இருக்க முடியும்?

ஐயம் இல்லை துளியும். உண்மைதான். ஆனால் புகழ்மாலை சூட்டப்படுகிற இந்த நிலைமை மட்டும் உருவாகிவிட்டால் போதுமா?

அந்தப் புகழுரைகளுக்கும் பாராட்டுச் சொற்களுக்கும் ஏற்ற சமுதாயச் செல்வாக்கு ஆசிரியர்களுக்குத் தரப்பட வேண்டாமா?

அத்தகைய செல்வாக்கு அவர்களுக்கு ஏற்பட வேண்டுமானால் அதற்கு ஏற்ற ஊதியம் அவர்களுக்குத் தரப்பட வேண்டாமா?

அப்படித் தரப்பட வேண்டிய ஊதிய அளவுக்கும், இப்போது உண்மையில் அவர்களுக்குத் தரப்படுகிற ஊதிய அளவுக்கும் இடையே பெரியதொரு வேறுபாடு இருக்கிறது என்பதை யாராவது மறுக்க முடியுமா?

அத்தகைய வேறுபாட்டை அகற்றுவதற்கு இந்திய சமுதாயம் எவ்வளவு விரைவில் முன் வந்திருக்கிறதோ அவ்வளவு விரைவில் தான் ஆசிரியர்களின் அந்தஸ்து உயரும் என்பதில் ஐயம் உண்டா?

அவ் வேறுபாட்டை அகற்றுவதற்கு இதுவரை மேற்கொள்ளப் பட்ட முயற்சிகள், மிகச் சிலவே, எண்ணிக்கையில்; மிகச் சிறியனவே, அளவில். தேவைப்படுகிற எண்ணிக்கையிலும் அளவிலும் அத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது எப்போது?

ஆசிரியத் தொழிலினரைப் பாராட்டுவதில் காணப்படுகிற வேகமும் விறுவிறுப்பும், அவர்களுக்கு உரிய ஊதிய நிலையைப் பெற்றுத்தருவதில் காட்டப்படுவதில்லையே, அது ஏன்?

ஆசிரியர் திருநாளை அகமும் முகமும் மலர அனைவரும் கொண்டாடும் இந்த நல்ல வேளையில், இன்றியமையாத இந்தக் கேள்விகளை நாம் எழுப்பாமல் இருக்க முடியாது.

"நம்முடைய கல்வியமைப்புக்கே அடிப்படையாக அமைந்துள்ள ஆசிரியர்களின் அந்தஸ்தையும் ஊதியத்தையும் உயர்த்தாமல் கல்விச் சீர்திருத்தம் பற்றிப் பேசுவதெல்லாம் வீணேயாகும்.........பல்கலைக் கழகங்களிலும் கல்லூரிகளிலும் திறமை மிகுந்தவர்களை ஈர்க்கவேண்டிய தொழில், ஆசிரியத் தொழில். ஆனால் துரதிர்ஷ்டவசமாக இன்று அப்படி நடக்கவில்லை. சகிக்கமுடியாத வறுமையில் வாழ்வதற்குத் தயாராய் இருந்தாலன்றி, திறமை சாலிகளாக இருப்பவர்கள், ஆசிரியத் தொழிலை விட்டுவிட்டு உயர்ந்த ஊதியம் கிடைக்கும் ஏனைய துறைகளுக்குச் சென்று விடுகிறார்கள்."

இந்த ஆண்டின் ஆசிரியர் திருநாளை யொட்டி, அனைத்திந்திய வானொலியின் வாயிலாக, **இந்தியப் பேரரசின் கல்வியமைச்சர் திருவாளர் சக்ளா அவர்கள்** *ஆற்றிய அரிய உரையின் ஒரு பகுதி இது.*

"ஆசிரியர்கள் செழிப்பாக இருந்தால்தான் நம் நாடும் செழிப்பாக இருக்கும். நம் வருங்கால நலன் இந்த நாட்டில் உள்ள இருபது இலட்சம் ஆசிரியர்கள் கையில் இருக்கிறது. ஆசிரியர்களைக் கௌரவிப்பதுபற்றி நாம் நிறையப் பேசுகிறோம். ஆனால் நாம் பேசும் அளவுக்குச் செயலில் காட்டுகிறோமா? தன்னலம் கருதாமல் உழைக்க வேண்டும் என்று ஆசிரியர்களை மட்டும் கோருவது முறையாகாது."

ஆசிரியர் நாளை யொட்டி, **இந்தியாவின் தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி அவர்கள்** *வெளியிட்டுள்ள செய்தியின் ஒரு பகுதி இது.*

கல்வியமைச்சர் திருவாளர் சக்ளா, தலைமையமைச்சர் திருமதி இந்திரா காந்தி ஆகிய இருவருமே உள்ள நிலைமையை, உள்ளது உள்ளபடி எடுத்துக்காட்டியுள்ளார்கள், தங்களுடைய சொற்களின் வாயிலாக. ஆசிரியர்களின் பெருமை பற்றி வானளாவப் பேசுகிறோமே தவிர, பேச்சுக்கு ஏற்ற செயலில் நாம் ஈடுபடவில்லை என்பதை இருவருமே தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார்கள்.

தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள்,

உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள்,

கல்லூரி ஆசிரியர்கள்,

ஆகிய மூன்று திறத்தாருக்கும், தற்போது இருப்பதைவிட உயர்ந்த ஊதிய விகிதங்களை, அனைத்திந்தியக் கல்விக் குழுவினர் அண்மையில் பொர்சு செய்துள்ளார்கள் அல்லவா? அந்தப் பொரிசு களை, மத்திய அரசினரும் சரி, மாநில அரசுகளும் சரி, உடனடியாக ஏற்றுக்கொண்டு நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும். சமுதாயத்தில் சிறப்பும் செல்வாக்கும் மிக்க நிலையைப் பெற்றுள்ள பெரு மக்கள் அனைவரும், தத்தம் சிறப்பையும், செல்வாக்கையும் இத்தகைய நற்பணியில் ஈடுபடும்படி அரசாங்கத்தைத் தூண்டுவதற்குப் பயன்படுத்த வேண்டும்.

நாடாளும் அமைச்சர்கள் முதல் ஏடாளும் எழுத்தாளர்கள் வரை, அத்தனைத் திறத்தாரும் ஆசிரியர்கள் ஆற்றும் அரும் பணியைப் பற்றி, அழகான சொற்களால் அணி அணியாகப் புகழ்ந்துள்ளார்கள் அல்லவா? அந்தப் புகழுரைகள் அத்தனையும் அவர்களுடைய உள்ளங்களின் உள்ளேயிருந்து பிறந்தவையே தவிர உதடுகளின் ஓரத்திலிருந்து வெடித்தவை அல்ல என்பது உண்மையானால், ஆசிரியர்களின் ஊதிய உயர்வுக்கு அவர்கள் ஒவ்வொருவரும், உண்மையான முறையிலும் உருவான வகையிலும், தம்மால் இயன்ற முயற்சியில் ஈடுபட்டாக வேண்டும். அவ்வாறு ஈடுபடாமல், ஆண்டுக்கு ஒருமுறை கூடி ஆசிரியர்களின் சிறப்பைப் பற்றிச் சொற்சிலம்பம் ஆடுவதோடு தீர்ந்துவிட்டது தங்கள் கடமை என்று கருதுவார்களானால், அதைவிடப் பேதமை வேறொன்று இருக்க முடியாது.

தகுதியும் திறமையும் வாய்ந்த ஒருவனைப் பார்த்து, "நீ ஆசிரியர் தொழிலுக்குப் போக விரும்புகிறாயா அல்லது வேறு துறைக்குச் செல்ல விரும்புகிறாயா?" என்று கேட்டால், அவன், "நான் ஆசிரியர் தொழிலையே விரும்புகிறேன்" என்று கூறத்தக்க அளவுக்கு ஆசிரியர்களின் தொழில் உயர்நிலை உடையதாக ஆக்கப் படவேண்டும். அத்தகைய உயர்நிலை, அத்தொழிலுக்கு, வெறும் பாராட்டுரைகளால் கிடைத்துவிடாது; உயர்ந்த அளவு ஊதியத்தை உடனடியாக அளிக்க முன்வந்தால்தான் கிடைக்கும்.

“இன்றைய வருந்தத்தக்க நிலைமையிலும் நம் கல்வி நிலையங்களில் ஆசிரியர் தொழில் புரியும் அந்த இருபது இலட்சம் பேரின் தன்னல மறுப்பையும், கல்வியின் வளர்ச்சிக்காகவே தங்களை ஒப்படைத்துக் கொண்டுவிட்ட தொண்டு உணர்வையும் போற்றத்தான் வேண்டும். இத்துறையில் நாட்டு மக்களின் மனச் சான்று விழித்து எழவேண்டும்.” என்று குறிப்பிட்டுள்ளார் அமைச்சர் சக்ளா.

அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளது போல, நாட்டு மக்களின் மனச் சான்று விழித்து எழுவது இன்றியமையாதது. அதிலும் சிறப்பாக, நாட்டு மக்களின் பிரதிநிதியாகத் திகழும் அரசாங்கத்தின் மனச்சான்று விழித்து எழுவது மிக மிக இன்றியமையாதது ஆகும். “அரசு எவ்வழி அவ்வழி குடிமக்கள்” என்பது, பழமொழி மட்டும் அன்று; நடைமுறை உண்மை.

விழித்து எழுமா, அம் மனச்சான்று? ஆம் எனில், எப்போது? எவ்வளவு விரைவில்?

இருபது இலட்சம் ஆசிரியர்களின் இதயங்கள் கேட்கும் கேள்விகள் இவை.

தரத்தைக் குறைக்கும் தவறான செயல்!

சென்ற சில நாட்களாகத் தமிழ் நாட்டுக் கல்வி உலகத்தில் புதியதொரு கருத்து உலா வரத் தொடங்கியிருக்கிறது.

இந்தக் கருத்தைச் சிலர் மிக உரமாக ஆதரிக்கும் மனப் போக்கை உடையவர்களாகக் காணப்படுகிறார்கள்.

அதே சமயத்தில் வேறு சிலர் இந்தக் கருத்தை அழுத்தந் திருத்தமாக எதிர்க்கிறார்கள்.

இந்தக் கருத்தை ஆதரிப்பவர்களிற் பெரும்பாலோர், இப்படிப் பட்ட கருத்தை ஆதரிப்பவர்களாகத் தங்களைக் காட்டிக் கொண்டால், அடுத்து வரும் பொதுத்தேர்தலில் தங்களுக்கு விழக்கூடிய வாக்குகளின் எண்ணிக்கை கூடுதலாகும் என்கிற ஆசை படைத்தவர்களாக இருக்கிறார்கள்.

இக கருத்தை எதிர்ப்பவர்களிற் பெரும்பாலோர், இந்தக் கருத்தானது நடைமுறைக ரீதமாக மாறிவிடுமானல், ஏற்கெனவே பல காரணங்களால் குறைந்த தரம் உடையதாக மாறியிருக்கும் கல்வியானது தன் தரத்தில் மேலும் பல படிகள் தாழ்ந்துவிடும் என்கிற அச்ச உணர்ச்சி உடையவர்களாக அமைந்துள்ளார்கள்.

இவ்வாறு ஒரு சாராரின் ஆர்வ மிக்க வரவேற்புக்கும், மற்ருெரு சாராரின் வேதனை கலந்த மறுப்புக்கும் ஆளாகியிருக்கும் கருத்து எது என்பதை அறிய அனைவருக்கும் ஆவல் எழுவது இயற்கை.

தமிழ்நாட்டுக் கல்லூரிகள் அனைத்திலும் எல்லா மாணவர் களுக்கும் கல்வி இலவசமாக அளிக்கப்படவேண்டும் என்பதே அந்தக் கருத்து.

அடுத்து வருகிற பொதுத் தேர்தலில் ஆளும் கட்சிக்குக் கூடுதலாகச் சில ஆயிரம் வாக்குகளைப் பெறுவதற்கான ஒரு வழி இது என்கிற அரசியல் கண்ணேட்டம் ஒன்றைத் தவிர வேறு எந்தக் கண்ணேட்டத்திலிருந்து பார்த்தாலும் இந்தக் கருத்துக்குத் துளியளவும் நியாயம் இருப்பதாகத் தெரியவில்லை.

கல்லூரிக் கல்வியைப் பெறுவதற்கான எல்லாவகைக் கல்வித் தகுதிகளையும் பெற்றுள்ள ஒரு மாணவன், பெற்ருேர்களின் பணவசதிக் குறைவு என்கிற ஒரே காரணத்தால் அந்தக் கல்வியைப் பெறமுடியாத நிலை இருக்குமானல், அத்தகைய மாணவன் தொடர்ந்து படிப்பதற்குத் தேவையான எல்லா வகை வசதிகளையும் செய்து தருவது, அரசாங்கத்தின் தனிப் பெருங் கடமையாகும். இந்தக் கடமை அரசாங்கத்திற்கு உண்டு என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள். தகுதி படைத்த மாணவர்கள், கல்லூரிக் கல்வியைப் பெறமுடியாதபடி தடுக்கும் முட்டுக்கட்டையாக வறுமை இருக்கக்கூடாது. இதில் துளியும் ஐயம் இல்லை. அத்தகைய மாணவர்களின் நன்மைக்காகத்தான், மாநில அரசுகள், மத்திய அரசு ஆகிய இருவகை அரசுகளாலும் பல்வேறு உபகாரச் சம்பள ஏற்பாடுகள் உருவாக்கப்பட்டு நடைமுறையில் உள்ளன. இந்த உபகாரச் சம்பள ஏற்பாடுகளில் ஏதேனும் குறைபாடுகள் இருந்தால் அவற்றை அகற்ற வேண்டியது அவசியம். இந்த ஏற்பாடுகளின் அளவு போதுமானதாய் இல்லை என்ருல், அந்த அளவை விரிவு

படுத்துவதும் இன்றியமையாத செயலே. உபகாரச் சம்பள ஏற்பாடுகளில் காணப்படுகிற குற்றங் குறைகள் அகற்றப்பட்டு, போதிய அளவும் விரிவும் உடையனவாக அவை ஆக்கப்பட்டு விட்டால், தகுதி படைத்த மாணவர்கள் எவருக்கும் ஏழ்மையின் காரணமாகக் கல்லூரிக் கல்வியைப் பெறமுடியாத நிலைமை ஏற்பட முடியாது என்பது வெள்ளிடைமலை.

தகுதி படைத்த மாணவர்கள் அனைவருக்கும் கிடைக்கத்தகுந்த முறையில் உபகாரச் சம்பள ஏற்பாடு ஒழுங்குபடுத்தப்படவேண்டும் என்று ஒருவர் சொன்னால், அதனை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. அது மிக மிக நியாயமான கோரிக்கை.

ஆனால் அந்தக் கோரிக்கையை எழுப்பாமல், கல்லூரி மாணவர்கள் அனைவருக்கும் கல்வி இலவசமாக அளிக்கப்பட வேண்டும் என்றால், ஏன் அப்படி அளிக்கப்படவேண்டும் என்பதைத் தான் நம்மால் புரிந்து கொள்ளமுடியவில்லை.

கல்லூரி மாணவர்கள் யாவருக்குமே இலவசமாகக் கல்வி அளிக்கப்படவேண்டும் என்றால், பணவசதி படைத்த பெற்றோர்களின் பிள்ளைகளுக்கும் கல்லூரிக் கல்வி இலவசமாக அளிக்கப்பட வேண்டும் என்பது பொருளாகிறது.

அப்படிப்பட்ட பணக்காரப் பிள்ளைகளுக்குக் கல்லூரிக் கல்வி ஏன் இலவசமாக வழங்கப்படவேண்டும்?

ஏராளமான வருமானம் உடையவர்கள், சொத்து சுகம் படைத்தவர்கள், மாடமாளிகைகளைப் பெற்றிருப்பவர்கள், ஆள் அம்பு உடையவர்கள், வசதி படைத்த வாழ்க்கையில் நீந்தி மகிழ்பவர்கள்—இப்படிப்பட்ட நிலையில் உள்ளவர்கள், தங்கள் பிள்ளைகள் அல்லது பெண்களின் கல்லூரிக் கல்விக்காகத் தங்கள் பணத்தைச் செலவிடுவதில் தவறென்ன இருக்கிறது?

பணம் படைத்தவர்கள், பணத்தைச் செலவழித்துக் கல்வியைப் பெறுவதுதானே முறை? அதுதானே நியாயம்—ஒழுங்கு—அறநெறி? கல்வியைப் பெறுவதற்காகப் பணத்தைச் செலவிடத் தயாராக உள்ள அவர்களை—செலவிடுவதற்குத் தேவையான வசதி படைத்த அவர்களை—செலவிட வேண்டிய கடமை படைத்த

அவர்களை, அந்தக் கடமையை ஆற்றுதபடித் தடுத்து நிறுத்த வேண்டிய அவசியம் என்ன ?

"எல்லாப் பிள்ளைகளுக்கும் கல்லூரிக் கல்வி இலவசம்" என்கிற ஏற்பாட்டில் மற்றொரு பேராபத்தும் அடங்கியிருக்கிறது. விருப்பம் உள்ள பிள்ளைகள், விருப்பம் இல்லாத பிள்ளைகள் ஆகிய அனைவர்மீதும் இலவசக் கல்லூரிக் கல்வி என்கிற ஏற்பாடு திணிக்கப்படுமானால், அதன் விளைவாக, அந்த மாணவர்கள்— அவர்களுடைய பெற்றோர்கள் ஆகியோரிற் பெரும்பாலோருக்கு, கல்விப் பொருளின் அருமை தெரியாது போய்விடும். பணம் கொடுத்து வாங்கினால்தான் ஒரு பொருளின் அருமையைப் பலரால் உணரமுடியும். அவ்வாறு இல்லாமல் யாருக்கு வேண்டுமானாலும் அந்தப் பொருள் இலவசமாகக் கிடைக்கும் என்கிற நிலை ஏற்பட்டுவிடுமானால், இலவசமாகக் கிடைத்த பொருள்தானே— இருந்தால் இருக்கட்டும்—போனால் போகட்டும் என்கிற அலட்சிய மனப்பான்மை பலருக்கு ஏற்படுவது இயல்பு. "இனமாய்க் கிடைத்த மாட்டை நிலாவில் (நிலவு ஒளி உள்ள இரவில்கூட) கட்டி ஓட்டு" என்கிற பழமொழி, மறுக்க முடியாத இந்த உண்மையைத்தான் திட்டவட்டமாக எடுத்து விளக்குகிறது.

உயர்நிலைப் பள்ளிகளின் வகுப்புகள் அனைத்திலும் கல்வி இலவசம் என்கிற நிலை ஏற்பட்ட பிறகு, அங்குப் பயிலும் மாணவர்கள் பலரிடமும், அன்னாரின் பெற்றோர்கள் பலரிடமும் இத்தகைய அலட்சிய மனப்பான்மை ஏற்பட்டிருப்பதை நாம் கண்கூடாகக் கண்டு வருகிறோம்.

"பணம் கொடுத்தா பயில்கிறோம்? இலவசக் கல்விதானே! இந்த ஆண்டிலேயே அரும்பாடுபட்டுப் படித்தாகவேண்டும் என்கிற அவசியம் எங்கே இருக்கிறது? இந்த ஆண்டில் தேர்ச்சி பெறவில்லையென்றால் அடுத்த ஆண்டில் தேர்ச்சி பெறுவோமே? என்ன அவசரம் இப்போது!" என்கிற மனப்பான்மை உயர்நிலைப் பள்ளிகளிற் பயிலும் மாணவர்களில் மிகப் பலரிடம் ஏற்பட்டு விட்டிருக்கிறது. மாணவர்களிடம் அத்தகைய மனப்பான்மை ஏற்பட்டிருப்பதில்கூட வியப்பில்லை. பெற்றோர்கள் பலரிடம்கூட ஏறக்குறைய அதே வகை மனப்பான்மை பிறந்து வளர்ந்து ஓங்கி

உயர்ந்து செழித்துப் பொலிகிறது! இதன் விளைவாக. உயர்நிலைப் பள்ளிகளில் அளிக்கப்படுகிற கல்வியின் தரம் பெரிதும் குறைந்து போயிருக்கிறது.

எல்லா மாணவர்களுக்கும் இலவசக் கல்வி என்கிற ஏற்பாடானது, உயர்நிலைப் பள்ளிகளிலிருந்து கல்லூரிகளுக்கும் விரிவு படுத்தப்பட்டால், இங்கே உள்ள தரக் குறைவு அங்கும் படர்ந்து பரவும் என்பதில் ஐயமும் உண்டோ?

இலவசக் கல்வியின் விளைவாக மாணவர்களுக்குக் கல்வியின் மீதுள்ள அக்கறை பெரிதும் குறைந்து போயிருக்கிறது என்பது, வாதத்திற்கு உரிய பொருள் அன்று; கண்ணுக்கு நேராகத் தெரிகிற உண்மை. கையிலே இருக்கிற புண். அதைப் பார்த்துத் தெரிந்து கொள்வதற்குக் கண்ணாடியா வேண்டும்?

இலவசக் கல்வியின் விளைவாக இன்னொரு வகையிலும் கல்வியின் தரம் குறையும். எல்லோருக்கும் இலவசக் கல்வி என்கிற ஏற்பாடு நடைமுறைக்கு வருமானால், அதன் விளைவாகக் கல்லூரிகளிற் சேர விழைகிற மாணவர்களின் எண்ணிக்கை பலமடங்காகப் பெருகிவிடும். அப்படிப் பெருகுகிற மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ற அளவு புதிது புதிதாகக் கல்லூரிகளைத் திறப்பது, அரசாங்கத்திடம் உள்ள பண வசதிக்கு எட்டாத ஒரு செயலாகும். அத்தகைய நிலையில் தற்போது உள்ள கல்லூரிகளிலேயே மாணவர்கள் அளவு கடந்து சேர்க்கப்படுவர்; ஒவ்வோர் ஆசிரியரிடமும் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை எல்லை மீறிப் போகும். அத்தகைய நிலையில் கல்வியின் தரம் குறையாமல் எப்படி இருக்கமுடியும்? இலவசக் கல்வி இல்லாத இன்றைய நிலையிலேயே, ஒவ்வொரு கல்வியாண்டின் தொடக்கத்திலும், கல்லூரிகளிற் சேர விழைகிற மாணவர்களிற் பலர் இடம் கிடைக்காமல் தத்தளிக்கும் சூழ்நிலை இருக்கிறது. இதற்குச் சூழ்நிலையோடுகூட இலவசக் கல்வி என்கிற ஏற்பாடும் இணைந்துவிடுமானால், அதன் பயனாக எத்துணைப் பயங்கரமான இடநெரிசல் கல்லூரிகளில் ஏற்படும் என்பது, சொல்லித் தெரிய வேண்டிய செய்தியன்று.

அரசியல் கட்சிக் கண்ணோட்டம் அல்லது தேர்தலில் வாக்குகளைப் பெறும் கண்ணோட்டத்திலிருந்து கவனிக்காமல், வேறு எந்தக் கண்ணோட்டத்திலிருந்து பார்த்தாலும் சரி, அனைவருக்கும்

இலவசக் கல்லூரிக் கல்வி என்கிற ஏற்பாடு, தேவையற்றது—ஒழுங்கற்றது—தீது பயப்பது—பயன் அற்றது என்கிற உண்மை தெள்ளத் தெளிவாக விளங்கும்.

தற்போது நடைமுறையில் உள்ள "இந்திய அரசியல் திட்டம்" 1950 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 26 ஆம் நாள்முதல் நடைமுறையில் உள்ளது.

இந்தத் திட்டம் நடைமுறைக்கு வந்த பத்து ஆண்டுகள் முடிவதற்குள், ஆறு வயது முதல் பதினோரு வயது வரையுள்ள சிறுவர்—சிறுமியர் அனைவருக்கும் ஆரம்பக்கல்வி கட்டாயமாகவும் இலவசமாக்வும் தரப்படவேண்டும் என்று இந்தத் திட்டத்திலேயே பொறிக்கப்பட்டிருக்கிறது.

இந்த விதிமுறையின்படி 1960 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 26 ஆம் நாளுக்குள் அத்தகைய இலவசக் கல்வியானது, ஆரம்பப் பள்ளி செல்லும் வயதுடைய பிள்ளைகள்—பெண்கள் அனைவருக்கும் தரப்பட்டிருக்கவேண்டும்.

இப்போது நடப்பது 1966 ஆம் ஆண்டு, என்றாலும் அந்தப் பணி இன்னமும் முடிந்த பாடில்லை.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முடிவில் அல்லது ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முடிவில்தான் அந்தப் பணி நிறைவு பெறக்கூடும் என்று கருதப்படுகிறது.

ஆரம்பக்கல்வி அனைவருக்கும் இலவசமாக அளிக்கப்பட வேண்டும் என்பது முற்றிலும் நியாயமான ஒரு கொள்கை. உலகத்தில் உள்ள நாகரிக நாடுகள் அனைத்திலும் அந்தக் கொள்கை முழுமனத்துடன் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தியாவில் இன்னமும் அந்த அடிப்படைக் குறிக்கோளையே முழு அளவில் நிறைவேற்ற முடியவில்லை. ஆரம்பக் கல்வியைப் பெறுவதற்குரிய வயதுடைய பிள்ளைகளிற் பலர், இன்னமும் அந்தக் கல்வியைப் பெறாத சூழ்நிலையில் இருந்து வருகிறார்கள்.

எல்லாப் பிள்ளைகளுக்கும் இலவச ஆரம்பக் கல்வி தரப்படுகிறது என்கிற நிலையை முழுமை அடையச் செய்வதிலேயே இந்திய அரசாங்கங்களின் கவனம் இப்போது செலுத்தப்படவேண்டுமே தவிர, இலவசக் கல்லூரிக் கல்வி என்கிற வாணவேடிக்கையை நடத்துவதில் அல்ல.

இந்தப் பிரச்சினையை நடுநிலையிலிருந்து அலசி ஆராய்ந்து பார்க்கும் எவரும் இந்த முடிவுக்குத்தான் வரமுடியும்.

மகாகவி பாரதியார்

வே. கபிலன்

இருண்டு கிடந்த சமுதாயத்திற்கு விடிவெள்ளியாக விளங்கியவர்; அஞ்சி அடங்கிக் கிடந்த மக்களுக்கு 'அஞ்சாமை' என்னும அதிகாரத்தை நீட்டி ஆங்கிலேயரை மருள வைத்தவர்; ஆண்டாண்டு காலம் கூனிக் குறுகி ஒரு தேசத்தில் இருப்பதைவிட ஒரே ஒரு நிமிடமாவது நிமிர்ந்து நின்று செத்துப்போவது மேல் என்னும் தத்துவத்தை முரசாக்கி முழங்கியவர்; சமூக பழக்க வழக்கங்களிலிருந்த குப்பைகளைக் களைந்தெறிய முழு முயற்சி எடுத்துக்கொண்டவர்; இவ்வளவுக்கும் மேலாக எதிர்காலப் பலனை நிகழ்காலத்தில் கண்டு சுவைத்தவர்; பிறரையும் சுவைக்க வைத்தவர். ஆம்; அவர் தான் மகாகவி சுப்பிரமணிய பாரதியார்.

பாரதியார் ஓர் தீர்க்கதரிசி !

உலகக் கவிஞர்களையும், அவரவருடைய பாடல்களையும் முறையாகக் காண்போமானால் அவர்களைவிட பாரதியார் எவ்வளவு பெரிய தீர்க்கதரிசி என்பது புரிந்துவிடும். ஷெல்லியும் மில்டனும், ஹோமரும் தாந்தேவும் மிகமிகச் சாமான்யமான கவிஞர்களல்ல...எழுத்தாற்றலும் சொல்லாற்றலும் மிக்கவர்கள்... கருத்தும் கற்பனையும் குழைந்த கவிதைகளை வடித்துத் தருவதில் வல்லவர்கள். ஆனாலும் பின்னால் நடக்கப்போகின்ற ஒன்றை முன்னாலேயே கூறும் ஆற்றல் மட்டும் அவர்களுக்கு இல்லை...ஆனால் பாரதியார் அப்படியல்லர். இந்தத் தேசம் அடிமைப்பட்டு, கண்ணீரும் கம்பலையுமாக இருந்த காலத்தில், 'இனி நம் தேசத்துக்கு விமோசனமில்லை!'' என்று மிகப் பலர் அழுத்தமான உறுதியோடு உலவிக்கொண்டிருந்த தருணத்தில், '**ஆடுவோமே, பள்ளுப்பாடுவோமே, ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று !'** எனப் பாடியவர்; பெறப்போகும் வெற்றியைப் பெற்றுவிட்டதாகக் கருத்திற்கொண்டு, '**வெற்றி எட்டுத் திக்குமெட்டக் கொட்டு முரசே!'** என்று குதூகலித்தவர். இப்படி அறிந்து எழுதும் ஆற்றல் அவரைத் தவிர வேறு எவருக்கும் இந்த நூற்றாண்டைப் பொறுத்தவரையிலும் இருந்தது கிடையாது...

பாரதியார் வாழ்ந்த காலத்தில் நமக்குள் இருந்து வந்த ஜாதிப் பூசலும் சமயப் பூசலும் கொஞ்சமல்ல! ஜாதியின் பேராலும், சமயத்தின் பேராலும் ஒருவரையொருவர் பகைத்துக்கொண்டு வாழ்ந்தனர். இம்முரண்பட்ட வாழ்க்கையைப் புரிந்துகொண்ட அன்னியர் சமாதானப் போர்வையில் நம்மவரிடையே கலந்து பகையை முற்றவிட்டு வேடிக்கை பார்த்தனர். இந்த அநீதியான போக்கைக் கண்ட பாரதியார்,

"ஆயிர முண்டிங்கு ஜாதி-
எனில்
அன்னியர் வந்து
புகலென்ன நீதி?-ஓர்
தாயின் வயிற்றிற் பிறந்
தோர்-தம்முட்
சண்டை செய்தாலும்
சகோதரரன்றோ?"

என்று எழுதி, அன்னியர் தலையீட்டைத் தரைமட்டமாக்கினார். தேசம் பெற்றுத் தீரவேண்டிய விடுதலைக்கு எது முக்கியம் என்பதை ஆணித்தரமாக எழுதினார்; ஏன்? எச்சரித்தார் என்றுகூடச் சொல்லலாம். ஆம்,

"ஒன்று பட்டா லுண்டு
வாழ்வே-நம்மில்
ஒற்றுமை நீங்கி லனைவர்க்
கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல்
வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்
கெது வேண்டும் ?

என்று கேள்வி கேட்டு நம்மை விடைகாண வைத்தவர். அந்த விடையின் பயன்தான், இன்று நாம் அடைந்துள்ள சுதந்திரமும் ஒற்றுமைச் சூழலும்! இவ்வொற்றுமை எண்ணம் நம்மிடையே வளராமல் போயிருக்குமேயானால் நாம் இன்னமும் எடுப்பார் கைப்பிள்ளையாகத்தான் இருந்திருப்போம். எனவே, பாக்களின் வாயிலாக நீதிக்கும் அநீதிக்கும் இலக்கணம் கண்டு புதுமையான ஓர் உலகத்தைச் சிருஷ்டிக்க துடியாய்த் துடித்து நின்றவர். அது மட்டுமல்ல, பாரத நாட்டின் மகிமையை, 'வைப்புமுறை' வகையிலே வடித்தவர்.

பாருக்குள்ளே பாரத நாடு-

நம்முடைய பாரத தேசம் ஞானத்திலும், பரமோனத்திலும், உயர்ந்த மனப்பான்மையிலும், அறஞ்செய்வதிலும், அருங்கவி புனைவதிலும்,

தீரத்திலும், படைக்கலன்களிலும், ஈரம் மிகுந்த நெஞ்சிலும், பிறருக்கு உபகாரம் புரிவதிலும், சாத்திரம் காண்பதிலும், ஆக்கத்திலும், தொழில் ஊக்கத்திலும், உயர் நோக்கத்திலும்,

வண்மையிலும் உள்ளத் திண்மையிலும், மதிநுண்மையிலும், உண்மையில் தவறாத புலவர்களிலும், நல்லுணர்விலும், மாதர் தம் கற்பிலும்,

யாகஞ் செய்வதிலும், தவவேகங் கொள்வதிலும், தனிமை யோக நிஷ்டையிலும், பல்வேறு வகையான போகங்களிலும் தலைசிறந்தது பாரத நாடு என்பதை,

"பாருக்குள்ளே நல்ல நாடு-
எங்கள்
பாரத நாடு"

என்னும் பல்லவியின்கீழ்த் தொகுத்தளித்து உள்ளார்.

சுதந்திர பூமியில் பாரதியார் காண விரும்பிய காட்சிகள், நம்முடைய கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிப்பனவாகும். 'வெள்ளிப் பனிமலையின் மீதுலவுவோம்;—அடி, மேலைக் கடல் முழுதுங் கப்பல் விடுவோம்! எனத் தொடங்கும் பாடலில் அவரது விருப்பங்கள் வெள்

ளிடை மலையெனத் தெரிகின்றன.

"புதுப் புது பள்ளிகளையும் கோயில்களையும் உண்டாக்குவோம்; சிங்களத் தீவுக்கு ஒரு பாலம் அமைத்து, அதில் சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்; வங்கத்தில் விரைந்து ஓடி வரும் நீரைத் தேக்கி, அண்மையிலுள்ள நாடுகளிலெல்லாம் பயிர் செய்யலாம்; பூமிக்குள் புதைந்திருக்கும் கனிச் செல்வங்களை வெட்டி எடுப்போம். அம்மட்டுமல்ல, வேறுபொருள்களையும் குடைந்தெடுப்போம்; அவற்றை எட்டுத் திசைகளிலும் சென்று விற்று குறைவற்ற செல்வத்தைக் கொண்டு வருவோம்;

பட்டாலும் பஞ்சினாலும் நெய்யப்பட்ட ஆடைகளை வீதியில் குவிப்போம். அதனை, பொற்கட்டிகளைக் கொண்டுவரும் வாணிகருக்கு விற்று வளத்தைப் பெருக்குவோம்; ஆயுதங்கள் செய்வோம்; நல்ல காகிதங்கள் செய்வோம்; பல்வேறு வகையான ஆலைகளை உண்டாக்குவோம்; கல்விச் சாலைகளை நிர்ணயிப்போம்; ஓயாமலும் சோர்வினால் சாய்வு கொள்ளாமலும் உண்மைகள் சொல்வோம்!

குடைகள் செய்வோம்; உழு படைகள் செய்வோம்! கோணிகள் செய்வோம்; இரும்பாணிகள் செய்வோம்! வண்டிகள் செய்வோம்; உலகம் நடுங்கும் படியாகக் கப்பல்கள் செய்வோம்!

மந்திரம் கற்போம் வினைத் தந்திரம் கற்போம்! வானை அளப்போம்; விண்மீனை அளப்போம்! சந்திர மண்டலப் பகுதியைக் கண்டு தெளிவோம்" என்றெல்லாம் சொல்லிவிட்டு, இறுதியாக,

"காவியஞ் செய்வோம்;
நல்ல காடு வளர்ப்போம்
கலை வளர்ப்போம்; கொல்ல
ருலை வளர்ப்போம்
ஓவியம் செய்வோம்;
நல்ல ஊசிகள்
செய்வோம்
உலகத் தொழிலனைத்து
முவந்து செய்வோம்!"

என, அப் பாடலை முடிக்கிறார்.

அவர் இந்தப் பாடலைப் பாடி எத்தனையோ ஆண்டுகள் ஆகின்றன... அடிமை பூமியில் வெறும் கருத்துக்களாக விளங்கிய அவரது எண்ணங்கள், இன்றைய சுதந்திர பூமியில் செயல்களாக விளங்கி வருவதைக் காண்கிறோம். இதுமட்டுமல்ல பாரதியார் பாடலில் வீரச்சுவை மிகுந்து காணப்படுவதை ஓரிரண்டு பாடல்களிலல்ல, பரவலாகவே நாம் கண்டு மகிழலாம். ஒரு தேச பக்தன் ஆங்கில ஆட்சிக்கு, அதாவது, ஓர் ஆங்கிலேயனுக்கு அறைகூவல் விடுப்பது போல் அமைந்துள்ள பாடல்களின் வாயிலாகக் காணலாம்.

"சொந்த நாட்டைப் பிறர்க்
கடிமை செய்தே
துஞ்சிடோம்; இனி—
அஞ்சிடோம்;
எந்த நாட்டினு
மிந்த அநீதிகள்
ஏற்குமோ? தெய்வம்—
பார்க்குமோ?"

என்று தொடங்கும் அந்தப் பாடலை முழுவதும் பார்த்தோமானால் அவருக்கிருந்த வீர வுணர்வும், அவர் நாட்டு மக்களிடையே காண விழைந்த வீர வுணர்ச்சியும் தெளிவாகும். 'ஏ, வெள்ளையனே! நாங்கள் முப்பது கோடி ஜனங்களும் நாய்களா? பன்றிச் சேய்களா? நீங்கள் மட்டும் மனிதர்களோ? எங்கள் சதைகளைத் துண்டு துண்டாக்கினாலும் உன் எண்ணம் சாயுமோ? ஜீவன் ஓயுமோ?' என்று நேரில் நிறுத்திக் கேட்பது போல் கவிதை புனைந்திருப்பது அவரது வீரம் செறிந்த வெற்றிக் கவிதை நடைக்கு ஓர் எடுத்துக் காட்டாகும்.

பொதுவாகச் சொல்லப் போனால் அவரது ஒவ்வொரு பாடலும் மனித சமுதாய முன்னேற்றத்துக்குரியது. பறையருக்கும் புலையருக்கும் விடுதலை காண விழைந்தது; ஏழையென்றும் அடிமையென்றும் எவனுமில்லை ஜாதியில் என்று முழங்கியது; இழிவு கொண்ட மனிதராக இந்தியாவில் ஒருவரும் இருத்தலாகாது! என்று உணர்த்தியது; 'மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்!' என்று கூறியதோடு நில்லாமல், 'ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமமாக இருக்கவும் விரும்பியது; தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோமெனக் கட்டளையிட்டது; பாரத மக்களிடையே மலிந்து போயிருந்த கோழைத் தனத்தையும், மூடப் பழக்க வழக்கங்களையும் சாகடிக்கப் பணிபுரிந்தது; புதுமைப் பெண் கண்டது; புரட்சியைச் சமைத்தது; பெண்மை வாழ்க வென்று கூத்தாடியது; தமிழினிமையை விரித்தது; கண்ணனைக் கண்டது; கண்ணம்மாவைக் காதலியாகக் கொண்டு பூஜித்தது; பராசக்தியை வேண்டியது; வேதாந்தத்தை விளக்கியது; புதிய ஆத்திச் சூடியின் மூலம் புதுமையைக் காணத் துடித்தது; குழந்தைக்கு அறிவுறுத்தியது; வெற்றி முரசம் காண விழைந்தது; குயிலோடு குலவியது; பாஞ்சாலி சபதத்தை சிருஷ்டித்தது; தேசத் தலைவர்களை வாழ்த்தி வணங்கியது...

இப்படி, தேசத்துக்காகவும் தேச மக்கள் பெற்றுத் தீர வேண்டிய மறுமலர்ச்சிக்காகவும் உயிர்—பொருள்—உடைமை அனைத்தையும் கவிதை ரூபத்தில் ஒப்படைத்துப் பணிபுரிந்த மக்கள் கவிஞரை, 'மகா கவி' என்றும், 'மக்கள் கவி' என்றும், 'கவிஞருக்குக் கவிஞர்' என்றும் சொல்வது பொருந்தாமல் போகுமோ? எனவே, அத்துணைச் சிறப்புக்குரிய பாரதியைப் போற்றித் துதித்து, அவர் காட்டிய புதுமைக்கு வழிகோலும் நம்முடைய அரசாங்கத்துக்கு நம்மாலான வகையில் பணிபுரிய இந்நாளில் சூளுரை எடுத்துக் கொள்வோமாக!

செய்திச் சுருள்

கேரளத்தில் ஆண்டுத் தேர்வுப் பரீட்சை எடுபடும்

மாணவர்களின் தகுதியை மதிப்பிட்டு அபிவிருத்தி செய்யப் புது ஏற்பாடு

திருவனந்தபுரம், ஆக. 26— பள்ளிகளில் இறுதித் தேர்வு பரீட்சைகளை எடுத்துவிடலாமென கேரள சர்க்கார் உத்தேசித்துள்ளனர்.

இதை முதலில் ஹைஸ்கூல்களில் நடத்திப் பார்ப்பார்கள்.

இந்தப் புதிய திட்டத்தின்படி ஒவ்வொரு மாதத்துக்கும் ஒரு போதனைத் திட்டம் வகுக்கப்படும். ஒவ்வொரு மாத முடிவிலும், ஒவ்வொரு பாடத்திலும் பரீட்சை வைத்து மாணவரின் முன்னேற்றம் பற்றி சோதித்தறியப்படும். இந்தப் பரீட்சையில் போதிய தகுதி பெறாத மாணவர்களுக்கு, பள்ளி நேரத்துக்குப் பின் தனியாகச் சொல்லித் தந்து இரண்டாம் முறை பரீட்சை எழுதச்சொல்வார்கள். அம்முறையும் தகுதி பெறாவிட்டால் மூன்றாம் முறை சொல்லிக் கொடுத்து பரீட்சைக்குத் தயார் செய்வார்கள்.

இவ்விதம் சோடையான மாணவர்களின் தரம் உயர்த்தப்பட்டு, வருஷக் கடைசியில் இறுதித் தேர்வுப் பரீட்சையின்றி எல்லா மாணவர்களும் அடுத்த வகுப்புக்கு அனுப்பப்படுவார்கள்.

ஆசிரியர்களின் சம்பளத்தை உயர்த்தக் கல்வி "செஸ்": அமைச்சர் சக்ளா யோசனை

புதுடில்லி, ஆக. 13—கல்விக் கமிஷன் சிபாரிசுகளை அமலாக்குமாறும், அவசியமானால் 'செஸ்' விதித்து ஆசிரியர்களின் வருவாயை அதிகரிக்குமாறும் ராஜ்யங்களைக் கேட்டுக் கொள்ளப் போவதாக இன்று ராஜ்ய சபையில் கல்வி மந்திரி சக்ளா கூறினார்.

ஒரு கவன ஈர்ப்புப் பிரேரணை நோட்டீசுக்குப் பதிலளிக்கையில், ஆசிரியர்களிடம் தான் அனுதாபம் கொண்டிருப்பதாக மந்திரி கூறினார். ஆனால், கல்வி ராஜ்யப் பொறுப்பில் உள்ள விஷயம். ஆசிரியர்களின் சம்பளங்களை உயர்த்தக் கேட்கும் போதெல்லாம் தங்களிடம் வசதி இல்லாததால் அதைச் செய்ய முடியவில்லை என ராஜ்யங்கள் கூறுவதாகவும் அவர் சொன்னார்.

நாட்டின் பல்வேறு பாகங்களில் உள்ள சர்க்கார் பள்ளிகளிலும், மற்ற ஸ்தாபனங்களிலும், வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு ஒரே மாதிரி சம்பள விகிதமளிக்க ராஜ்ய நாராயண் கோரினார். நாடு முழுவதிலும் மாதிரி சம்பள விகிதம் சாத்யமல்ல என்று மந்திரி பதிலளித்தார்.

சட்டம் உரிமைகளின் காவலரண்

புதுடில்லி, இந்தியச் சட்டக் கழகத்தில் அண்மையில் யு. எஸ். சுப்ரீம் கோர்ட் நீதிபதி ஸ்டீவர்ட் நிகழ்த்திய உரையிலிருந்து சில பகுதிகள் வருமாறு :

“பேச்சுச் சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரம், சங்கம் சேரும் சுதந்திரம் ஆகியவை எல்லா உரிமைகளுக்கும் அடிப்படை என்பது அமெரிக்க சட்டத்தின் முடிபு. கருத்துச் சுதந்திரம், கிட்டத்தட்ட மற்றெல்லாவகைச் சுதந்திரத்துக்கும் இன்றியமையாத அடிப்படை நிபந்தனையாகும் என்று நீதிபதி கார்டோஸா தமக்கேயுரிய நயமான முறையில் கூறியுள்ளார். “மக்கள் எங்கு தங்களது சிந்தனைகளைத் தாராளமாக ஒருவர் மற்றொருவருக்குத் தெரிவிக்க முடியாதோ, அங்கு வேறு எந்த உரிமையும் பத்திரமாக இராது. கருத்துச் சுதந்திரம் எங்கு இருக்கிறதோ, அங்கு உரிமையுள்ள சமுதாயத்துக்குரிய வித்து ஏற்கனவே உண்டு; உரிமை எல்லா வகைகளிலும் வளர்வதற்கு அங்கு வழி இருக்கிறது” என்ற தெளிவான உண்மையை அவரது வாக்கு புலப்படுத்துகிறது.

கருத்து வெளியிடுவது கட்டுப்படுத்தப்படுவது குறித்துக் குறிப்பாக எங்கள் நீதிமன்றங்கள் விழிப்புடன் இருக்கின்றன. தனி நபர் ஒருவரை அவரது பேச்சுக்காகத் தண்டிக்குமுன்பு, அரசாங்கத்தின் நலன் எவ்வாறு பாதிக்கப்படுகிறதென்று தெளிவாகக் காட்ட வேண்டும்.

கருத்துச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துவது நியாயமே என்று புலப்படுத்த எங்கள் அரசியல் சட்டம் அரசாங்கத்தின்மீது பெரும் பொறுப்பைச் சுமத்துகிறது; அண்மையில் நடந்த ஒரு வழக்கு இதைத் தெளிவாக்கும்.

எட்வர்ட்ஸ்–தென் கரோலினா வழக்கில், நீக்ரோ உரிமைகளைத் தாங்கள் ஆதரிப்பதைக் காட்டுவதன் பொருட்டு, மாணவர்கள் 187 பேர் மாநிலச் சட்டமன்றக் கட்டடத்தின் முன்பு அமைதியாக மறியல் செய்தனர். போய்விடுமாறு போலீஸ் கூறியது; அவர்கள் மறுக்கவே, அவர்கள் கைது செய்யப்பட்டு, அமைதியைக் குலைத்ததற்காகத் தண்டிக்கப்பட்டனர். “மறியல் செய்வது அமைதியைக் குலைக்கிறது.” எவ்வாறெனில் அது பார்ப்பவர்களிடையே கோபத்தைத் தூண்டுகிறது. பொதுத் தகராறை வரவழைக்கிறது; அல்லது அமைதியற்ற நிலைமையைத் தோற்றுவிக்கிறது” என்பது தென் கரோலினா அரசாங்கத்தின் வாதம். சுப்ரீம் கோர்ட் அத்தண்டனையை

ரத்து செய்தது; அதன் தீர்ப்பு வருமாறு:

"பிடித்தமில்லாத கருத்துக்களை அமைதியாக வெளியிடுவதைக் குற்றம் என்று அரசாங்கம் அறிவிப்பதற்கு நாலாவது திருத்தம் இடம் கொடுக்கவில்லை. நமது அரசாட்சி முறையின்கீழ் பேச்சுரிமையின் நோக்கமே தகராறு ஏற்படுத்துவதுதான். அமைதியற்ற ஒரு நிலைமையைத் தூண்டும்போது, நடப்பிலுள்ள நிலைமைகள் குறித்து அதிருப்தி ஏற்படுத்தும்போது அல்லது மக்களிடையே கோபம்கூட ஏற்படுத்தும்போதுதான் அந்நோக்கம் நன்கு கைகூடுவதாக இருக்கலாம். பேச்சு பெரும்பாலும் ஆத்திரமூட்டுவதாகவும் அறைகூவல் விடுப்பதாகவுமே இருக்கிறது. தப்பெண்ணங்களை அது வலுவுடன் வலியுறுத்துகையில் நிலையில்லாத பெரும் விளைவுகளை ஏற்படுத்தலாம். எனவேதான், பொது அசௌகரியம், எரிச்சல் அல்லது அமைதியின்மை... இவற்றையெல்லாம் மிகவும் மிஞ்சிய மோசமான, உண்மையான தீங்கு ஏற்படுத்தக்கூடிய ஆபத்து விளையலாம் என்று தெளிவாகப் புலப்படுத்தினால் ஒழிய பேச்சுச் சுதந்திரத்துக்கு ··· தணிக்கை அல்லது தண்டனையினின்றும் பாதுகாப்பளிக்கப் பட்டுள்ளது."

சங்கம் சேரும் உரிமை

கருத்துக்களைப் பலனுள்ளவை யாக்குவதன் பொருட்டு, மற்றவர்களுடன் சங்கம் சேர்வதும், குழுக்கள் திரட்டுவதும் கருத்துச் சுதந்திரத்தில் அடங்கும் என்பது எங்கள் நீதிமன்றத்தின் முடிவு. பல ஆண்டுகளுக்கு முன்பு, அர்க்கான்ஸாஸ் மாநிலச் சட்டம் ஒன்று எங்கள் முன்பு கொண்டு வரப்பட்டது. பள்ளி ஆசிரியர்கள் அனைவரும் தாங்கள் எந்தெந்தச் சங்கங்களில் சேர்ந்துள்ளனர் என்று தெரிவிக்க வேண்டும் என்று விதித்தது, அந்தச் சட்டம்.

அர்க்கான்ஸாஸ் ஒரு தென் மாநிலம். அங்கு வெள்ளையரல்லாதார் முன்னேற்ற (என். ஏ. ஏ. ஸி. பி.) சங்கத்துக்கு எதிரான பகைமையுணர்ச்சி உண்டு. நீக்ரோக்களின் உரிமைகளுக்காகப் பாடுபடும் சங்கம் இது. தாம் இதன் உறுப்பினர்கள் என்று வெளியிடுவது ஆசிரியர்கள் பலருக்குப் பல இன்னல்கள் விளைவித்திருக்கும்; ஒரு வேளை, அவர்கள் வேலையிழந்திருக்கவும் கூடும்.

ஆசிரியர்கள் தாம் சேர்ந்துள்ள சங்கங்களின் பெயர்களைத் தெரிவிக்க வேண்டுமென விதிப்பது அரசியல் சட்டத்துக்கு விரோதமானது; ஏனெனில் அது அவர்களது சங்கம் சேரும் சுதந்திரத்தில் குறுக்கிடுகிறது. இந்த உரிமை, முதல் அரசியல் திருத்தம் உத்தரவாதமளிக்கும் கருத்துச் சுதந்திரத்தின் ஒரு பகுதியாகும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

நியாயமின்றி உரிமைகளுக்குத் தடைகள் விதிப்பதைத் தடுப்பதோடு நீதிமன்றம் நின்று விடுவதில்லை; தடுப்பதற்கு நியாய

மான காரணம் காட்டும் பொறுப்பை அரசாங்கத்தின் மீது சுமத்துவதன்மூலம் உரிமைகளைப் பாதுகாக்கவும் செய்கிறது என்பதை மேற்சொன்ன வழக்குகள் புலப்படுத்தும்.

பத்திரிகைச் சுதந்திரம்

பத்திரிகைச் சுதந்திரம் சம்பந்தப்பட்ட ஓர் உதாரணம்; நியூயார்க் டைம்ஸ்-ஸலிவன் வழக்கில், ஒரு பத்திரிகை வேண்டுமென்ற கெட்ட எண்ணத்துடன் அரசாங்க அதிகாரி ஒருவரைப் பற்றித் தீமையான, பொய்யான தகவலை வெளியிட்டது என்று புலப்படுத்தினால் ஒழிய, அதை அவதூறுக் குற்றத்துக்குள்ளாக்க முடியாது என்று அண்மையில் சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளித்தது. ஒரு குறிப்பிட்ட காரியத்துக்குப் பண உதவி தேவை என்று கேட்டு "நியூயார்க் டைம்ஸ்" ஒரு விளம்பரம் வெளியிட்டது. விளம்பரத்தில் கண்ட சில தகவல்கள் தவறானவை. அலபாமா மாநிலத்தில் மாண்ட்கோமரி நகரிலுள்ள ஸலிவன் என்னும் ஒரு போலீஸ் கமிஷனர், விளம்பரத்தால் தமக்கு அவதூறு ஏற்பட்டுவிட்டதாகக் கூறி, மானநஷ்ட வழக்கு தொடுத்தார். அவருக்கு 5 லட்சம் டாலர் கொடுக்க வேண்டுமென்று கீழ்க்கோர்ட்டில் தீர்ப்பாயிற்று.

எங்கள் நீதிமன்றம் அந்தத் தீர்ப்பை ரத்து செய்தது. விளம்பரம் வெளியிட்டவருக்குக் கெட்ட எண்ணம் உண்டு என்று ருசுப்பிக்கப்படாததால் அரசாங்க அதிகாரி அவதூறு வழக்குத் தொடர்ந்து, நஷ்டஈடு பெற முடியாதென்பது எங்கள் நீதிமன்றத்தின் முடிவு. தவறான தகவல்கள் காரணமாக, அரசாங்க அதிகாரிகளுக்கு ஓரளவு தீங்கு நேரிட இந்தத் தீர்ப்பு வகை செய்யக் கூடுமெனினும் பத்திரிகைகள் சுதந்திரமாகக் குறைகூற அவற்றிற்குள்ள அரசியல் சட்ட உரிமையையும் இது பாதுகாக்கும்.

குடிமக்களில் ஒவ்வொருவரும் தம் மனத்திலுள்ளதை வெளியில் சொல்லவும், பொது அக்கறையுள்ள விவகாரங்கள் குறித்து எல்லாப் பத்திரிகைகளும் தம் கருத்துக்களைத் தெரிவிக்கவும் எங்கள் அரசியல் சட்டம் உரிமையளிக்கிறது. ஒரு பேச்சு அல்லது எழுத்து விவேகமற்றது, நியாயமற்றது என்று அரசாங்கத்திலுள்ளோர் நினைக்கிறார்கள் என்பதற்காக யாரையும் பேசவிடாமலோ, பத்திரிகைகளில் எழுதவிடாமலோ தடுக்க முடியாது.

கருத்துச் சுதந்திரம் பற்றிய எங்கள் இலட்சியத்தை ஜான் ஸ்டுவேர்ட்மில் சிறப்பாக எடுத்துரைத்துள்ளார். "ஒருவனைத் தவிர மக்கள் குலம் முழுதும் ஒரு கருத்துடையதாக இருந்து, ஒரே ஒருவர் மட்டும் மாறுபட்ட கருத்துடையவராக இருக்கிறாரென்றாலும், அந்த ஒருவருக்கு மக்கள் குலம் வாய்ப்பூட்டுப்

போடுவது நியாயமாகாது; எவ்வாறு அந்த ஒருவரிடம் அதிகாரமிருந்து அவர் மக்கள் குலத்துக்கு வாய்ப்பூட்டுப்போடுவது நியாயமாகாதோ. அப்படித்தான் நாம் ஒடுக்க முற்படும் கருத்து தவறானது என்று நாம் ஒரு போதும் உறுதிகொள்ள முடியாது; நாம் உறுதிகொண்டிருந்தாலும், மாற்றுக் கருத்தை ஒடுக்குவது நிச்சயம் தீமையானதே... ஒருவர் செய்வது தவறு என்றால் அதனால் உண்மைக்கே அதிக லாபம்...

மத சுதந்திரம்

எங்களது உரிமைப் பத்திரத்தில் இயற்றப்பட்டுள்ள முதல் திருத்தம், மத சுதந்திரமும் வழங்குகிறது. மத வழிபாட்டில் குறுக்கிடுவதை அது தடை செய்கிறது. அரசாங்கம் ஒரு மதத்தை நிலைநிறுத்துவதையும் அது தடுக்கிறது. மதம் வேறு; அரசாங்கம் வேறு. எந்த ஒரு மதத்துக்கும் அரசாங்கம் உதவ முடியாது; அதுபோலவே எந்த மதத்துக்கும் இடையூறு செய்ய முடியாது.

"மதத்தை நிலைநிறுத்துவது" என்ற கருத்துப் பற்றி நீதிமன்றம் ஆராய வேண்டும் என்று கூறும் இரு வழக்குகள் அண்மையில் எங்கள் நீதிமன்றத்துக்கு வந்தன. நியூயார்க் மாநிலப் பள்ளிக்கூட அதிகாரிகள் எழுதிய ஒரு பிரார்த்தனை பற்றியது ஒன்று; மற்றொன்றில் மேரிலாந்து, பென்ஸில்வேனியா மாநிலங்களிலுள்ள பள்ளிகள் சம்பந்தப்பட்டிருந்தன. ஒரு கிறிஸ்தவப் பிரார்த்தனையுடன் வகுப்புகள் தொடங்குவது பற்றியது இது.

இவற்றிலும் முந்திய வழக்குகளிலும் எங்கள் நாடு மத நம்பிக்கையுள்ள நாடு என்று நீதிமன்றம் ஒப்புக்கொண்டுள்ளது. நீதிமன்றம் கூறிற்று: "கடவுள் ஒருவர் உண்டு; மனிதனது பிறப்புரிமைகளை அருளியவர் அவரே என்று நமது முன்னோர்கள் நம்பினர் என்ற உண்மை அவர்களது எழுத்துக்களில் — மே பிளவர் ஒப்பந்தம் முதல் அரசியல் சட்டம் முடிய - தெளிவாக இடம் பெற்றுள்ளது. மனித வரலாறு, மத வரலாற்றினின்றும் பிரிக்க முடியாதது "நாம் மதநம்பிக்கையுள்ள மக்கள்; எல்லாம் வல்ல இறைவன் ஒருவன் உண்டு என்ற கோட்பாட்டில் பிறந்தவையே நமது அமைப்புகள்" என்று முந்திய வழக்கு ஒன்றில் நீதிமன்றம் ஒப்புக்கொண்டிருந்தது.

மதக் கல்வி கற்பித்து, மத வழிபாடுகள் நடத்தும் மதப் பள்ளிகள் உள்படத் தனியார் பள்ளிக்கூடங்களுக்குத் தம்குழந்தைகளை அனுப்பப் பெற்றோருக்கு உரிமை உண்டு என்பது நெடுங் காலமாக ஒப்புக்கொள்ளப்பட்டு வந்துள்ள ஒன்று. ஆனால் பொதுப்பள்ளிகளில் விவிலிய நூலிலிருந்து பிரார்த்தனைகளும் வாசிப்புகளும் நடத்தலாகாது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இந்தப் பழக்கங்கள் முத

லாவது, பதினாலாவது திருத்தங்களுக்கு முரணானவை என்பது நீதிமன்ற முடிவு.

எங்கள் நாட்டு மக்கள் பல் வேறு மதங்களைச் சார்ந்தவர்கள். மதம் வேறு அரசாங்கம் வேறு என்று பிரித்து வைத்திருப்பதால், எங்கள் சமுதாய வாழ்வில் அனைவரும் முழுப்பங்கு கொள்ள முடிகிறது.

இவ்வாறு பிரிந்திருப்பது, மத ஒடுக்கு முறையைத் தடுப்பதோடு மட்டுமல்ல, மைனாரிட்டி (சிறுபான்மை) மதங்களைச் சேர்ந்தவர்களுக்கு விதிக்கப்பட்ட தடைகளை நீக்குவதோடு மட்டுமல்ல, தேசிய ஒருமைப்பாட்டை அது வளர்க்கவும் செய்கிறது. பல மதத்தவர்களிடையேயும், பலவகைப் பண்பாடுள்ளவர்களிடையேயும் சகிப்புத் தன்மையையும் நல்லுறவையும் அது வளர்க்கிறது.

எங்கள் அரசியல் சட்டம் தனி நபர்களுக்கு வழங்கும் மற்ற உரிமைகளையும், சிறுபான்மையோர் உரிமைகளையும் பாதுகாக்குமாறு நீதிமன்றத்துக்கு முறையீடுகள் வந்ததுண்டு. நான் இரண்டை இங்கே கூறுகிறேன்.

எங்கள் முன்வந்த பல வழக்குகள் குடியுரிமைகள் பற்றியவை. இந்த நாட்டிலேயே பிறந்த குடி மக்களை ஒருவிதமாகவும், குடியேறி குடியுரிமை பெற்றவர்களை வேறு விதமாகவும் நடத்தக் கூடாது என்று இரு ஆண்டுகளுக்கு முன்பு நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இவ்வாறாக குடியேற்ற உரிமை பெற்ற ஒருவர் தாம் பிறந்த நாட்டில் தொடர்ந்து மூன்றாண்டுகள் தங்கினால் அவருக்கு அமெரிக்காவில் குடியுரிமை கிடையாதென்ற சட்டம் அரசியல் சட்டத்துக்கு விரோதமானதென்று தீர்ப்பாயிற்று. ஏனெனில், அமெரிக்காவில் பிறந்த ஒருவர் எவ்வளவு நாள் வெளிநாட்டில் வாழ்ந்தாலும் அவருக்குத் தடையேதும் விதிக்கப்படுவதில்லை என்பதை நீதிமன்றம் சுட்டிக்காட்டியது. இருவகைக் குடிமக்களுக்கும இடையேயுள்ள ஒரே ஒரு வேற்றுமை - இது அரசியல் சட்டத்திலேயே இடம் பெற்றுள்ளது – அமெரிக்காவில் பிறந்த பிரஜை ஒருவர் தாம் நாட்டு ஜனாதிபதியாக முடியும் என்பதே.

இறுதியாக, நீதிபதி பிராண்டிஸ் தலையாய உரிமை என்று கருதிய ஒரு உரிமை பற்றிய பல் வழக்குகள் எங்கள் நீதிமன்றத்துக்கு வந்ததுண்டு. "தனித்திருக்கும் உரிமை – உரிமைகளில் எல்லாம் மிகப் பெரியது; நாகரிக மக்கள் மிகவும் மதிக்கும் உரிமை" என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார். நாலாவது திருத்தம் ஓரளவுக்கு இந்த உரிமைக்கு உத்தரவாதமளிக்கிறது; "நியாயமற்ற சோதனைகள், பறிமுதல்கள்" அனைத்தையும் தடுக்கும் ஏற்பாடு அதில் உண்டு.

அரசாங்கத் தலையீடு

எமது முன்னோர்கள் கனவு கூடக் கண்டிருக்காத வகையில்

அரசாங்கம் பெரும் அளவுக்கு விரிவாகச் செயல்படும் ஒரு காலத்தில் நாங்கள் அமெரிக்காவில் வாழ்கிறோம். இதுபோன்ற சமுதாயத்தில் தனி மனிதன் வாழ வேண்டுமானால், அரசாங்கத்தின் ஈவிரக்கமற்ற குறுக்கீடுகளினின்றும் அவனுக்குப் பாதுகாப்பு வேண்டும். பெரும்பான்மைச் செல்வாக்கு புக முடியாத புகலிடங்கள் வேண்டும். ஒன்றைத் தனி நபரின் முழு வாழ்வுக்கு மட்டும் ஆக்கமளிக்கவில்லை; எங்கள் சமுதாயம் முழுவதற்கும் அது வலுவூட்டுகிறது; மாறவும், வளரவும், மறுமலர்ச்சி பெறவும் அதன்மூலம் நிலைபேறு பெறவும் அது வாய்ப்பளிக்கிறது.

அமெரிக்காவில் தனிநபர் - சிறுபான்மையினர் உரிமைகளைப் பாதுகாக்கும் சில பிரச்னைகள் பற்றி நான் எடுத்துரைத்துள்ளேன். இவை எமக்கு முக்கியமானவை. ஏனெனில நாங்கள் ஒரு கூட்டாட்சி முறையின் கீழ் வாழ்கிறோம்; ஏனெனில் பல வகைப்பட்ட பண்பாடுகள், மாறுபாடான நோக்கங்கள், பலவகையான மத நம்பிக்கைகள் கொண்ட மக்கள் நாங்கள்

எமது அரசியல் சட்டம் உத்தரவாதமளிக்கும் தனிநபர் உரிமைகள், சிறுபான்மையோர் உரிமைகள் ஆகியவற்றோடு நிலையான ஆட்சி. பெரும்பாலோர் ஆட்சி பற்றிய கருத்துக்கள் இணைக்கப்பெறச் செய்வது நீதிமன்றத்தின் பணி. அந்த நலன்கள் இணக்கம்பெறச் செய்வது நீதிமன்றத்தின் பணி. அந்த நலன்கள் இணங்கிப் போகுமாறு வெற்றியுடன் செய்ய முடியுமானால், வேற்றுமையினால் பலம் குறையாது; வலிமை வளரும்.

எங்கள் பிரச்னைகள்தாம் உங்கள் பிரச்னைகள் என்று நான் கூறவில்லை; அல்லது எங்களது பரிகாரங்கள்தாம் எப்போதுமே சிறப்பானவை என்றும் சொல்லவில்லை. எங்கள் பணி ஒரு போதும் முடிவதில்லை; நாங்கள் இன்னும் கற்க வேண்டியவை ஏராளம். நீங்களும் நாங்களும் ஒரு உறுதியான பொது இலட்சியம் பெற்றுள்ளோம் என்று நான் நிச்சயம் கூறுவேன்: சட்டமன்ற நெறி ஒன்றின்கீழ்ப் பாதுகாப்பும், அமைதியும், மனித உயிரின் மாண்பும் பெறுவதே அது.

இரகசியமாகப் பிறரைக் குறைகூறுதல் பாவம் என்றறிக. நீ அதை முழுதும் நீக்கவேண்டும். மனத்தில் பல நினைவுகள் எழலாம். ஆனால் அவற்றை வெளியிட முயல்வாயாயின், அது மெல்லக் காணியைக் கோடியாக்கும். மன்னித்து மறப்பாயின், எல்லாம் முடிந்துவிடும்.

புதிய நோக்கு தேவை

கல்விக் கமிஷன் அறிக்கை: பார்லிமெண்டில் தாக்கல்

ஆசிரியர்களுக்குக் குறைந்தபட்ச சம்பளம் நிர்ணயிக்க சிபாரிசு

மும்மொழித் திட்டத்தை மாற்ற யோசனை

புதுடில்லி, ஆக 29—கல்விக் கமிஷன் அறிக்கையை இன்று பார்லிமெண்டில் கல்வி மந்திரி சக்ளா தாக்கல் செய்தார். உலகில் ஏற்பட்டுள்ள அறிவு வளர்ச்சிக்கு ஏற்ற கல்வி லட்சியங்கள் முறைகள் பற்றிப் புதிய நோக்கை மேற் கொள்ளவும், ஆசிரியர்கள் பயிற்சியில் மாறுதல் செய்யவும் அது யோசனை கூறியது.

புதிய போதனை முறைகளில் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் உள்ள மாணவர்களுக்குப் பயிற்சி அளித்தாலன்றி, புதிய சமுதாயத்துக்குத் தேவையான கல்வியை அவர்கள் பெற முடியாது என்று அறிக்கை கூறியது.

கடந்த ஜூன் மாதம் அறிக்கை சர்க்காரிடம் சமர்ப்பிக்கப்பட்டது. சமர்ப்பிக்கப்பட்டதும் கமிஷன் சிபாரிசுகளின்சுருக்கம் வெளியிடப்பட்டது.

673 அச்சிடப்பட்ட பக்கங்களைக் கொண்ட கமிஷனின் முழு அறிக்கை கல்விபிரச்னையை மூன்று பிரிவுகளாக வகுத்துள்ளது:

(1) நாட்டின் வாழ்க்கை, தேவைகள், அபிலாஷைகள் ஆகியவற்றை யொட்டியதாக கல்வி முறை இருக்க அதை மாற்றுவது.

(2) கல்வித் தரம் போதிய அளவுக்கு இருக்கவும், அதிகரித்துக் கொண்டிருக்கவும், சில துறைகளிலாவது சர்வதேச நிலவரத்துக்குச் சமமாக இருக்கவும் கல்வித் தரத்தை அபிவிருத்தி செய்வது.

(3) ஆள் பலத்தேவை அடிப்படையிலும், கல்வி வாய்ப்புகளை சமமாக்குவதை வலியுறுத்தும் வகையிலும் கல்வி வசதிகளை அதிகரிக்க வேண்டும்.

12 வருடம் பள்ளிக்கூடப் படிப்பு

பள்ளிக்கூடப் படிப்பு காலத்தைப் படிப்படியாக 10 ஆண்டுகளில் 12 வருடங்களாக நீடிக்க வேண்டும். முதல் பட்டப்படிப்பின் காலம் 3 ஆண்டுகளுக்குக் குறைவாக இருக்கலாகாது.

இதைத் தவிர உயர் கல்வியில் பாடங்களின் காலம் கண்டிப்பானதாக இருக்கக் கூடாது. சர்வகலாசாலைக்கு சர்வகலாசாலை அவை மாறலாம். ஒரே சர்வகலாசாலையில் பாடத்துக்குப் பாடம் மாறலாம். இரண்டாவது பட்டப் படிப்பின்காலம் 2அல்லது3ஆண்டு

களாக இருக்கலாம். இவ்வாறு அறிக்கை கூறியது.

ஆசிரியர் நிலை

கல்விச் சீரமைப்பு திட்டங்களின் மையமாக இருக்க வேண்டிய தர அபிவிருத்தி செய்யும் நிலையில் ஆசிரியரின் பொருளாதார, சமூக, தொழில் அந்தஸ்தை உயர்த்தும் அவசியத்தை அறிக்கை வலியுறுத்தியது.

வருடா வருடம் கல்வி நிலையங்களிலிருந்து வெளியே வரும் சிறந்த ஆண்கள், பெண்களில் ஒரு பகுதியினர் கல்வி முறைக்குத் திரும்பிச் செல்லவேண்டும். அதற்கு அவர்கள் நிலையை உயர்த்த வேண்டும். உற்சாகமும், திருப்தியும் உள்ள ஊழியர்களாக அவர்கள் நீடிக்கச் செய்ய வேண்டும்.

உயர் கல்வித் துறையில் தேசிய சம்பள விகிதங்களை ஏற்படுத்த உறுதியான முயற்சி செய்யவேண்டும்.

பள்ளிக்கூட சட்டத்தில் ஆசிரியர்களுக்குக் குறைந்த பட்ச சம்பள விகிதத்தை இந்திய சர்க்கார் விதிக்க வேண்டும். பிறகு தங்கள் நிலைக்கு ஏற்ப சமமான அல்லது உயர்வான சம்பள விகிதங்களை ராஜ்யங்களும் யூனியன் பிரதேசங்களும் ஏற்க வேண்டும்.

கல்வித் தரம்

கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கு உதவும் மற்றொரு முக்கிய பணி சில குறிப்பிட்ட ஸ்தாபனங்களை அதிக தரமுள்ளதாகச் செய்வதாகும். அதற்கு முதல் நடவடிக்கை, அடுத்த 10 ஆண்டுகளில் கல்வியின் ஒவ்வொரு கட்டத்திலும் 10 சதவிகித ஸ்தாபனங்களையாவது, உயர்ந்தபட்ச திறமை நிலைக்கு அபிவிருத்தி செய்யவேண்டும். ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு நல்ல கல்லூரி இருக்கவேண்டும். சுமார் 6 சர்வகலாசாலைகளாக்கப்பட வேண்டும். தரமான ஸ்தாபனங்களுக்கு திறமை அடிப்படையில் மாணவர்களைச் சேர்க்கவேண்டும்.

முழு நேரக்கல்வியை மட்டும் நம்பியிருக்கும் கொள்கையைக் கைவிடவேண்டும். பகுதி நேர படிப்பு, சொந்தப் படிப்பு ஆகியவற்றை எல்லா கட்டங்களிலும் பெருமளவில் வளர்க்க வேண்டும். முழு நேரக் கல்வி போன்ற அந்தஸ்தை அதற்கு அளிக்க வேண்டும். கல்வி கற்றவர் கல்வி நிலையங்களில் சேர்ந்து அல்லது சேராமல் மேலும் கற்க உதவுவது இந்தச் சீர்திருத்தத்தின் ஒரு நோக்கமாகும்.

அடுத்த 20 ஆண்டுகளில் ஒவ்வொரு குழந்தைக்கும் இலவசமாகவும், கட்டாயமாகவும் குறைந்த பட்சம் 7 வருடகால பொதுக் கல்வியளிப்பது கொள்கையாக இருக்க வேண்டும். கீழ்ச் செகண்டரி கல்விக் கூடம் அளவுக்கு அதிகம் விஸ்தரிக்க வேண்டும்.

கீழ் செகண்டரிப் கட்டத்துக்கு பிறகு மாணவர்களைச் சேர்ப்ப

தில் தெரிவுமுறை தவிர்க்க முடியாது.

இந்தியாவின் ஜனத் தொகை இப்பொழுது 50 கோடி. அதில் பாதி 18 வயதுக்குக் குறைந்தவர்கள். இன்று இந்தியா வாலிபர் நாடாக விளங்குகிறது.

மும்மொழித் திட்டம்

பள்ளிக்கூடப் பாடத் திட்டம் பற்றிய கல்விக்கமிஷன் அறிக்கையின் அத்யாயம் மொழிப் பிரச்னையை முக்கியமாகக் கூறுகிறது.

மும் மொழித் திட்டத்தில் மாறுதல் செய்ய அது யோசனை கூறுகிறது. அதன் அமல் பல சிரமங்களை ஏற்படுத்தியது. அது அதிக வெற்றிகரமானதாக இல்லை என அறிக்கை கூறியது.

கமிஷன் கூறும் மொழிக்கல்வி திட்டம் வருமாறு:-

கீழ் ஆரம்பக் கல்வியில் ஒரே ஒரு பாஷையை (தாய் மொழி அல்லது பிராந்திய மொழி) மாணவர் கற்கவேண்டும்.

மேல் ஆரம்பக் கல்வி கட்டத்தில் இரண்டு பாஷைகளை (தாய் மொழி அல்லது துணை ஆட்சி மொழி) யூனியன் ஆட்சிமொழி கற்கவேண்டும்.

கீழ்ச் செகண்டரி கட்டத்தில் மூன்று பாஷைகளை (தாய்மொழி அல்லது பிராந்திய மொழி. ஆட்சி மொழி அல்லது துணை ஆட்சிமொழி, ஒரு நவீன இந்திய மொழி) கற்கவேண்டும். மேல் ஆரம்பக் கல்வியில் தான் கற்காத ஆட்சி மொழி அல்லது துணை ஆட்சி மொழியைக் கற்பது கட்டாயம்.

உயர் செகண்டரி கட்டத்தில் இரு மொழிகள் மட்டுமே கட்டாயம்.

இந்தியிலும், ஆங்கிலத்திலும் ஒன்று 3 வருடங்களிலும், மற்றது 6 வருடங்களிலும் கற்கும் இருகட்ட படிப்பை நிர்ணயிக்க வேண்டும்.

போதனாமொழி

போதனா மொழி பற்றிக் கமிஷன் கூறுவதாவது :—

பள்ளி, கல்லூரி கட்டங்களில் போதனா மொழியாவதற்குத் தாய் மொழிக்குத் தலையாய உரிமை உண்டு. தவிர, பள்ளிகளிலும் அதற்கு மேற்பட்ட நிலையிலும் போதனாமொழி ஒன்றாக இருக்க வேண்டும். எனவே, உயர்கல்விக்கு பிராந்திய மொழியைப் போதனா மொழியாகக் கொள்ள வேண்டும்,

முதல் பத்து வருஷ படிப்பின் போது எல்லா மாணவர்களுக்கும் கட்டாய அடிப்படையில் விஞ்ஞானமும், கணிதமும் போதிக்கப்படவேண்டும். இந்தப் பாடங்களில் பாடத்திட்டமும், போதனா முறையும் நவீன முறையில் மாற்றியமைக்கப்பட வேண்டும்,

சம வாய்ப்பு

கல்வி வாய்ப்புகள் எல்லோருக்கும் சமமாகக் கிடைக்கும் பொருட்டு. கமிஷன் பல சிபாரிசுகளைச் செய்கிறது. அவை யாவன :—

ஆரம்பக் கல்வி நிலையில் பள்ளிக்கூட சம்பளங்களைக் கூடிய விரைவில் எடுத்துவிட வேண்டும். 4-வது திட்ட முடிவுக்குள் எடுத்துவிட்டால் நல்லது. சர்க்கார் பள்ளிகள், ஸ்தல ஸ்தாபன பள்ளிகள், உதவி பெறும் தனியார் பள்ளிகள் ஆகியவற்றில் பள்ளிக்கூட சம்பளம் வசூலிக்கக் கூடாது என்பதே இதன் அர்த்தம். உதவி பெறும் தனியார் பள்ளிகளுக்கு அதற்கேற்ப மானிய உதவி மாற்றியமைக்கப் பட வேண்டும்.

சம்பளம் வசூலிக்கும் பள்ளிகளும் இருக்கலாம்

ஆனால், சர்க்கார் உதவி பெறாமல் சுய வசதிகளைக் கொண்டு தனியார் நடத்தும் பள்ளிகள் நீடித்து வரலாம்.

உயர்தர செகண்டரி பள்ளிகளிலும், சர்வகலாசாலை நிலையிலும், அடுத்த 10 வருஷகாலத்தில், வசதியில்லாத மாணவர்கள் தகுதி வாய்ந்த மாணவர்கள், அனைவருக்கும் சம்பளமின்றிக் கல்வி வசதி கிடைக்கும்படிப் பார்த்துக் கொள்வதே பிரதான முயற்சியா யிருக்க வேண்டும் முதற்படியாகச் சேர்த்துக் கொள்ளப்படும் மொத்த மாணவர்களில் குறைந்தபட்சம் 31 சதவிகிதம் பேருக்கு இலவசக் கல்வி வசதி அளிக்க வேண்டும்'

செகண்டரி, சர்வகலாசாலை நிலைகளில் தற்போதுள்ள ஸ்காலர் ஷிப் திட்டங்கள் கணிசமாக விஸ்தரிக்கப்பெற வேண்டும்.

ராஜ்ய கல்வி இலாகா சீரமைப்பு

ராஜ்ய கல்வி இலாகாக்கள் சீரமைப்புக்காக கமிஷன் யோசனைகள் தெரிவித்திருக்கிறது. அவற்றுள் சில வருமாறு:—

ஜில்லாக் கல்வி அதிகாரிகள் பதவியை உத்தேச "இந்திய கல்வி சர்வீஸின்" கீழ்க் கொண்டு வந்து, அந்தப் பதவியின் அந்தஸ்தை உயர்த்த வேண்டும்.

ஜில்லா நிலையில் மேற்பார்வையிடும் ஊழியர்களின் சம்பள விகிதம், தகுதிகள் ஆகியவற்றை உயர்த்த வேண்டும்.

தற்போதுள்ள செகண்டரி கல்வி போர்டு, மற்றும் இது சம்பந்தப்பட்ட ஸ்தாபனங்களின் பொறுப்புகளை மேற்கொள்ளுவதற்காக ஒவ்வொரு ராஜ்யத்திலும் ராஜ்யக் கல்வி போர்டு ஏற்படுத்த வேண்டும்.

கட்டாயப் பதிவு

எல்லாக் கல்வி ஸ்தாபனங்களையும் கட்டாயமாகப் பதிவு செய்து கொள்ளக் கோரும் சட்டம் கொண்டு வருவது விரும்பத்தக்கது என்றும் கமிஷன் கூறுகிறது. பதிவு செய்து கொள்ளாமல் கல்வி ஸ்தாபனம் நடத்துவது குற்றமாக்கப்பட வேண்டும். என்று குறிப்பிடுகிறது.

பெரிய சர்வகலாசாலைகள்

முதல் தரமாக்கப்பட்ட பிற்காலப் பணிகளை மேற்கொள்ளுவதும் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுவதும் சாத்தியமாகக்கூடிய 'பெரிய

சர்வகலாசாலைகளாக' சிலவற்றை அபிவிருத்தி செய்யவேண்டும். உலகில் அந்தந்தத் துறை களில் உள்ள மிகச் சிறந்த சர்வ கலாசாலைகளுடன் ஒப்பிடுகை யில், அவற்றின் தரத்துக்குச் சமமான தரத்துடன் கூடியவை யாக இவை விளங்கவேண்டும். உயர் கல்வித் துறையில் இது மிக முக்கியமான சீர்திருத்த மாகும் என்று கமிஷன் குறிப் பிடுகிறது.

இவ்வாறு பெரிய சர்வகலா சாலைகளாக அபிவிருத்தி செய்வ தற்காக, தற்போதுள்ளவற்றில் ஆறை சர்வகலாசாலை மானியக் கமிஷன் தேர்ந்தெடுக்க வேண் டும் என்றும், இந்தத் திட்டத்தை 1966-67-இலேயே ஆரம்பித்து விடவேண்டும் என்றும் கமிஷன் கூறுகிறது. இந்தியத் தொழில் நுட்பக் கழகங்களில் ஒன்றும், ஒரு விவசாய சர்வகலாசாலையும் இந்த ஆறில் இடம்பெற வேண் டும் என்றும் குறிப்பிடுகிறது.

சர்வகலாசாலை நிலையில், 10 வருஷ காலத்தில் படிப்படியாகத் திட்டமிட்ட ரீதியில் பிராந்திய மொழிகள் போதனு மொழி யாக்கப்பட வேண்டுமென்றும் கமிஷன் கூறுகிறது.

— தினமணி.

புதுமுறை சங்க வாய்பாடு

V.K. சேஷாத்திரி. B.A., L.T.
(Retired Deputy Inspector of schools)

புதிய மெட்ரிக், நயாபைசா திட்டப்படி எளிய முறையில் மாணவர்களுக்குச் சுலபமாகப் புரியும் வகையில் புது முறை சங்க வாய்பாடு இயற்றப் பெற்றிருக்கிறது.

தனிப் பிரதியின் விலை ரூ. 0- 13 ந. பை. 100 வாய் பாடு மொத்தமாக வாங்குபவர்களுக்கு 100 பிரதிகள் ரூ. 9 வீதம் கொடுக்கப்படும். அதற்குக் குறைந்து, புத்தகங்களுக்கு ஆர்டர் கொடுப்பவர்களுக்கு 25% கழிவு கொடுக்கப்படும்.

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்

தென்னிந்தியா ஆசிரியர்கள் ஐக்கியம்

(Sauth India Teacher's Union)

இராஜா அண்ணாமலைபுரம், சென்னை—28

6-வது சென்னை மாநில கல்வி மகாநாடு

எஸ். எஸ். உயர்தரப்பள்ளி–ஆரணி

வடஆற்காடு மாவட்டம்.

1966ஆம் வருடம் மே மாதம், 26ஆம் தேதி நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானங்கள்:

1. மாணவர்களின் பிறந்த தேதிக் குறிப்பை, உண்மைச் சான்றுகளாகக் கொண்டு ஆரம்பப் பள்ளித் துவக்கத்திலேயே பள்ளி ரிகார்டு தாளில் பதிவு செய்யப்பட வேண்டும், அதன் பிறகு மாணவர்களின் பிறந்த தேதி மாற்றம் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதை வற்புறுத்தி கல்விஇலாக்கா அதிகாரிகளால் உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டும்.

2. உயர்தரக் கல்வித்துறை அதிகாரி (driector of Secondary Education) ஆசிரியர்களல்லாத அலுவலாளர்களின் எண்ணிக்கையைக் குறைப்பது பற்றிப்பிறப்பித்தRc. No79694 D 2/65 தேதி 1-6-65 உத்தரவு பாடசாலைகளை உயர்ந்த வகையில் சரிவர நடத்தும் வகையைக் குறைப்பதால், முன்னதாகவே டைரக்டரால் Rc No. 189 D 2/51 தேதி 18-8-1951 பிறப்பித்த உத்தரவில் கண்ட எண்ணிக்கைப்படி அலுவலாளர்கள் நீடித்திருக்க வேண்டுமென்று மேல் அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வரப்படவேண்டும்.

3. சட்டசபை மன்றத்தில் ஆசிரியர்க்கான தொகுதியை நீக்கக்கூடாது.

4. சட்டசபைத் தொகுதிகளில் ஆரம்ப ஆசிரியர்களும் அங்கத்தினர்களும் இடம் பெற வேண்டும், என்று அரசாங்கத்தினரைக் கேட்டுக்கொள்ள வேண்டும்.

5. எல்லா ஆசிரியர்களுக்கும் குடியிருப்பு வசதி ஏற்படுத்தப்பட வேண்டும்.

6. பஞ்சாயத்து யூனியன் கல்வித்துறை அவை (Education Commitee) களில், பஞ்சாயத்து வட்டத்திலிருக்கும் அரசியலில் சாராதவர்களும், ஓய்வு பெற்ற கல்வித்துறையாளர்களாக நியமிக்கப்பட வேண்டும்.

7 ஒவ்வொரு உயர் நிலைப் பள்ளியிலும் முதல்கிரேட் இந்தி பண்டிதர்கள், தமிழ் ஆசிரியர்கள்

போல் நியமிக்கப்பட வேண்டும். இது பற்றி துரைத்தனத்தாரை யும், உயர் நிலைக் கல்வித்துறை தலைமையதிகாரியையும் கேட்டுக் கொள்ளப்பட வேண்டும்.

8. அரசினர் உதவி பெறும் பாடசாலைகளில் ஆசிரியர்களுக் குக் கிடைக்கும் சலுகைகள் ஆசி ரியரல்லாத அலுவலாளர் களுக்கும் அளிக்கப்பட வேண்டும்.

9. ஆசிரியர்களின் மக்கள் களுக்கு இலவசச் சலுகைகள் எல்லாக்கல்வித்துறை மன்றங்களி லும் அளிக்கப்பட வேண்டும்.

10. கூட்டுறவு சங்கங்களின் மூலம் ஆசிரியர்களுக்கு உணவுப் பண்டங்கள் குறைவான விலைக்கு அளிக்கப்படவேண்டு மென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள் ளப் படுகிறது.

11. ஒவ்வொரு உயர்தரப் பள்ளியிலும் உதவித் தலைமை யாசிரியர்களை தக்க சம்பள விகி தத்தில் நியமிக்கப்பட வேண்டு மென்று அரசாங்கத்தைக் கேட் டுக் கொள்ளப்படுகிறது.

12. அரசினர் கல்வி நிலையங் களில் இருக்கும் ஆசிரியர்கள் அடையும் சகல உரிமைகளும், உத்யோக முறை (Service Conditions), சம்பளம் இரஜா திட்டங்கள் (Leave Rules), வீட்டு வாடகை அல வன்ஸ், மருத்துவ சலுகை, மற்றும் இலவசக்கல்வி முதலான சலுகைகள் அளிக்கப்படவேண்டு மென்று அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்ளப் படுகிறது.

13. வாழ்க்கைச் செலவுகளின் உயர்வைப் பொருத்து அரசாங் கத்தாரால் நடைபெறும் பரீக்ஷை களின் தலைமைப் பரீக்ஷையாளர், உதவி மற்றும் தனிப்பட்ட (Special) பரீக்ஷையாளர்கள், தலைமைப்பார்வையாளர், உதவிப் பார்வையாளர்களின் படிகளை (Remmundrations) உயர்த் தப் படவேண்டும்.

தனிப்பட்ட படிகள்

(Special allowances)

14. மலைப்பிரதேசப்படிகளை அளிக்கும் வகையில் கீழ்க்கண்ட வாறு தகுந்த விகத்தில் வகை செய்ய வேண்டு மென்று அரசாங் கத்தாரைக் கேட்டுக் கொள்ளப் படுகிறது.

சம்பளம் மற்றும் சம்பளத்தைச் சார்ந்த அலவன்ஸ்கள், பண்டங் களின் விலைகளைப் பொருத்து அவ்வப்போது உயர்த்தப்பட்டா லும், மலைப்பிரதேச அலவன்ஸ் 1923-ம் வருடம் விதித்த வீதப் படியே ஒருவித உயர்வுமில்லா மல் கொடுக்கப்பட்டு வருகிறது. அந்தந்த கால தேசத்தை யொட்டி மத்திய அரசாங்கத் தார் கொடுத்து வரும் விகிதப் படி மலைப் பிரதேச அலவன்ஸ் கொடுக்கப்பட வேண்டும்.

15. **கோடைகால அல வன்ஸ்:** கோடை காலங்களில் நீலகிரி முதலிய மலைப்பிரதேசங் களில் ஜனங்கள் தற்காலிகமாய்க் கூடுவதால் அன்றாட வாழ்க்கைக் கான பண்டங்களின் விலை வாசி கள் அதிகமாய் உயர்ந்து விடுகின்

றன. அதனால் நிரந்தரமாய் இருக்கும் ஆசிரியர்களின் வாழ்க்கை அக்காலங்களில் மிகவும் கடினமாகின்றது. அதன் காரணத்தை யொட்டி கோடை காலங்களில் (மார்ச்சு, ஏப்ரல், மே மாதங்களில்) சம்பளத்தில் 10 சத விகிதம் அதிகப்படி கொடுக்கப்பட வேண்டும்.

16. **வீட்டு வாடகை அலவன்ஸ்:** அங்கீகாரம் பெற்றபாட சாலைகளின் ஆசிரியர்களுக்கு ஒரே தன்மையான வீட்டு வாடகை சலுகை (Uniform House rent allawance) அளிக்கப்பட வேண்டும்.

17. போதிக்கப்படும் வகுப்புகளை அனுசரிக்காமல் செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கு, அவ்வாசிரியர்களின் சம்பள விகிதப்படி அரசினர் உதவித் தொகை (Govt. Teaching Grant கொடுக்கப்பட வேண்டும்.

18. ஆரம்பப்பள்ளி தலைமையாசிரியர்களுக்கும் 10 அல்லது 7 ரூபாய்கள் தலைமையாசிரிய அலவன்ஸ் பாடசாலைகளின் தரத்தையொட்டி (Hr or Ele. School) கொடுக்கப்பட வேண்டும்.

19. உயர்தர ஆரம்பப்பள்ளிகளில் மாணவர்களின் தொகை 400க்கு மேற்பட்டிருந்தால், பள்ளி அலுவல்களை நடத்த தலைமையாசிரியருக்கு ஒரு அடண்டரை நியமித்துக் கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும்.

20. எல்லா ஆசிரியர்களுக்கும் தார தம்மியமின்றி மருத்துவச் சலுகை அளிக்கப்பட வேண்டும்.

21. பள்ளிகளின் எல்லா ஆசிரியர்களுக்கும் மற்ற ஊழியர்களுக்கும் மாத முதல் தேதியில் சம்பளம் விநியோகிக்கப்பட வேண்டும்.

22. தனிப்பட்ட சம்பளம் (Special pay) அவரவர்கள் வகித்திருக்கும் உத்தியோகப்படிப் பின் தரத்தை யொட்டி ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும்.

23. தொழில்களுக்கேற்ப பிரிக்கப்பட்ட (Bifurcated) உயர்தரப் பாடசாலைகளின் தொழில் துறை ஆசிரியர்களுக்கு தனிப்பட்ட சலுகைகள் சம்பளத்தில் சேர்க்கப்பட வேண்டும்.

24. விலை உயர்வுப்படி (Dearness allawance) மத்ய அரசாங்கத்தார் கொடுக்கும் விகிதப்படி எல்லா ஆசிரியர்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும்.

25. கிராமாந்திரங்களில் உயர் நிலைப்பள்ளிகளில் ஆசிரியர்கள் வேலை வகிக்கத் தயங்காமல் முன்வர அவர்களுக்குத் தனிப்பட்ட சம்பள சலுகை அளிக்கப்பட வேண்டும்.

26. நிரந்தரகாலியிடயிங்களில் வேலை வகிக்கும் ஆசிரியர்களுக்கும் விடுமுறைக் காலச் சம்பளம் (vacation salary) கொடுக்கப்பட வேண்டும்.

27. ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு பென்ஷன் 20 ரூபாயிலிருந்து 30 ரூபாய்க்கு உயர்த்தப்பட வேண்டும்.

28. ஓய்வு பெற்ற ஆசிரியர்களின் பென்ஷன் விபரங்களை உடனுக்குடனே பெற்று ஓய்வு பெற்ற உடனே பென்ஷன் பெற ஏற்படுத்த வேண்டும்.

29. அரசாங்க ஊழியர்களுக்கான ஓய்வு முறை விதிகளை (Pension rules) அங்கீகாரம் பெற்ற எல்லாப் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கும் விதிக்கப்பட வேண்டும்.

30. எல்லாப் பள்ளிகளிலும் ஆசிரியரில்லாத ஊழியர்களுக்கும் ஓய்வு முறை (pension) விதிக்கப்பட வேண்டும்.

31. எல்லாத்துறை ஆசிரியர்களுக்கும் 60-ம் வயதிற்கு மேல் ஓய்வு பெற (to retire) அனுமதிக்கப்பட வேண்டும்.

32. ஓய்வு பெறும் ஆசிரியர்களுக்கு அவர்கள் 60 வயது வரை உத்தியோகம் வகித்த கால அளவை யேற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

33. எல்லாத்துறைப் பள்ளி ஆசிரியர்களுக்கும் ஒரே ஒருமைப்பாடான இராஜா விதிகள் (Leave rules) உத்யோக விதிகள் (Service rules) வகுக்கப்பட வேண்டும்.

34. தக்கமுறைக்கான சலுகைகளை முன்னிட்டு ஆசிரியர்களுக்கு அவர்களின் பிராவிடன்ட் பண்டு நிதியிலிருந்து கடனுதவிப்பணம் அளிக்கப்பட வேண்டும்.

35. பிராவிடன்ட் பண்டு தொகையின் மீது அரசாங்கத்தினர் அளிக்கும் வட்டி விகிதத்தை உயர்த்த வேண்டும்.

36. அவசர நிமித்தம் கட்டப்படும் பிராவிடன்டு பண்டு தொகையை (Emergency pro-vident fund amount) கட்டுவதை உடனடியாக நிறுத்தப் படவேண்டும்

37. தற்காலிகமாய் நிறுத்தப்பட்ட ரயில்வேக் கட்டணச் சலுகையை ஆசிரியர்களுக்குத் திரும்பவும் தரப்பட வேண்டும்.

38. பாடசாலைகளில் விஞ்ஞான பாடம் கற்பிக்கும் பாடசாலைகளில் (Seience Labor ataris) அடண்டர்களை அமர்த்த உத்திரவு பிறப்பிக்கப்பட வேண்டும்.

39. ஜில்லா போர்டு பாடசாலைகளை அரசாங்கத்தினரின் அதிகாரத்தின் கீழ்க் கொண்டு வரப்பட்டதால், மேற்படி ஆசிரியர்களின் ஜில்லா போர்டின் வகித்த காலஅளவுகளை யொட்டி சம்பளம், பதவி உயர்வு; இராஜாக் காலம் முதலியவைகள் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்

மொழி தோன்றிய காலம்

பேராசிரியர் ஔவை. துரைசாமிப் பிள்ளை

மொழி தோன்றிய காலம் என்பது நமக்குத் தமிழ்மொழி தோன்றிய காலம் என்று பொருள்படும். தமிழை அகத்தியர் தந்தார் என்ப் பொருள்படும். அது வரலாறு அன்று. அகத்தியரைக்குறிக்குமிடத்தே "தழல் புரை சுடர்க் கடவுள் தந்த தமிழ் தந்தான்" என்பர் கம்பர். சேனவரையர், சிவனே ஆதியில் தமிழ் நூலை அகத்தியற்கு உணர்த்திய மாதொரு பாகன் என்பர். அகத்தியன் பெற்றது, தமிழ் இலக்கணமே தவிர தமிழ் மொழி அன்று; இலக்கணமோ இலக்கியத்திற்கு நெடுங்காலத்திற்குப் பின்னே தோன்றுவது. ஆகவே அகத்தியர்க்கு எவ்வளவோ காலம் முந்தியது தமிழ் என்பதாயிற்று. இனி, தமிழ் தோன்றியகாலம் அதாவது மொழி தோன்றிய காலம் எப்போது என்னின், அது வரலாறு அறியாத தொன்று.

இங்ஙனம் வரலாறு காண முடியாத நிலை தமிழுக்குத்தான் என்பதில்லை. மக்கள் வழங்கும் மொழி பலவற்றிற்கும் ஒத்தது. மக்கள் பேசும் மொழி, தொடக்கத்தில் இறைவனால் அருளப்பட்டது என ஜேக்கப் கிரிம் கூறுகிறார். படைப்புக் காலத்தே தோன்றியவர் ஆதாம் ஏவாள் என்ற இருவர் என்றும், அவருடன் இறைவன் சுவடன் மொழியில் பேசினான்; ஏவாள் டேனிஷ் மொழியில் பேசினாள் என்றும் சிலர் கூறுகின்றனர். துருக்கியர் இறைவன் படைத்த முதல் மொழி துருக்கி மொழி என்பர்.

சமயப்பற்றும், மொழிப் பற்றும் இன்று நோக்கினவருள், ஜேக்கப் பொகிமி என்ற செருமானியர், மக்கள் தோன்றிய போதே அவர்களுடைய வாய் பேச்சொலிக்கேற்ப உறுப்பெல்லாம் நன்கு அமைந்திருந்தமையால், மொழியும் அவரோடே உடன் தோன்றியது. அம்மொழிக்கு லிங்குவா ஆதமிகா என்று பெயர் என்று கூறுவர். அம்மக்கள் முதலில் தோன்றிய இடம் மத்திய ஆசியா என்றும், ஈரான் என்றும், பால்டிக் நாடுகள் என்றும், குமரிக் கண்டம் என்றும் பலரும் தமக்குத்தோன்றியவாறு கூறுகின்றனர்.

ஒரு சிலர், 'மக்களினம் தோன்றி ஐந்து லட்சம் ஆண்டு ஆகிறது; நான்கு லட்சம் ஆண்டு ஆகிறது; நான்கு லட்சம் ஆண்டு கழித்தே அவர்கள் ஒரு மொழியை வகுத்துப் பேசத் தலைப்பட்டனர்' என்று கூறுகின்றனர்.

இச்செய்திகளைச் சிந்தித்த அறிஞர்களில் பைதாகரஸ், பிளேட்டோ, அரிஸ்டாட்டில், தெமோகிரிட்ஸ் முதலியோர், இயல்பாகவே தம்மில் ஒன்றுகூடி வாழும் மக்கள், உலகில் மொழியே இல்

லாமல் ஊமைகளாய்ப் பல்லாயிரம் ஆண்டு வாழ்ந்தார்கள் என்பது பொருந்தாது. அவரிடையே ஒரு வகையான மொழி நிலவியிருக்க வேண்டும் என்று தெளிந்தனர்.

கதே என்ற நல்லிசைப்புலவர் இறைவன் மக்களைப் படைக்கும் போதே மொழியையும் படைத்தளித்தான். காலால் நடக்கவும் கையால் பற்றவும் படைத்தாற் போல, வாயால் உண்ணவும், பேசவும் அருளினன். உண்டற்கு உணவு போலப் பேசுவதற்கு மொழியும் இறைவனால் படைக்கப்பட்டது என்று கூறினர்.

பின்பு விஞ்ஞானிகள் இதில் கருத்தைச் செலுத்தினர். அவர்கள் மக்களுடைய கண்ணும் காதுமாகிய கருவிகளால் அறியப்பட்ட காட்சிகள் அவர்கள் மனத்தின் கண் ஊறி உணர்வுகளை ஒலி வடிவமாக்கி வெளிப்படுத்துகின்றன. அவை பிறர்க்கு உணர்த்தும் திறம் நிறைந்து மொழியாகின்றன என்றனர்.

மனத்தில் ஊறியெழும் உணர்வுகள் எங்ஙனம் ஒலிவடிவு பெறுகின்றன என்பதை ஆராய்ந்தவர் பலர். பல கொள்கைகளை அவர்கள் வெளியிட்டனர். சில நாய்கள் வள் வள் என்று குலைப்பது கண்டும், ஆடுகள் போபோ என்று கத்துவது கண்டும் மொழியை வகுத்தனர் என்றனர். சிலர் இயற்கையில் டிங்டாங் என்றும், சிங்சாங் என்றும் எழும் ஒலிகளைக் கேட்டு மொழியொன்று உருவாக்கினர் என்றும் உரைக்கின்றார்கள்.

குழந்தைகள் பிறந்தவுடன் பேசாமல் இருந்து பின் பேசுவதைக் கண்டு சில அறிஞர்கள் மக்கட் சூழலே இல்லாமல் ஓரிடத்தே இரு குழந்தைகளை இருந்து வளரவிட்டுப் பார்த்தனர். அவருள் எகிப்திய மன்னன் சம்மெட்டிக்கோல் — பிரெஞ்சு மன்னன் பிரடரிக் முதலியோராவர். ஆனால் முடிவு தெளிவாகவில்லை.

இவற்றையெல்லாம் அறிந்த எஸ்பெர்சன் என்பவர் மக்கள் வாடையே இல்லாத நல்ல சூழலில் குழந்தைகளை முறைப்படி வளரவிடின் அவை ஒருவகை மொழியைப் படைத்துக் கொள்கின்றன. அம்மொழி அவர்களின் பெற்றோரது மொழிகளினின்றும் வேறுபட்டிருந்தாலும் அதனை மொழிக்குத் தோன்று நிலையாகக் கொள்ளலாம். அன்றியும் அக்குழந்தைகள் அழும் போது எழும் ஒலி மழலைத் தன்மையால் குழறுபடையாக இருப்பினும் இயற்கையும் செயற்கையுமாய் உருவாகும். அவ்வொலிகளே மொழிக்கு முதற்காரணமாம் என்று கூறுவாராயினர்.

ஆயினும், சூழ்நிலையே மொழி தோன்றும் காரணம் என்ற கருத்தால் மாவும் புள்ளுமாகிய உயிரினங்கள் செய்யும்ஒலியே மொழிக்குக் காரணம் என்ற கருத்துப் பலருடைய உள்ளத்தைக் கவர்ந்தது.

எனினும் சூழவுள்ள விலங்குகளையும், புள்ளினங்களையும் கண்டும் கேட்டும் பெற்ற பயிற்சியே மக்கள் மொழி படைத்துக் கொள்ளற்குக் காரணம் என்று சொல்வது மக்களது தகுதி நோககாது கூறும சழக்குரை என்று அறிஞர் மறுத்து விட்டனர்.

இந்நிலையில் உவகை உணர்ச்சியோ, அழுகையுணர்ச்சியோ, தனிமையுணர்ச்சியோ தோன்றும் போது நம்மிடையே பாட்டிசை எழுகிறது. அப்பாட்டிசையே மொழி தோன்றுவதற்கு ஏதுவாகும். அன்றியும் பறவையினம் ஒவ்வொன்றும் தன் உள்ளுணர்ச்சியை ஒரே வகையான குரலெடுத்தே இசைக்கிறது. அதுவும் நமது மொழியிசைக்கு ஒத்து இயலுகிறது. ஆகவே, பாட்டிசையே மொழி தோன்றக் காரணம் என்று டார்வின் கூறினார். ஹெர்பார்டு ஸ்பென்ஸரும் எஸ்பெர்சனும் டார்வின் கருத்தை ஆதரித்தனர். ஆனால் உவகை அழுகை, காதல் (பயிர்ப்பு) என்ற உணர்ச்சி எழும்போது அதனை மிகுவித்து வெளிப்படுத்தும் நிலையில் பாட்டிசை தோன்றுகிறது. அதற்கேற்ப உடலில் மெய்ப்பாடும், குறிப்பும் செய்கையும் பிறக்கின்றன. ஆனால் இயற்கையாய்த் தோன்றும் உள்ளுணர்ச்சியை வெளியிட்டுக்கொள்ளும் முறையில் மொழி தோன்றுகிறது என்பதை எண்ணவேண்டும். இங்ஙனம் வேறுபட்ட அடிப்படையில், உண்டாகும் பாட்டொலியும் மொழியொலியும், ஒன்றிற்கொன்று காரண காரியமாகும் என்று கொள்ளலாகாது. என். ஜி. மேவேஷ் என்ற செருமானியப் பேராசிரியர் மறுக்கின்றார்.

வேறு சிலர், பிறரை உருவிக்கவோ அச்சுறுத்தி வெருட்டவோ ஓசை செய்வது மக்கட்கு இயல்பு. அம்முறையில் மெய்யிலும் கையிலும் சைகை காட்டி ஒருவகை ஓசை செய்து பிறரை வருவிப்பதோ வெருட்டுவதோ செய்கின்றனர். அவ்வோசையே மொழி தோன்றுவதற்குக் காரணமாம் என்று கூறலாயினர்.

இனி, மககளிடையே பேச்சு உண்டாகும் போதெல்லாம் முன்னும் பின்னும் இடையிலும் மெய்ப்பாடும் முகக் குறிப்பும் கையசைவும் உடன் தோன்றுகின்றன. ஆதலால் மொழி தோன்றுவதற்கு முன்பு அக் குறிப்புக்களே மொழியாய் இருந்திருக்கலாம் என்பர் சிலர். அவரை ஜே. ஜின்னேகன் என்ற செருமானியப் புலவரும் சாங்-செங்-மிங் என்ற சீனப் புலவரும் ஆதரிக்கின்றனர். இதனை ஆராய்பவர் சுமத்திராவில் வாழும் கூழ மக்களைச் சான்றாகக் கொள்கின்றனர். இவ்வகையில் ஏழு லட்சம் மெய்ப்பாடும், சைகையும் உலக மக்களிடையே தோன்றுகின்றன என்று ஆராய்ச்சியாளர் கண்டுள்ளனர். அதனைத் தொடர்ந்து தொடக்கத்தில் மக்கள் விலங்கு நிலையில் இருந்து பின்பு இனம் தழுவி வாழத் தலைப்பட்டனர் என்பது உண்மையாகலாம். அவர்களிடையே கருத்தைத்

தெரிவிக்கும் வகையில் மெய்ப்பாடு செய்கையும் தோன்றியிருக்கலாம். ஆயினும் அவை நிரம்பாமையால் மொழி தோன்றிற்று என்று கூறுவாராயினர்.

ஒரு சாரார், பழங்குடி மக்கள் பேசும் மொழியும் மெய்ப்பாடும் காலப்போக்கால் மிக்க வேற்றுமையும், மாற்றமும் பெறுமையால் அவர்பால் ஆராய்ச்சி நிகழ்த்தினால் மொழியின் தோன்றுநிலை காணலாம் என முயன்றனர். சார்டீனிய மக்கள் ஐசுலாந்து மக்கள் முதலிய பழங்குடிகள் பலரையும் அளவளாவிக் கண்டதில் போதிய அளவில் மொழிதோன்றிய நிலையைக் காண அவர் செய்த முயற்சி பயன் தரவில்லை. அப்பழம் பெரும் மக்களின் மொழி பெருமாற்றம் எய்தாமைக்குப் பதியெழுவறியாத உழவுத்தொழிலே காரணம் என்பது தெளிவாயிற்று.

இப்படிப் பல்வேறு கொள்கைகளும் உடைபட்டொழியவே மொழியறிஞர் மக்கள் எக்காலத்தும் பேச்சின்றி இருந்ததில்லை. பேச்சோடு உடன் தோன்றும் மெய்ப்பாடும் சைகையும் கூடப் பேச்சுக்குறையை நிறைவு செய்தனவேயன்றித் தனியே மொழியாக நிலவியதில்லை என்ற முடிவுக்கு வந்தனர்.

பேச்சோடே மக்கள் தோன்றினராயினர். தோன்று நிலையில் மொழி எவ்வாறு இருந்திருக்கும் என்று அவர்கள் எண்ணத் தலைப்பட்டனர். படைப்புக் காலத்தே உலகிற் சூழலைக் கண்ட மக்கள் இனம் சூழும் பண்பினால், ஒருவரை ஒருவர் அழைப்பதும் ஒன்றை உரைப்பதும் செய்தனர். அவை முறையே ஏவலும் எடுத்துரையுமாகும்.

அவற்றுள் அண்மையில் உள்ளவர்களை வா, போ, இரு என்று சொல்வது ஏவல் வினை. அவையும் பெரும்பாலும் ஓரசைச் சொற்களேயாகும். பின் அவ்வேவல்கள் இடஞ்சுட்டி இங்கே வா, அங்கே போ, இதை எடு, அதைப் பிடி என்றாற்போலத் தொடர்களாயின. இத்தொடர்ச்சியால் இடமும் பொருளும் கருவியும் ஆகப் பெயர்கள் தோன்றின. பின்பு, வருகிறேன், போனேன், எடுக்கிறேன், பிடித்தேன் என உரை வினைகள் தோன்றின. இங்ஙனம் தோன்றிய பெயர் வினைகளில் வினையே காலத்தால் முந்தியது...என ஜே. ஜே. ஹெர்டர் (கி. பி. 1770) என்பவர் கூறியுள்ளார். ஏவல் முதலிய வினை வகைகளை ஆராய்ந்தவருள் எம். பிரியேல் என்ற மொழி நூற்புலவர் முன் தோன்றிய ஏவலுக்குப் பின் எடுத்துரையும் வினாவும் தோன்றின என்றார். புரோட்டோ கோரஸ் என்ற கிரேக்கப் புலவர் ஏவல், எடுத்துரை, வினா என்ற மூன்றுடன் வியங்கோளைச் சேர்த்து இந்நான்குமே மொழி தோன்றுங்கால் உடன் தோன்றினவை என்று மொழிகின்றார்.

இனி ஏவல் வினையோ அழைப்புக்கட்டளைப் புராய் இயலுவது அதுகண்ட பிரெக்மேன் டெல்புருக் என்ற மொழி நூல் ஆசி

ஞர் அவற்ருேடு விளியையும் ஒன்ருகத் தொகுத்தனர்.

இவ்வாறு சொற்கள் பெருகவும், செய்கைகள் சுருங்கின. ஆயினும், இச்சொல்லும், செய்கையும் எழுத்துருக்கொண்டது எக்காலம் என்பது தெரியக்கூடவில்லை. சைகைதான் எழுதப்படும் எழுத்தாயிற்று என்பது ஒரு கொள்கை.

அக்காலத்தே அவர்களுக்கு ஆடு, மாடுகளே நெருங்கிய உயிர்ப் பொருளாக இருந்ததனுல் அவற்றின் கருத்துக் குரலைக் கொண்டு எழுத்தை வகுத்திருப்பவர் என்பவர் ஒரு சாரார். ஆடு பேஎ எனக்கத்துவதும் மாடு ம்ஆ எனக் கத்துவதும் பொருளாக பே, ஆலிப் போன்ற எழுத்தை வரைந்து கொண்டனர்—ஆட்டினும், மாட்டின் குரல் மிக்க ஓசையுடையதாதலின் 'ஆ' வை முதலினும் 'பே'யைப் பின்னும் வைத்தனர்.

முதலெழுத்தை ஆலப் என்பதும் ஆல்பா என்பதும், 'ஆ' என்பதும் எருதையே குறிக்கும். 'பே' என்பதை மேனுட்டார் ஆடு என்பர். கா, கா, என்பவை தமிழர்க்குக் காக்கையைக் குறிக்கும். இதனுல் தமிழர் மற்ற நாட்டவர் போல மாவையும் புள்ளையும் நோக்கியே எழுத்தைப் படைத்துக்கொண்டரென அறிகின்ருேம்.

ஒலியெழுத்தைப் போலவே வடிவெழுத்தைக் கண்டவரையும் அவரது காலத்தையும் அறிந்தவர் எவரும் இல்லை. மாட்டின் கொம்பைப் பார்த்தே ஆங்கிலேயர் 'A' —எ என்ற எழுத்தையும் வீட்டின் அமைப்பைக் கண்டே 'B' என்ற எழுத்தையும் படைத்துக்கொண்டனர் என மேரியா பை கூறுகின்ருர்.

இனி காலம் காண முடியாமையால் சிலர் எழுத்துக்களின் படைப்புக்கும் தெய்வங்களை நிறுத்துகின்றனர். எகிப்தியர் தோத் (Thoth) என்ற அறிவுத் தெய்வம் நமக்கு எழுத்துக்களைத் தந்தது என்பர்: எழுத்துக்களையும் 'ண்யூண்டரு' (தேவமொழி) என்பர். அசிரியர்கள் தம் எழுத்துக்களை நீபோ (Nebo) என்ற தெய்வம் அளித்தது என்பர். மாயர்கள் இட்சாம்நா (Stzamna) என்ற தெய்வம் அளித்தது என்பர். ஜப்பானியர் தமது பழங்கால எழுத்துக்களை காமி-நோ-மோஜி (தெய்வ எழுத்து) என்பர்.

இங்ஙனம் வையகம் போர்த்த வயங்கொலி நீர் கையலக் கற்ருேன்றி மண் தோன்ருக்காலம்" இறந்து மண் தோன்றி மக்கள் தோன்ருக் காலம் கடந்து மக்கள் தோன்றி மொழி தோன்ருக் காலத்தையும் தன்னுள் கலந்து வழங்கும் நமது மொழி தொல்காப்பியர்க்கு நெடுங் காலத்துக்கு முன்னமே தோன்றிச் செம்மை எய்தியது என்பதைத் திட்டவட்டமாகக் கூறலாம் என்று சொல்லி என்னுடைய உரையை முடிக்கிறேன். (திருச்சி நிலையத்தில் ஒலிபரப்பானது). —"வாெனுலி"

டிரான்ஸிஸ்டர்

—"செயற்கை நிழல்"

சிறு அளவில் குறைந்த அளவு மின்சாரச் செலவில் இயங்கும் டிரான்ஸிஸ்டர் ரேடியோக்கள் ரேடியோ உலகில் ஒரு பெரும் புரட்சியை உண்டாக்கியுள்ளன. டிரான்ஸிஸ்டர் என்பது என்ன? எப்போது யாரால் கண்டு பிடிக்கப்பட்டது.

அமெரிக்க விஞ்ஞானிகள் மூன்று பேர் 1948ஆம் ஆண்டு ஜூன் மாதம் 22ஆம் தேதி கண்டு பிடித்தது டிரான்ஸிஸ்டர் கருவி. பட்டாணி அளவுள்ள ஒரு கொண்டையில் மூன்று சிறுகம்பிகள் சொருகிய மாதிரி இருக்கும். அவ்வளவு தான். ஆனால், அதன் சாதனைகளோ மகத்தானவை. அதிகச் செலவில் பெரிய அளவுள்ள ரேடியோ வால்வுகள் செய்யும் வேலைகளை மிகக்குறைந்த செலவில் அலட்சியமாய்ச் செய்கிறது டிரான்ஸிஸ்டர்.

எதிர்பாராதது

டிரான்ஸிஸ்டர் கண்டு பிடிக்கப்பட்டது எதிர்பாராத விதமாகத்தான். ஐக்கிய அமெரிக்காவில் நியூ ஜெர்ஸி மாநிலத்தில் மர்ரே ஹில் என்ற இடத்தில் உள்ள பெல் டெலிபோன் ஆராய்ச்சிக் கூடத்தில் வில்லியம் ஷாக்லி, வால்ட்டர் பிராட்டன், ஜான் பார்டீன் என்ற மூன்று விஞ்ஞானிகள் ஏதோ ஆராய்ச்சி செய்துகொண்டிருந்தார்கள். அப்போது ஜெர்மனியம் என்ற ஒரு கல்லின் மேற்பரப்பின் குறுக்கே மின்சாரம் பாயும் தன்மை அவர்கள் கவனத்தைக் கவர்ந்தது. ஒரு காலத்தில் ஜெர்மனியம் உபயோகமற்ற பொருள் என நினைக்கப் பட்டு வந்தது. காரீயக் கந்தகக்கல் என்ற லெட்ஸல்பைடும் இம் மாதிரியே ஒரு காலத்தில் கருதப்பட்டு வந்தது. ஆனால் காரீயக் கந்தகக் கல்லில் மின்சாரம் அரை குறையாகப் பாய்வதானால் அது எவ்வாறோ வானில் உள்ள ரேடியோ அலைகளை ஈர்க்கிறது என்று தெரிந்தது. ரேடியோ ஒலி பரப்பு நிகழ்ச்சிகளைக்கேட்க வல்ல "கிரிஸ்டல் ரேடியோ" செய்வதற்கு காரீயக் கந்தகக் கல் உபயோகிக்கப்பட்டது. ஆனால் காரீயக் கந்தகக் கல் வானொலி அலைகளை ஈர்த்ததே ஒழிய அவற்றின் ஆற்றலைப் பெருக்கவில்லை. "கிரிஸ்டல் ஸெட்" டைக் காதருகில் வைத்தால்தான் ஒலி கேட்டது.

பெல் டெலிபோன் விஞ்ஞானிகள் மூவரும் இந்த ஒலியை எப்படிப் பெருக்குவது என்று ஆராய்ந்தார்கள். ஜெர்மனியம் கல்லுக்கு மூன்று மின்வாய்கள் அமைத்து ஒரு சிறு கருவி உண்டாக்கினார்கள். இவைகளைக் கொண்டு சிறுரேடியோதயாரித்த போது வானொலி அலைகள் முன்னை விட ஒருலட்சம் மடங்கு உரக்கக் கேட்டன. இந்தக் கருவிக்கு "டிரான்ஸிஸ்டர்" என்று பெயர் சூட்டினார்கள்.

வான வெளியிலும்

டிரான்ஸிஸ்டர் வருவதற்குப் முன் ரேடியோ பெட்டிகளில் வானொலியை ஈர்க்க "வாக்குவம் வால்வ்" என்ற சாதனமே பயன் பட்டு வந்தது. இதைச் செய்வது கடினம். இதற்குக் குறிப்பிட்ட கால ஆயுளும் உண்டு. இவ்வால்வு களை இயக்க மின்சாரச் செலவும் அதிகம். இவை அளவிலும் பெரி யவை. சாதாரண ரேடியோக் களில் கூட நாலைந்து வால்வுகள் தேவைப் பட்டதால் ரேடியோக் களை ஒரு குறிப்பிட்ட அளவுக் குச் சின்னதாகச் செய்ய முடியா மலிருந்தது. மேலும் டெலி போன் ஒலி பெருக்கிகள், கணக் குப் போடும் யந்திரங்கள் முத லிய சிக்கலான சாதனங்களில் வாக்குவம் வால்வுகளை ஏராளமாக நூற்றுக் கணக்கில் பொருத்த இடமில்லை.

டிரான்ஸிஸ்டருக்கு இந்த உபத்திரவமெல்லாம் இல்லை. வாக்குவம் வால்வுகள் செய்யும் வேலைகளை டிரான்ஸிஸ்டர்கள் சிறப்பாகச் செய்து வருகின்றன. அவை எளிதில் அழியாமல் நீடித்து உழைக்கின்றன. சிறு இடப் பரப்பில் நூற்றுக்கணக் கான நுணுக்கமான கருவிகளை அமைக்க டிரான்ஸிஸ்டர்கள் சமய சஞ்சீவியாகப் பயன்படு கின்றன. இன்றைய விண்வெளி யுகத்தில் கோடிக் கணக்கான மைல்களுக்கப்பாலிருந்து தகவல் களை நமக்கு அனுப்பும் அற்புதக் கருவிகள் செய்வது டிரான்ஸிஸ் டரினால் தான் கைகூடியிருக் கிறது. "எக்ஸ்ப்ளோரர்" என்ற முதல் அமெரிக்கச் செயற்கைக் கோளில் அனுப்பப்பட்ட நுண் ணிய ஒலிபரப்புக் கருவியில் டிரான்ஸிஸ்டர்களே பல அரிய காரியங்களைச் செய்தன.

தீப்பெட்டி அளவு ரேடியோ

விலை மலிவு; உபயோகம் அதி கம். இன்று கோடிக்கணக்கில் டிரான்ஸிஸ்டர்கள் தயாரிக்கிறார் கள். ரேடியோப் பெட்டிகள். தீப்பெட்டிகள் அளவுக்குச் சிறுத்து விட்டன. மலிந்தும் வருகின்றன. ரேடியோ மட்டு மல்ல, காது மந்தமானவர்களின் உபயோகத்துக்கான செவிக் கருவிகளிலும் டிரான்ஸிஸ்டர் புரட்சியை உண்டாக்கியுள்ளது. மேலும், கணக்கு இயந்திரங்களி லும் வியக்கத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது.

டிரான்ஸிஸ்டரின் அன்றாட உபயோகம் ஒரு புறமிருக்க, திடப் பொருள்களின் அமைப் பைப் பற்றியும் சிலஉலோகங்களின் மேற் பரப்பிலுள்ள அணுக்களின் மின் விசை இயல்புகள் பற்றியும் அந்த மூன்று அமெரிக்க விஞ் ஞானிகள் கண்டு பிடித்த விஷயங் கள் பௌதிக முக்கியத்துவம் வாய்ந்தவை. இம்மூவருக்கும் 1956-ல் பௌதிகத் துறையில் நோபல் பரிசு வழங்கப்பட்டது.

—"தினமணி கதிர்"

வியப்பை அளிக்கும்

கணக்கு இயந்திரம்

கல்கத்தாவில் ஜாதவ்பூர் பல்கலைக்கழகத்தில் கணித இயந்திரம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

இந்தியாவிலேயே இது போன்ற கணிதப் பொறி வேறு இல்லை. திடநிலை இலக்கக் கணிதப் பொறி—ஐ எஸ் ஜ ஜே யு-1 என்று அதற்குப் பெயர்.

கல்கத்தாவிலுள்ள இந்தியப் புள்ளி விவர நிலையமும் ஜாதவ்பூர் பல்கலைக் கழகமும் சேர்ந்து இப் புதுமைக் கருவியை இந்தியாவில் முதன் முதலாக இயற்றியுள்ளன.

இந்நாட்டின் தொழில் நுட்ப வரலாற்றில் இது ஒரு முக்கிய நிகழ்ச்சி என்று சென்ற வாரம் ஜாதவ்பூரில் இந்தியக் கல்வி மந்திரி எம். சி. சாக்ளா பாராட்டினார்.

“நமது விஞ்ஞானிகள் வேறு எந்த நாட்டு விஞ்ஞானிகளுக்கும் இளைத்தவர்கள் அல்லர். அவர்களுக்குத் தகுந்த சூழ்நிலையும், போதிய வாய்ப்பும் தலைமையுந் தான் வேண்டும். இந்தியப் புள்ளி விவர நிலையமும் ஜாதவ்பூர் பல்கலைக்கழகமும் இந்தத்தலைமையை வழங்கின” என்றார் அவர்.

இவ் வேலையில் ஈடுபட்ட விஞ்ஞானிகளைப் பாராட்டிய கல்வி மந்திரி அவர்களுடைய ஈடுபாடும் உற்சாகமும் தன்னலமற்ற பணியுமே இக் கணிதப் பொறியை உருவாக்கின என்றார்.

அந்நியச் செலாவணி அரிதாகி விட்டது தீமைபோல் வந்த நன்மையேயாகும்; ஏனெனில் தன்னிறைவு காண்பது எவ்வளவு முக்கியம் என்பதை நாம் உணரும்படி செய்தது இதுவே என்றார் சாக்ளா.

கணிதப் பொறியைச் செய்ய ரூ. 4 லட்சம் ஆயிற்று. இதற்கு ரூ. 2 லட்சம் பெறுமதிப்புள்ள உறுப்புக்கள் அமெரிக்காவிலிருந்து வருவிக்கப் பட்டன. இதே அளவுள்ள கணிதப் பொறி ஒன்றை வெளிநாடுகளிலிருந்து வாங்குவதானால், செலவு ஏறக்குறைய ஐந்து மடங்காகியிருக்கும்.

பொதுவாக நவீன கணிதப் பொறிக்குள்ள எல்லா இயல்களும் இந்த இந்தியப் பொறியிலும் உள்ளன என்று ஜாதவ்பூர் பல்கலைக்கழக அதிகாரி, பதிவாளர் பி. சி. வாசு மல்லிக் தெரிவிக்கிறார்.

சிக்கலான விஞ்ஞானக் கணக்குகள், புள்ளி விவரத்தகவல்களை வகைப் படுத்திய தொகுப்பு முதலியவற்றை எளிதில் செய்வதற்கு மிகவும் ஏற்ற கருவி இது. 11 இலக்கங்கள் உள்ள எண்களை வைத்து ஒரு விநாடிக்கு 10,000 கூட்டல் கழித்தல்களும், 1,500 பெருக்கல்களும், 1,200 வகுத்தல்களும் செய்ய வல்லது இக் கணிதப் பொறி.

இதைச் செய்வதற்கு ஏறக்குறைய 7,000 டிரான்சிஸ்டர்

[43ஆம் பக்கம் பார்க்க]

இலவசக் கல்லூரிப் படிப்பு பற்றி முதல் அமைச்சர்

செலவு மதிப்பீடு தயாரித்து பரிசீலிக்க வேண்டும் என்கிறார்

சென்னை, ஆக. 29 :— சென்னை ராஜ்யத்தில் இலவசமாகக் கல்லூரிப் படிப்பையும் அளிக்க வேண்டும் என்று காங்கிரஸ் அக்ராசனர் திரு காமராஜ் திருச்சியில் ஒரு யோசனையைத் தெரிவித்தாரல்லவா ? இந்த யோசனையை அமுல் நடத்துவதற்கு என்ன செலவாகும் என்பதைப் பற்றிக் கணக்குப் போட்டுப் பார்த்து சர்க்கார் பரிசீலனை செய்ய வேண்டும் என்று முதல் மந்திரி பக்தவத்சலம் இன்று நிருபர்களிடம் கூறினார்.

இந்தப் பிரேரணையை அமல் நடத்துவதற்கு என்ன செலவாகும் என்பது பற்றியோ அல்லது இந்தப் பிரேரணை எப்போது அமுலுக்குக் கொண்டு வரப்படும் என்பது பற்றியோ தான் இது வரை இப்போது எதுவும் கூறுவதற்கில்லை என்று முதல் மந்திரி கூறினார்.

சுமாரான கணக்கு

சென்னை ராஜ்யத்தில் உள்ள 100 கலைக் கல்லூரிகளில் மொத்தத்தில் 1 லட்சம் மாணவர்கள் படித்துக் கொண்டிருக்கக் கூடும் என்றும், ஒரு மாணவருக்குச் சராசரியாக ரூ. 300 என்று வைத்துக் கொண்டால் கல்லூரிக் கட்டணங்களை இழப்பதால் கல்லூரிகளுக்கு ஏற்படும் நஷ்டத்திற்குச் சுமார் ரூ. 3 கோடி நஷ்டஈடு கொடுக்க வேண்டியிருக்கும் என்றும், சுமாராகக் கணக்குப் போட்டுப் பார்த்ததில் தெரிய வருவதாக விசாரணை செய்ததில் தெரிய வருகிறது.

இன்ஜினீயரிங் வைத்தியக் கல்லூரிகள் போன்ற தொழில் பயிற்சிக் கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கும் பாலிடெக்னிக்குகளைச் சேர்ந்த மாணவர்களுக்கும் இலவசக்கல்வி கிடைக்குமா என்பது பற்றி ஒன்றும் தெரியவில்லை. அவர்களையும் திட்டத்தில் சேர்த்துக்கொண்டால் உபரியாக ரூ. 1 கோடி செலவாகும்.

இந்த யோசனையைப் பொது மக்களும், பெற்றோர்களும் வரவேற்கின்றனர்.

மக்களது லக்ஷக்கணக்காகப் பசியாலும் அறியாமையாலும் உழலும் வரை, அவருடைய செலவிற் கல்வி கற்று அவரை ஒரு சிறிதும் கவனியாத ஒவ்வொரு மனிதனையும் நான் துரோகி யென்பேன்.

—விவேகானந்தர்

இந்திய-யு. எஸ். கல்வி நிலையம்

—ஜான்ஸன் யோசனை—

கல்வியின் பல்வேறு துறைகளின் வளர்ச்சிக்கும் வகை செய்யும் இரு நாட்டு நிலையம் ஒன்றை அமெரிக்காவும் இந்தியாவும் சேர்ந்து அமைக்க வேண்டுமென்று ஜனாதிபதி ஜான்சன் யோசனை கூறியுள்ளார்.

ஆரம்ப மானியமாக, இந்த நிலையத்துக்கு அமெரிக்கா ரூ 142·5 கோடி வழங்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார். அமெரிக்காவின் கையிருப்பிலுள்ள ரூபாய் நிதியிலிருந்து இந்தத் தொகை வழங்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியப் பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்திக்கு வெள்ளை மாளிகையில் மார்ச் 28ஆம் தேதி விருந்து அளித்தபோது ஜனாதிபதி ஜான்சன் இந்த யோசனையை வெளியிட்டார்.

யோசனையைத் திருமதி காந்தி வரவேற்றார். "மக்களோடு மக்கள் ஒத்துழைப்பதை நிலைநிறுத்தி விரிவாக்கும் முயற்சிகள் அனைத்தும் நன் முயற்சிகளே, வரவேற்கத் தக்கனவே" என்றார் அவர்.

ஜனாதிபதி ஜான்சன் தமது விருந்துரையில் பின்வருமாறு கூறினார்.

"இன்று நான் பிரதம மந்திரி காந்தியின் வருகையைக் குறிக்கும் பொருட்டு ஒரு யோசனை கூறுகிறேன். இந்திய நாட்டிலுள்ள ஆராய்ச்சி மனம்படைத்த இளைஞர்களின் நன்மைக்காக ஒரு நிலையான அறக்கட்டளை நிறுவுவோம்.

"பிரதம மந்திரி அவர்களே, உங்கள் அரசாங்கத்தின் அநுமதியுடனும் — அமெரிக்கச் சட்ட மன்றத்தின் அநுமதியுடனும்— நாம் தீர்க்கதரிசனம் வாய்ந்த ஒரு புதிய முயற்சி, ஓர் இந்திய — அமெரிக்க நிலையம், தொடங்கலாமா?

"இந்த நிலையம் இந்தியாவில் நிறுவப்பட வேண்டும்; இந்தியச் செலாவணியில் அமெரிக்கா பெற்றுள்ள பணத்தில் 30 கோடி டாலர் அதன் அறக்கட்டளையாக இருக்க வேண்டும் என்பது என் யோசனை. இந்தப் புதிய முயற்சியுடன் உலகம் நெடுகிலுமுள்ள மற்ற அறநிலையங்களும் ஒத்துழைக்கும் என நான் உறுதியாக நம்புகிறேன்.

"சுதந்திரமான ஒரு தனிக் கழகமாக இந்த நிலையம் அமைக்கப்பட வேண்டும். நம்மிரு நாடுகளின் புகழ் மிக்க பெருமக்கள் அதன் டைரக்டர்கள் குழுவில் இடம் பெற வேண்டும்.

"கல்வியின் எல்லாத் துறைகளிலும் முன்னேற்றத்துக்கு ஊக்கமளிக்கும் விரிவான சாசனம் ஒன்றைப் புதிய நிலையம் பெற்றிருக்க வேண்டும் என்றும் நான் கூறுவேன். விஞ்ஞானம் முன்னேறவும் - ஆராய்ச்சிக்கு ஊக்கமளிக்கவும் — பண்ணையிலும் ஆலையிலும் புதிய போதனை முறைகளை வளர்க்கவும்—நெடுங் காலப் பிரச்னைகளை வெல்லப் புதிய வழிகளுக்குத் தூண்டுதல் அளிக்கவும் அது வகை செய்ய வேண்டும்."

புதிய நிலையம் பற்றிச் செய்தி நிருபர்களிடம் விளக்கம் கூறிய அமெரிக்க அதிகாரிகள், சிறிது காலமாகவே இந்த யோசனை இரு நாட்டு அரசாங்கங்களின் பரிசீலனையிலும் இருந்து வந்துள்ளது என்று தெரிவித்தனர். நிலையம் நிரந்தரமாக இருக்குமென்றும், டைரக்டர்கள் விரும்பினால், அதன் மானிய நிதியின் வருவாயிலிருந்தே செலவுகள் ஈடு செய்யப்பட்டு எப்போதும் அப்படியே நடந்துவரும் என்றும் அவர்கள் கூறினார்கள்.

ஏற்கெனவே இந்தியாவில் செயலாற்றிவரும் வேறு அமெரிக்க நிலையங்கள் தமது சொந்த அநுபவங்களைத் தெரிவித்தும், தமதுசொந்த நிதிகளைக் கொடுத்துங்கூடப் புதிய நிலையத்துக்கு உதவி புரியுமென அதிகாரிகள் எதிர்பார்க்கிறார்கள்.

செனட் சபையின் பெரும்பான்மைக் கட்சித் தலைவர் ஆதரவு

கல்வி வளர்ச்சிக்காக இந்தியா—அமெரிக்க நிலையம் ஒன்று ஏற்படுத்த ஜான்சன் தெரிவித்துள்ள யோசனையை செனட் சபையின் பெரும்பான்மைக் கட்சித் தலைவர் மைக் மான்ஸ்பீல்டு பாராட்டியுள்ளார். "இலட்சியத்தைச் செயலுடன் இணைப்பது அது" என்று அவர் குறிப்பிட்டார்.

செனட் சபையில் பேசுகையில் செனட்டர் மான்ஸ்பீல்டு கூறியதாவது:—

ஜனாதிபதி ஜான்சன் உத்தேசித்துள்ள இந்த இருநாட்டு நிலையம், அமெரிக்காவில் கல்விக்கு முக்கியமான உதவி அளிக்கும் பெரிய நிலையங்களின் அடிப்படையிலேயே திட்டத்தட்டச் செயல்படும் என்று நான் நினைக்கிறேன்.

விஞ்ஞானம், தொழில்நுட்பம், விவசாயத் துறைகளில், புதிய சோதனைத் திட்டங்களுக்கு நிலையம் ஊக்கம் அளிக்கும்.

இந்தியச் சட்டங்களின்படி அது அமைக்கப்படும்; வளர்ந்து வரும் நாடுகளின் தேவைகளை நன்கறிந்த இந்தியத் தலைவர்கள் ஒன்பது பேரையும் புகழ்பெற்ற ஒன்பது அமெரிக்கர்களையும் கொண்ட ஒரு சுதந்திரமான போர்டு அதை நிர்வகிக்கும்.

அது மானியம் வழங்கும் ஒரு நிலையமாகச் செயல்படும்; பெருமளவில் சேர்ந்துள்ளதும் தற்போது பயன்படாமலும் இருக்கும் உதவி ரூபாய்களை அது பயன்படுத்தும்; கல்வி, உடல் நலம், விவசாயம், விஞ்ஞானம், தொழில் ஆகிய துறைகளில் இந்திய—அமெரிக்க மக்களின் வளர்ச்சிக் குறிக்கோள்களுக்காக அது செலவிடப்படும்.

மதி நுட்பமும் தீர்க்க தரிசனமும் வாய்ந்த இந்த யோசனைக்கு இந்தியா, அமெரிக்கா இரு நாடுகளிலும் விரிவான ஆதரவும், சம்மதமும் கிடைக்கக் கூடும். விவரங்கள் வெளியிடப் படுவதை செனட் சபையும் கீழ்ச் சபையும் நாடும் ஆவலோடும், யோசனை கைகூடுவதற்கு உதவும் மனப் பாங்குடனும் எதிர் பார்க்கும் என நான் திடமாக நம்புகிறேன். இந்தக் கருத்தை வெளியிட்டதற்காக ஜனாதிபதியையும் அவரது அரசாங்கத்தையும் நான் பாராட்ட வேண்டும். மேலும், இந்தத் தருணத்தில் அதை வெளியிட்டது. இந்திய மக்களின் மதிப்புக்குரிய சிறந்த தலைவி முதல் முறையாக அமெரிக்காவுக்கு அரசாங்கப் பணியில் வந்திருக்கையில் அவருக்கு அளிக்கப்படும் பொருத்தமான பாராட்டுமாகும்.

கணக்கு இயந்திரம்...

(39ஆம் பக்கத் தொடர்ச்சி)

களும் 30,000 டயோடுகளும் பயன்பட்டன.

இப் புதிய கணிதப் பொறியைச் செய்வதற்கு வேண்டிய திட்டம் 1961 அக்டோபர் மாதம் முடிவு செய்யப்பட்டது. இதற்கு ஐ. நா. நிபுணர்கள் இருவர் ஒத்துழைத்தார்கள். அவர்கள் அமெரிக்காவைச் சேர்ந்த பேராசிரியர் என். சி. மெட்ராப் பாலீஸ், டாக்டர் எஸ். ஒய். யங் என்பவர்களாவர்.

சமரேந்திர குமார் மித்ரா என்பவர் அமெரிக்காவில் ஹார்வர்டு பிரின்ஸ்டன் பல்கலைக் கழகங்களிலும், பிரிட்டனில் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்திலும் ஐ. நாவின் கிளைக்கழகமாகிய "யுனெஸ்கோ" ஆதரவில் கணிதப் பொறிகள் பற்றிப் படித்தவர். 1950ல் இவர் இந்தியப் புள்ளி விவர நிலையத்தில் சேர்ந்தார். இன்றைய இந்தியக் கணிதப் பொறியை உருவாக்கிய குழுவில் இவரும் ஒருவர்.

0

கிராமம் செழிக்க நாடு செழிக்கும்

— செஸ்ட்டர் போல்ஸ், அமெரிக்கத் தூதர் —

ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் தென் அமெரிக்காவிலும் உள்ள நாடுகளில் நாற்பது நாடுகளுக்கு மேற்பட்டவற்றின் பொருளாதார வளர்ச்சியை ஆராய்ந்தறியும் வாய்ப்பு கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக எனக்கு ஏற்பட்டிருக்கிறது.

இந்த அனுபவத்தால் நான் கண்ட திண்ணமான உண்மை ஒன்று என்னவென்றால், வளரும் நாடு எதுவானாலும் சரி, நாடு செழிக்க வேண்டுமாயின் அதற்கு அந் நாட்டின் கிராமங்களும் பண்ணைகளுமே அச்சாணி என்பதாகும்.

ஏன் அப்படி என்றால், இரண்டு காரணங்கள்:

1. வளரும் நாடுகளுக்கெல்லாம் போதிய உணவு கிடைப்பது இன்றியமையாதது.

2. வளரும் நாடுகள் பெரும்பாலானவற்றில் நூற்றுக்கு எண்பது பேர் தம் பிழைப்புக்கு நிலத்தையே நம்பி வாழ்கின்றனர்—நாட்டுக் குடிகளில் ஐவருக்கு நால்வர் ஏழைகளாயிருக்கும் போது, அது எந்த நாடாயினும் செழிப்பாக இருக்க முடியாது.

பின், நாட்டுப்புற மக்களின் வாழ்க்கை நிலை உயரும் வகை என்ன ? அமெரிக்க நிலைமையைப் பார்ப்போம்.

சாதாரணமாக அமெரிக்கப் பண்ணை மிகப் பெரியது ; சராசரியாக, அது ஏறக்குறைய 600 ஏக்கர் இருக்கும். பொதுவாக ஒரு அமெரிக்க விவசாயிக்கு லட்சம டாலருக்கு மேல் மதிப்புள்ள பெரிய பெரிய விவசாய இயந்திர சாதனங்கள் பல உண்டு. இவற்றால் அவருக்குக் கூலிச் செலவு பெரிதும் குறைவு. எனவே அமெரிக்க மக்களில் நூற்றுக்கு 8 பேர்களே விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

ஆகவே இந்தியாவிலும் பாகிஸ்தானிலும், கம்போடியாவிலும், பிரேஜிலிலும், மற்ற வளரும் நாடுகளிலும் இதேபோல் செய்து பார்த்துப் பலன் காணலாம் என்பது அல்ல. இந்நாடுகளிலெல்லாம் வேலையாட்கள் ஏராளமாக இருக்கிறார்கள். அந்த அமெரிக்க முறையை இந்தியாவில் கடைப்பிடிப்பதானால், கோடிக் கணக்கான கிராம மக்களுக்கு வேலை இல்லாமல் போய்விடும்.

ஆகையால் வளரும் நாடுகளில் வேறு வகையில் பிரச்னையை அணுக வேண்டும்.

ஏக்கருக்கு மிகவும் அதிகமாக நெல் விளையும் இரண்டு ஆசிய நாடுகள் ஜப்பானும் தைவானும் தான். நில உடைமைக்கு மிகவும் கடுமையான உச்ச வரம்பு விதித்துள்ள நாடுகளும் அவையே. இவ்விரண்டு உண்மைகளும் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாதன அல்ல. நில உடைமைக்கு மிகவும் கடுமையானது உச்சவரம்பு இருப்

பதால், ஜப்பானிய, தைவானிய விவசாயிகளில் கிட்டத்தட்ட எல்லோருக்குமே நிலம் சொந்தமாக இருக்கிறது. அவர்கள் மிகச் சிறந்த பயிர்களை ஏராளமாக விளைவிக்க மிகுந்த ஊக்கமுள்ளவர்களாய் விளங்குவதில் வியப்பேதும் இல்லை.

ஏக்கருக்குக் கிட்டத்தட்ட 6,000 ராத்தல் அரிசி மகசூல் காணும் ஜப்பானில், (இந்தியாவில் சராசரியாக ஏக்கருக்கு 1,000 ராத்தல் கூட உற்பத்தியாவதில்லை). ஒருவருக்குச் சொந்தமாக இருக்கக் கூடிய விளைநிலம் $7\frac{1}{2}$ ஏக்கர் தான். ஏக்கருக்குச் சராசரியாக 4,000 ராத்தல் அரிசி உற்பத்தி செய்யும் தைவானில், உச்சவரம்பு 10 ஏக்கர்.

இவ்விரண்டு நாடுகளிலும் முதலில், மிகுந்த உற்பத்தி, தீவிர சாகுபடி முறையிலேயே இருந்தது. விவசாய வளர்ச்சியின் முதல் கட்டம் என்று இதைச் சொல்லலாம். இக் கட்டத்தில் ஒவ்வொரு குடும்பமும் தன் சொந்த நிலத்தில் எளிய கருவிகளைக் கொண்டே வேலை செய்தது.

வளர்ச்சியின் இரண்டாவது கட்டத்தில், செங்கல், ஓடு, மேசை, நாற்காலிகள், மிதியடிகள், துணிகள், குப்பிகளில் அடைத்த உணவு முதலியவற்றை உற்பத்தி செய்வதற்கான சிறிய சிறிய ஆலைகள் நாட்டுப்புறங்களில் தோற்றுவிக்கப்பட்டன.

இத் தொழிற்சாலைகளில் வேலை கிடைக்கத் தொடங்கியவுடனே, பண்ணைகளில் மலிவான சிறிய விவசாய இயந்திரங்கள் புகுத்தப்பட்டன; இவற்றால் விவசாயிகள் தங்கள் பண்ணை வேலையை விரைவில் முடித்துக் கொண்டு, உள்ளூர் ஆலைகளிலும் வேலை செய்து அதிகம் சம்பாதிக்கிறார்கள்.

முழு நேரமும் வேலை செய்வதற்கான வாய்ப்புகள் பெருகும் போது, நாட்டுப்புற வளர்ச்சியின் மூன்றாவது கட்டம் தொடங்கக் காண்போம். சிறிய பண்ணைகள் ஒன்று சேர்ந்து பெரிய பண்ணைகளாகும்; அமெரிக்காவில் பயன்படுபவை போன்ற பெரிய இயந்திரங்கள் பயன்படத் தொடங்கும்.

நாட்டுப்புற மக்களின் வாங்கும் சக்தி பெருகவே, அதற்கேற்ப டிரான்சிஸ்டர் ரேடியோ, சைக்கிள், மோட்டார் சைக்கிள், தையல் இயந்திரம், மேசை, நாற்காலி, உடை, கட்டுமானச் சாமான்கள் முதலியவற்றுக்கும் தேவை அதிகமாகும்.

ஆதலால், தீவிர சாகுபடி நடக்கும் சிறிய சிறிய குடும்பப் பண்ணையை அடிப்படையாக வைத்து உருவாகும் நாட்டுப்புறச் செழிப்பே தொழில் பெருக்கத்துக்கு ஆதாரமாகிறது கடைசியாகப் பார்த்தால் முற்போக்கான புதுமைப் பொருளாதாரத்துக்கும் அதுவே ஆதாரமாகும். —"தினமணி"

உங்கள் கண்கள்

கண்ணெனக் காப்போம் என்பதாக அடிக்கடி சொல்கிறோம். கண்ணை எப்படிப்பாது காக்க வேண்டும் என்பது எத்தனை பேருக்குத் தெரியும்? மாஸ்கோ கண் வைத்தியக் கழகத்தின் விஞ்ஞான ஊழியர்கள் எழுதும் குறிப்புகள் கண் பார்வையைப் பழுதின்றிப் பாதுகாப்பதற்கான முறைகளை விளக்குகின்றன.

—ஆசிரியர்.

ஓயாமல் படிப்போருக்கு

ஜி. ஜரூபின், எம். எஸ்ஸி.

(மருத்துவம்)

உங்களுக்குப் பிடித்த பத்திரிகையின் புத்தம் புதிய இதழைப் பிரித்து வைத்துக்கொண்டு படுக்கையிலே படுத்தபடி படிப்பதற்கு இனிமையாகத்தான் இருக்கும். சிறு பிள்ளையாக இருந்தபோது வீட்டிலுள்ள பெரியவர்கள் உங்களைத் தடுத்திருப்பார்கள்; "படுத்தபடி படிக்கக் கூடாது!" என்று கூறியிருப்பார்கள். ஆனால் இப்பொழுது உங்களை யார் தடுக்கப் போகிறார்கள்?

என்றாலும் உங்களைத் தடுத்து நிறுத்துவது மிகமிக அவசியம். கண்ணுக்கும் புத்தகத்திற்கும் 35 முதல் 40 சென்டி மீட்டர் இடைவெளி இருக்கவேண்டும். படுத்துக் கொண்டு படிக்கையில் இந்த இடைவெளி இல்லாமற் போய் விடுவதால், கண்கள் களைப்புற்று பார்வை கலங்கி விடுகிறது. இதனால் தலைவலி உண்டாகிறது. படுத்துக் கொண்டு படிக்க விரும்புகிறவர்கள் வெளிச்சத்தைப் பற்றி சாதாரணமாய்க் கவலைப் படுவதில்லை. அறையில் மேலே ஒரேவொரு விளக்கு மட்டும் இருக்கும்போது எழுத்துக்கள் மீது போதிய வெளிச்சம் படுவதில்லை.

உட்கார்ந்து படிக்கையில் நம் பார்வை கீழ் நோக்கிச் செல்கிறது. ஆனால் படுத்தபடி படிக்கையில் பார்வை அநேகமாய் மேல் நோக்கியே செல்ல வேண்டியிருக்கிறது. இதனால் கண்களின் தசை நார்களுக்கு வேலை அதிகமாகி விரைவில் களைப்பு உண்டாகி விடுகிறது.

குழந்தைகளுக்குப் பார்வை இன்னும் பக்குவமடையும் கட்டத்திலேயே இருப்பதால், படுத்துக் கொண்டு படிக்கும் பழக்கம் குழந்தைகளுக்கு மிகவும் தீமையானது. பிற்பாடு கிட்டப்பார்வை ஏற்படுவதற்கு இப் பழக்கம் வழி கோலிவிடுகிறது.

பயணங்களின்போது நேரம் போவதற்காகப் பலர் புத்தகம் படிக்கிறார்கள். பஸ்களிலும் ரயில் வண்டிகளிலும் கண்ணுக்கும் புத்தகத்துக்குமுள்ள இடை

வெளி அடிக்கடி மாறியபடி இருப்பதால், கண்களுக்கு வேலை அதிகமாகி விரைவில் அவை களைப்புற்று விடுகின்றன.

சாப்பிடும் போதும் சிலர் படிப்பது உண்டு. தட்டிற்கு அருகே புத்தகத்தை வைத்துக் கொள்கிறார்கள். தட்டிற்கும் புத்தகத்திற்குமாகப் பார்வை சதா தாவ வேண்டியதாகிறது. இதனால் கண்களின் தசை நார்களுக்கு வேலை கடினமாகி விடுகிறது.

விளக்கு ஒளியும் கண் பார்வையும்

என். ஷாமினு, எம். எஸ்ஸி (மருத்துவம்)

படிப்பது, எழுதுவது, தைப்பது போன்ற கண்ணுக்கு அருகே செய்யப்பட வேண்டிய வேலைகளுக்கு 60-75 வாட் பல்பைக் கொண்ட விளக்கு மிகவும் உசிதமானது. விளக்கு நமக்கு இடது பக்கத்தில் இருக்க வேண்டும். விளக்கு 'ஷேடி'ன் விளிம்புக்கு வெளியே பல்பு துருத்திக்கொண்டிராமல் இருப்பது நல்லது.

குழல் விளக்குகளின் ஒளி தான் நிற இயைபில் சூரிய ஒளிக்கு மிகவும் ஒத்திருக்கிறது. குழல் விளக்குகள் அறை முழுதும் பரவலாக இதமான ஒளி அளிக்கின்றன. இந்த ஒளி கண் கூசும்படியாக இருப்பதில்லை. விளக்குகளை அதிக உயரத்திலே அமைத்து போதுமான வெளிச்சத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டிய நிலைமைகளில், குழல் விளக்குகளைப் போல வசதியானவை எவையுமில்லை.

பொருள்களைத் தெளிவாகக் காண்பதற்கும், அவற்றின் வேறுபாடுகளை நன்கு அறிந்து இனங்கண்டு கொள்வதற்கும் இயற்கை ஒளிக்கு ஈடானது எதுவுமில்லை. கலப்பு ஒளியில் தெளிவு குன்றி விடுகிறது. செயற்கை ஒளியில் தெளிவு மேலும் பன்மடங்கு குன்றி விடுகிறது. இயற்கை ஒளியும் செயற்கை ஒளியும்கலந்த கலப்பு ஒளி கண்ணுக்குத் தீங்கிழைப்பதாகப் பலரும் நினைக்கிறார்கள். இது தவறு. கரு நிழல்கள் விழாதபடி அறை முழுதும் வெளிச்சம் சீராகவும் பரவலாகவும் இருக்குமானால், கலப்பு ஒளியால் கண்ணுக்கு எவ்வித தீங்குமில்லை.

கண் பார்வையைப்பாதுகாத்துக் கொள்ள விரும்புவோர் தம்மைச் சுற்றிலுமுள்ளவற்றின் நிறங்கள் தக்கபடி அமைந்திருக்கும் படிச் செய்து கொள்ள வேண்டும். கடைகள், பள்ளிக்கூடங்கள், வேலை இடங்கள் முதலியவற்றின் கூரைகளும் சுவர்களின் மேற்பகுதிகளும் வெண்மையாக இருந்தால், அறையெங்கும் ஒளி சீராகப் பரப்பப்படுவதற்கு வசதியாக இருக்கும். அடிச் சுவர்கள், பள்ளிக்கூட மேஜைகள், இயந்திரங்களின் நிலையான அடிப்பகுதிகள் முதலியவை வெளிர் பச்சை அல்லது மஞ்சள் நிறமாய் இருப்பது நல்லது. பச்சை நிறம் கண்ணுக்கு இதமானது என்பதையும், கண்ணில் இரத்த ஓட்டத்தை அபி

விருத்தி செய்கிறது என்பதையும் ஆராய்ச்சிகள் ஊர்ஜிதம் செய்கின்றனர்.

கண்ணாடி போட்டுக் கொள்ளுங்கள்

டாக்டர்

இ. மல்கோவ்ஸ்காயா

கண்ணாடி போட்டுக் கொள்வது அவசியமான பிறகுங்கூட பல காலம் வரை சிலர் கண்ணாடி போடாமல் இருந்து விடுகிறார்கள். காலத்தில் கண்ணாடி போட்டுக் கொள்ளாவிடில் கிட்டப் பார்வை மேலும் மேலும் மோசமாகி விடுகிறது. வெள்ளெழுத்துடையவர்கள் உடனே மூக்குக் கண்ணாடி உபயோகிக்காவிடில், கண்கள் விரைவில் களைப்புற்று தலைவலி, கண்வலிபோன்ற உபாதைகள் உண்டாகின்றன. ஒன்றரைக் கண்ணைத் திருத்துவதற்கு மூக்குக் கண்ணாடி போட்டுக் கொள்வது அவசியமாகும்.

கண்ணாடிகளின் திறன்கள் ஒரே மாதிரி இருப்பினும், பிறர் ஒருவரது மூக்குக் கண்ணாடியைப் போட்டுக் கொள்ளக் கூடாது. கண்ணாடி வில்லைகளின் மையம் கண்களின் மையத்துக்கு நேர் எதிரே இருப்பது அவசியம். மேலும் கண்ணாடி மூக்கின் கீழ்ப்புறம் நழுவக் கூடாது. தலையை அசைக்கையில் கண்ணாடிகள் ஆடக் கூடாது. ஆகவே கண்ணாடியின் பிரேம் அவரவர் முகத்துக்கும் ஏற்ற அளவில் இருப்பது அவசியமாகும்.

குழந்தைகளுக்கு கிட்டப் பார்வை வரக் காரணம் என்ன ?

பேராசிரியர்

இ. அவெத்திசோவ்

வேலை இடத்தில் போதிய வெளிச்சம் இல்லாமை, படிக்கும் போதும் சரியான நிலையில்அமர்ந்திராமை, மிகச் சிறிய எழுத்துக்களைப் படித்தல், படுத்துக் கொண்டு நெடுநேரம் இரவில் படித்தல் ஆகிய இவை யாவும் கண்களைக் களைப்புறச் செய்து கிட்டப் பார்வையை உண்டாக்கி விடுகின்றன.

வீட்டில் குழந்தைகள் படிப்பதற்கும், எழுதுவதற்கும் வெளிச்சமான ஒரு மூலையை ஒதுக்கித் தரவேண்டும். இவ்விடம் சன்னலின் அருகே இருப்பது நல்லது. இரவில் 60 வாட் புல்பும் ஒளி புகாத ஷேடும் பொருத்தப்பட்ட மேஜை விளக்கும் அவசியமாகும். இடது புறத்திலிருந்து விளக்கொளி மேஜையின் மீது மட்டும் வீச வேண்டும்; நேரே கண்ணில் படக்கூடாது. மேஜையின் உயரம் அதிகமாக இருந்தால், நாற்காலியின் மீது பலகை வைத்து உயரமாக்கிக்குழந்தையை உட்காரச் சொல்ல வேண்டும். நாற்காலியை 3-5 சென்டிமீட்டர் மேஜைக்கு உட்புறமாக இருக்கும்படி இழுத்துப் போட வேண்டும்.

முன்புறமோ பக்கவாட்டிலோ சாயாமல் நேரே நிமிர்ந்து உட்

கார்ந்து படிப்பதற்கும் எழுது வதற்கும் குழந்தையைப் பழக்கப் படுத்த வேண்டும். புத்தகமும் நோட்டும் குழந்தையின் கண்களி லிருந்து 35-40 சென்டி மீட்ட ருக்குக் குறையாத தொலைவில் இருக்க வேண்டும்.

அரை மணியிலிருந்து முக்கால் மணி நேரம் வரை படித்தபின், அல்லது எழுதியபின், குழந்தை சற்றுநேரம் ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும். திறந்த வெளியில் விளையாடிவிட்டு வரும் படி செய்வது நல்லது.

நீலம், பச்சை, மஞ்சள்

டாக்டர் எ. எகோவ்லெவ்

கறுப்புக் கண்ணாடிகள் (கூலிங் கிளாஸ்) பிரகாசமான சூரிய ஒளியிலிருந்தும் கதிர்களிலிருந் தும் கண்களுக்குப் பாதுகாப்பு அளிக்கின்றன. இக் கண்ணாடி களில் பல வகை உண்டு. சில எல்லா நிறங்களையும் ஓரளவு கிர கித்துக் கொண்டு விடுகின்றன. சில நீல ஒளி அல்லது மஞ்சள் ஒளியைத் தவிர்த்து ஏனைய நிற ஒளிக்கதிர்களைக் கிரகித்துக் கொள்கின்றன.

கண்ணுக்குப் புலப்படும் ஒளி மட்டுமின்றி, கண்ணுக்குப் புலப் படாத புற-ஊதாக் கீழ்க் கதிர் கள், சிவப்புக் கீழ்க் கதிர்கள் போன்றவையும் உண்டு. இவற் றாலும் கண்ணுக்குத் தீங்கு நேரி டலாம். வெயில் அதிகமான நாட்களில் திறந்த வெளிகளிலே 25 முதல் 35 சதவீதமான ஒளி யைக் கிரகித்துக் கொள்ளக் கூடிய வர்ணக் கண்ணாடிகள் போட்டுக்கொள்வது நல்லது.

கிட்டப்பார்வை அல்லது தொலை பார்வையுள்ளவர்கள் இந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்யும் 'பவரில்' அமைந்த வர் ணக் கண்ணாடிகளை உபயோகிக்க வேண்டும்.

மின்சார வெல்டிங் வேலைகள் செய்வோரும் குவார்ட்ஸ்விளக்கு களின் கதிர் வீச்சுக்கு உட்படு வோரும் கரிய மஞ்சள்-பச்சைக் கண்ணாடிகளைக் கொண்டு தம் கண்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும்.

உங்களுக்குத் தெரியுமா?

...பிறந்த குழந்தையின் கண் ணிலுள்ள 'லென்ஸ்' கோலி போல உருண்டையாக இருக்கி றது. பிற்பாடுதான் இது இரு புறக் குவிலென்ஸாக மாறுகி றது.

...மனிதனது கண் ஒரு நாளைக்கு ஒரு கன சென்டிமீட் டர் வீதம் கண்ணீர் வடிக்கிறது.

... ஐரோப்பாவின் முதலா வது கண் ஆஸ்பத்திரி 1805-ல் மாஸ்கோவில் திறக்கப்பட்டது.

... 1917க்குமுன் ரஷ்யாவில் 300 கண் டாக்டர்கள் தான் இருந்தனர்; இன்று 13,000 பேர் இருக்கின்றனர்.

—சோவியத்நாடு

நாக்கின் நோய்கள்

ஜி. கொயிலோ, எம். பி., எம். ஆர். ஸி. பி.

பன்னெடும் காலமாக நாக்கை ஆரோக்கியத்தின் கண்ணாடியாகக் கருதி வந்திருக்கிறார்கள். இதனால்தான் தாய்மார்கள் குழந்தைகளின் நாக்கை அடிக்கடி பார்த்து, அவசியம் என்று பட்டால், அடுத்த நாளே விளக்கெண்ணெய் கொடுத்துவிடுகிறார்கள். டாக்டர்களும் "எங்கே நாக்கு" என்று நாக்கை நீட்டச் சொல்லிப் பார்க்கிறார்கள். ஆயினும் அது ஒன்றை மட்டும் வைத்து, எதையும் அவர்கள் தீர்மானித்துவிடுவதில்லை.

எலும்பு இல்லாத ஓர் உறுப்பு நாக்கு. முழுதும் தசையால் ஆனது. இதனால் அதற்குத் தன் அலுவல்களை நன்கு புரண்டு இயங்கச் செய்ய இயலுகிறது. மூன்றில் இரண்டு பங்காக உள்ள இதன் முன் பகுதியானது பின் பகுதியினின்றும் V வடிவப் பள்ளம் ஒன்றால் பிரிக்கப்பட்டுள்ளது. நாக்கின் மேல் பரப்பு ஒரு வித சிறப்பு திசு அணுக்களால் ஆக்கப்பட்டது. இந்த எப்பித்தீலியத்திசு அணுக்கள் நாக்கில் பல வடிவங்களில் அமைந்திருக்கும். பெரும்பாலும் சிறு சிறு கூம்பு வடிவ நீட்சிகளாக, சுணைகளாக இருக்கும். இந்தச் சுணைகள் ஓர் அங்குலத்திலே இருபதில் ஒன்று முதல் இரண்டு பங்கு நீளம் இருக்கும். இவை இழைச் சுணை (filiform papilla) எனப்படும். நாக்கின் மேற் பக்கத்தில் வரிசை வரிசையாக அமைந்திருக்கும். ஓயாமல் அழிந்து கொண்டும், உண்டாகிக் கொண்டும் இருக்கும். சிறு குழந்தைகள் நாக்கிலே இழைச் சுணைகள் குறைவாக இருக்கும். ஆங்காங்கு இந்தச் சுணைகளுக்கு இடையிலே, முக்கியமாக, நாக்கின் நுனியிலும் ஓரங்களிலும் இவைகளை விடச் சற்றுப் பெரிய சுணைகள் காணப்படும். அவை சிவப்பு நிறமாக இருக்கும். அவைகளுக்குக் காளான் சுணை (fungiform papilla) என்று பெயர். பின் பகுதியில், ஆனால் V வடிவப் பள்ளத்துக்கு முன்னால் 8, 10 மிகப் பெரிய சுணைகள் உள்ளன. இவை அகழிச் சுணைகள் (Circumvallate Papilla) எனப்படும். இவை ஒவ்வொன்றைச் சுற்றிலும் ஒரு பள்ளம் இருக்கிறது. அதற்குள் அநேகம் சுவை அரும்புகள் (taste bud) அமைந்துள்ளன. நாவின் பின் பகுதி சாதாரணமாகக் கண்ணில் படாது. நாக்கை நீட்டினால் பார்க்கலாம்; அல்லது தொண்டைக்குள் கண்ணாடியை வைத்துப் பார்த்தால் தெரியும்

சுவை அரும்புகளின் வாயிலாக உணவின் சுவைகளை அறிகிறோம். இவை பெரும்பான்மை அகழிச் சுணைகளிலும் சிறுபான்மை காளான் சுணைகளிலும் புதைந்துள்ளன. இனிப்பு, புளிப்பு, கசப்பு, உப்பு இந் நான்கு சுவைகளையும் உணரத் தனித் தனியாக நான்கு வித அரும்புகள் இருக்கின்றன என்று தெரிகிறது.

நாக்கில் இரத்த ஓட்டமும் நரம்போட்டமும் அதிகம். அதில் நிறைய உணர்ச்சி நரம்புகளும் (Sensory nerve) செய்கை நரம்புகளும் (Motor nerve) உள்ளன. முன்னவை சுவை உணர்ச்சியையும் வேறு பல உணர்ச்சிகளையும் மூளைக்குச் சுமந்து செல்லுகின்றன. செய்கை நரம்புகளோ மூளையினின்றும் துடிப்புகளைக் கொண்டு வந்து, நாம் பேசுவதற்கும் விழுங்குவதற்கும் வேண்டிய நாவின் இயக்கங்களைச் செய்கின்றன.

நாக்கட்டு

பிறக்கையிலே நாக்கில் சில குறைபாடுகள் இருப்பதுண்டு. அவற்றில் ஒன்று கலினம் (frenum) சற்று குட்டையாக இருத்தல். இதற்கு நாக்கட்டு (tongue-tie) என்று பெயர் கூறுவர். கண்ணாடியிலே நாக்கின் நுனியைத் தூக்கிவிட்டுப் பார்த்தால், அதன் அடியில் ஒரு சிறு தசை செங்குத்தாய் நிற்பது தெரியும். அதுவே கலினம். நாக்கின் நுனிப்பகுதியை வாயின் தளத்தோடும், ஈற்றின் பின் புறத்தோடும் அது இணைக்கிறது. பிறக்கையிலே நாக்கு நுனி முழு வளர்ச்சியும் அடைந்திராது. எனவே கலினம் மிகவும் முன்னாலே இருப்பது போல் தோன்றும். ஆனால் குழந்தை வளர வளர, நாக்கு நுனியும் வளரும்; பிறகு கலினம் அப்படித் தெரியாது. மேலே கண்டபடி, சில குழந்தைகளுக்கு அது குட்டையாக இருக்கும். இதனால் நாக்கைச் சரியானபடி நீட்ட முடியாமல் போகிறது. இதன் விளைவாக, குழந்தைகளுக்குப் பால் குடிப்பதில் சிறிது சிரமம் ஏற்படலாம். ஆனால் இதற்காக அந்தச் சதையை வெட்டிவிட வேண்டியதில்லை. தாய் முலைக் காம்பை நன்றாக இழுத்துக் கொடுக்கப் பழகிக்கொண்டால், அதுவே போதும்.

நாக்கட்டினால் பேச்சிலும் ஏதேனும் குறை ஏற்படலாமோ என்று பெற்றோர்கள் அஞ்சக் கூடும். அப்படி ஏற்படாது. T, D, L, N, R ஆகிய மெய்யெழுத்துக்களை உச்சரிப்பதற்கு நுனி நாவை உயர்த்த வேண்டும் என்பது உண்மை தான்; ஆனால் நாக்கட்டு இருந்தாலும், இவற்றை உச்சரிக்க இயலும் என்று வல்லுநர்கள் கூறுகிறார்கள். வேண்டியதெல்லாம் சிறு அளவு பயிற்சியே யாகும். கலினத்தை வெட்டுவதற்கு அவசியம் இல்லை.

பெரு நாக்கு

வாய்க்குள் அடங்காத பெரு நாக்கோடு (large tongue) சில குழந்தைகள் பிறக்கின்றன.

இதனால் பால் ஊட்டுவது சிரமமாகிறது. இரத்தக் குழாய்களிலாவது நிணநீர்க்குழாய்களிலாவது (lymph vessel) உண்டாகும் சுழலைகள் (tumour) காரணமாக இந்தக் குறைபாடு ஏற்படலாம். சுழலைகளுக்கு அறுவைச் சிகிச்சை தேவை.

கிரீட்டின் குழந்தைகளுக்கும், அதாவது, தைராயிடுச் சுரப்பே இல்லாத குழந்தைகளுக்கும் நாக்குப் பெரிதாக இருக்கும். பிறந்ததும், சில வாரத்திற்குத் தேவையான அளவு சத்துணவும் திரவமும் கொடுத்து, தைராயிடுச் சத்தையும் வாய் மூலம் உட்செலுத்திவிட்டால், இக்குறைபாடு நீங்கிவிடும்.

சின்ன நாக்கோடோ, பிளவுபட்ட நாக்கோடோ குழந்தைகள் பிறப்பது அரிது.

காலத்துக்கு முன்னால் பிறந்த குழந்தைக்கும் நாக்கு அண்ணத்தில் ஒட்டிக்கொள்வதுண்டு.

மாப் படிவு

குழந்தையின் நாக்கில் வெண்ணிறமான மாவு படிந்திருந்தால் (furred tongue), அதைக் கண்டு பெரும் கவலை கொள்ளுகிறார்கள். ஓர் அளவுக்கு இப்படிவு இயல்பான காரியம். காலையில் படுக்கை விட்டு எழுந்ததும் பார்த்தால், எல்லாருடைய நாக்கிலும் லேசாக மாவு படர்ந்திருப்பது தெரியும். பாக்டீரியா, கோழை, உணவின் சிதைந்த பகுதிகள், முன் குறிப்பிட்ட இழைச் சுணைகளின் சிதைவுகள்—இவற்றின் சேர்க்கையே இந்தப் படிவு. நாக்கின் அசைவு குறைவாக இருக்கும் போதெல்லாம் இது அதிகமாக இருக்கும். உதாரணமாக, வியாதி வந்துவிட்டால் அதிகரிக்கும். மூக்கடிச்சதை (adenoids), தொண்டைச்சதை (tonsil) இவற்றிலே நோய்த்தொற்று கண்டுள்ள குழந்தைகளுக்கு இது ஏற்படக்கூடும். வாய் வறட்சி இருந்தால், மாப் படிவு இருக்கும். வாயால் மூச்சு விடுகிறவர்களுக்கும் இக் குறைபாடு ஏற்படலாம்.

ஜீரணக் கோளாறுகளுக்கும் இதற்கும் உள்ள தொடர்பு அத்தனை துல்லியமாக இல்லை. குடலைக் கழுவுவதால் பசி நன்றாக எடுக்கலாம். ஆனால் நாக்கு சுத்தமாகும் என்று கூறுவதற்கில்லை. மலச்சிக்கல் உள்ள குழந்தைகள் அனைவருக்கும் மாப் படிவு காணுவதில்லை. குடலில் புழு இருந்தாலும், இது ஏற்படும் என்பதும் கிடையாது. எனவே நாக்கில் மாப் படிந்திருக்கிறதே என்று பேதிக்குக் கொடுக்கத் தேவை இல்லை.

கொப்புளங்கள்

வாயிலும் முன் தொண்டையிலும் (pharynx) கிருமித் தொற்று கண்டால், அது நாக்கையும் பாதிக்கும். வைரஸ் தொற்றுக்கள் நாக்கிலே புண்ணையும் கொப்புளங்களையும் பிறப்பிக்கலாம். கொப்புளங்கள் சிறிது நேரத்துக்கெல்லாம் வெடித்து விடும். எனவே அவற்றைக் காண இயலுவதில்லை. ஆனால் புண்

களைப் பார்க்கலாம். இவற்றால் வலி ஏற்படும். சாப்பிடுவது தொந்தரவாக இருக்கும். தட்டம்மை (measles), சின்னம்மை (chicken pox) கண்டவர்களுக்கு நாக்கு புண்ணாக இருக்கும். தொண்டை அடைப்பான் (diptheria) நோயில் உண்டாகும் சவ்வானது வாயின் இதர பாகங்களிலிருந்து நாக்குக்குப் பரவலாம். சரியான உணவு உண்ணாத குழந்தைகளுக்கு வாயும் தொண்டையும் புண்ணாகி, நாக்கில் சிறு சிறு வெள்ளைத் திட்டுகள் தெரியும்.

வேறு சீர்கேடுகள்

உடம்பின் உயிர்ப்பொருள் ரசாயன மாற்றத்திலும் (metabolism) இரத்தத்திலும் ஏற்படும் சிலகோளாறுகள் நாக்கைப் பாதிக்கும். உதாரணமாக, சில குழந்தைகளுக்கு இரத்தத்தில் வைட்டமின் பி குறைவாக இருக்கும். இதனால் இவர்கள் நாக்கு செக்கச் செவேல் என்று சிவந்து, வீங்கி வலிக்கும்; சில கேசுகளில் இழை சுணைகளும் வீங்கிப் போகலாம். ஏதேனும் நெடு நாளைய நோய் காரணமாகச் சாப்பிடாத குழந்தையின் நாக்கு வழவழப்பாக, சிவப்பு நிறமாக இருக்கும்.

மஞ்சட்காமாலை கண்டவர்கள் நாக்கு மஞ்சளாகத் தெரியும். பிறவியிலேயே இருதய வியாதி இருந்து, சிரை (venous) இரத்தமும் தமனி (arterial) இரத்தமும் கலக்குமாயின், நாக்கின் நிறம் நீலமாக இருக்கும்.

வரப்பு நாக்கு (geographic-tongue) நோயிலே நாக்கில் ஆங்காங்கு இழைச் சுணைகள் சுருங்கிச் சுருண்டு போகும். பொதுவாக விளிம்பிலிருந்து பதன் கெடத் தொடங்கும். இந்த இடங்களில் ஓரங்களில் சுற்றிலும் வரம்பு கட்டியது போல் சிறிது உயர்ந்திருக்கும். வரம்புகள் கருமை கலந்த மஞ்சள் நிறமாக இருக்கும். பதன் கெட்ட இடங்களில் வலிக்கும். உண்பதற்குக் கஷ்டமாக இருக்கும். இவை தவிர, எவ்விதமான அறிகுறியும் இருப்பதில்லை. இந்தக் கோளாறு விட்டு விட்டுப் பல ஆண்டுகள் இருக்கும். தானுகக் குணமாகும். இதற்கு மருந்து கிடையாது.

காயம்

குழந்தை நாக்கிலே சில சமயம் காயம் ஏற்படக் கூடும். இது ஏதேனும் விபத்தில் நிகழலாம். கத்தியால் நாக்கை வெட்டிக் கொள்ளலாம். இசிவு வந்து, நாக்கைக் கடித்து விடுவதும் உண்டு. இது மாதிரி நிலைமையில் பற்களுக்கு இடையில் கனத்த அட்டைத் துண்டையாவது கார்க்கையாவது கொடுத்து விட்டால் காயம் ஏற்படாது. ஏதாவது பல் வரிசை தப்பி இருந்து, நாக்கை உறுத்தலாம். தளர் இளநடையபிலும் மதலைகள் கெட்டில் மூக்கில் வாயை வைத்துவிடுவார்கள். அதனால் நாக்கு வெந்து போகும். நாக்கால் மின்குமிழை நக்கினால், மின் தாக்கு ஏற்படலாம். மருந்துகளைத் தெரியாத்

தனமாக விழுங்கிவிடுவதனுல் நாக்கு புண்ணுவதும் உண்டு.

துருதுரு நாக்கு

சில குழந்தைகள் நாக்கைத் துருத்திக்கொண்டே இருப்பார்கள். அவர்கள் மன வளர்ச்சி சரியாகத்தான் இருக்கும்; ஆனுல் தொண்டைச் சதையும் மூக்கடிச்சதையும் பெருத்திருக்கும். மன வளர்ச்சி சரியாக இல்லாத குழந்தைகளும் கூட நாக்கைத் துருத்தி வைத்துக் கொள்வதுண்டு. தைராயிடு சுரப்பி மிகவும் குறைவாக இருந்தால் குழந்தையின் நாக்கு வாய்க்குள் அடங்காத அளவுக்குப் பெருத்திருக்கும். உளவாற்றல் குறைவாக உள்ள மங்கோலிய வகைக் குழந்தை சதா காலமும் நாக்கை வெளியில் நீட்டிக்கொண்டும், பல்லால் அதனை அதுக்கிக் கொண்டும் இருப்பான்; அதில் வெடிப்புக்கள் கூட இருக்கும். உளவாற்றல் குறைவோடு பிறக்கும் குழந்தையும் மூளையழற்சியினுல் (encephalitis) உளவாற்றல் குன்றிப் போன குழந்தையும் சதா நாக்கை நீட்டி வைத்துக்கொண்டு, எச்சிலை ஒழுக விட்டுக்கொண்டிருப்பார்கள். இந்தஒழுக்கு வாயின் தளத்தில் உள்ள தசைகளின் வலுவின்மையால் ஏற்படுவதாகும். நரம்பாற்றல் குறைந்த குழந்தைகள் ஓயாது நாக்கை இப்படியும் அப்படியும் போட்டுத் துழாவிக் கொண்டும், வித விதமான சத்தங்களை எழுப்பிக்கொண்டும் இருப்பார்கள். சில நோய்களில் நாக்குஎப்பொழுதும் இலேசாகத் துடித்துக் கொண்டே இருக்கும். இன்னும் சில வியாதிகளில் நாக்கை ஒரே நிலையில் சில நிமிஷம்கூட வைத்திருக்க முடியாது. குறிப்பாக, சுழல்வாதம் (chorea) கண்ட குழந்தைகளுக்கு இப்படி இருப்பதுண்டு.

பேசும் காரியத்தில் நாக்குக்கு ஒரு பங்கு இருப்பினும், குழந்தைக்குப் பேச முடியாமலோ அல்லது பேசக் கஷ்டமாகவோ இருந்தால், அதற்குக் காரணம் பெரும் பாலும் காது மந்தமும் மூளைக் கோளாறுமாகவே இருக்கும்.

நாக்கை மூங்கில் குச்சி முதலியவைகளால் வழிக்கத்தேவை இல்லை. அதன் மேல் படிப்பை மெதுவாகத் தேய்த்தால் போதும். பிறந்த குழந்தைகள் விஷயத்திலும், வளர்ந்த குழந்தைகள் விஷயத்திலும் இதனை நினைவில் இருத்திக்கொள்வது முக்கியம். பெரிய குழந்தைகளை நன்றாக மென்று சாப்பிடச் சொல்லி, சாப்பிட்டவுடன் வாய் கழுவச் சொல்ல வேண்டும்.

நாக்கில் எவ்விதமான நோய் உண்டானுலும், உடனே மருத்துவ நிபுணரிடம் காட்டுவது இன்றியமையாததாகும்.

—"நல்வழி"

கட்டுரையா?
கணக்குப்பதிவேடா?
கவிதையா?

இளைஞர்களுக்கு வேண்டுகோள் :

"இளமை என்பது, வருடங்களைப் பொறுத்தது மட்டுமல்ல; இளமை என்பது ஒரு மனநிலை. அது என்றென்றும் மங்காத உணர்ச்சி; ஏழைகளிடம் பரிவு, துன்பத்தைக் காணச் சகியாத ஒரு மனநிலை; கண்ணீரைத் துடைக்க வேண்டும் என்ற ஒரு கவலை—இவைகளெல்லாம்தான், இளமையின் அறிகுறி."

"உடலை நெருக்கிப் பிடித்துக் கொள்கின்ற சட்டையைப் போட்டுக்கொள்வதாலோ, அல்லது புதுப் புது பாடல்களை நாம் உரக்க உச்சரித்துக் கொண்டிருப்பதாலோ மட்டும், நாம் இளமையை வளர்த்துவிட முடியாது. அந்த முறையிலே, இந்த நாட்டின் இளைஞர்கள்—தாங்கள் இந்த நாட்டிலே பிறந்தவர்கள்—இந்தக் கிராமத்துப் பெரு மக்களிடையே தோன்றியவர்கள் என்று சொல்வதில், அவர்களுக்கு இளப்பமோ, தாழ்வோ இல்லை. உண்மையிலேயே, அவர்களிடமிருந்து தோன்றியவர்கள், அவர்களுக்காகவே வாழ வேண்டியவர்கள்; அவர்களிடமே மீண்டும் சென்று சேரக் காத்துக் கொண்டிருக்கின்றவர்கள் என்ற ஓர் ஒருமை உணர்ச்சியும், இணைப்பு உணர்ச்சியும், உரிமை உணர்ச்சியும் அந்த மாணவர்களுள் இளைஞர்கள் உள்ளத்திலே வளர்வதற்கு, பயிற்சி அணிகள் பயன்பட வேண்டும்.

வாழ்க்கையைப் பலவிதமாக வாழலாம். வாழ்க்கையை ஒரு கட்டுரை போல் — கடினமான உரைநடையிலே எழுதப்பட்டுள்ள ஒரு கட்டுரை போலவும் வாழலாம். அல்லது, நமக்கு வாழ்க்கையிலிருந்து என்னென்ன கிடைக்கிறதென்று, ஒரு லாப நஷ்டக் கணக்கு பதிவேட்டுப் புத்தகம் மாதிரியும் வாழலாம். அல்லது இன்பக் கவிதையாகவும் வாழலாம்.

அதில் கணக்குப் பதிவேடாக நீங்கள் வாழப் போகின்றீர்களா? அல்லது அது ஓர் உரைநடை — கட்டுரையாக — வாழப் போகின்றீர்களா? காடு முரடான இலக்கம் நிறைந்த ஒரு வசன நடையைப்போல் வாழப்

" ஆரம்பக் கல்வி "
ஆபீஸ்.
94–95, புதுத்தெரு,
மண்ணடி, சென்னை-1.

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

ரிக்கார்ட் ஷீட்டுகள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

பிராவிடெண்ட் பண்டு கட்டும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 1-00

வருடாந்திர பிராவிடெண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

Form of Certificate of income
வருமான நற்சாட்சிப் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

தபால் செலவு பிரத்யேகம்

முக்கிய அறிவிப்பு

Book Post-ல் பாரங்களை அனுப்ப தபால் செலவு:

25 பாரங்களுக்கு 14 nP.
50 பாரங்களுக்கு 26 nP.
75 பாரங்களுக்கு 41 nP.
100 பாரங்களுக்கு 50 nP.

வேண்டிய பாரங்களுக்கு தபால் செலவு சேர்த்து முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

போகின்றீர்களா? அல்லது உணர்ச்சி பொங்குகின்ற, உண்மை ததும்புகின்ற, அன்பு நிலவுகின்ற, கவிதையாக அதை வாழப் போகின்றீர்களா என்பதே இளைஞர்களுக்கு இன்று சமுதாயம் விடுக்கின்ற கேள்வி.

இந்த நாட்டிலே, படித்தவர்களுக்கும், பாமரர்களுக்கும் இடையே இருக்கும் வேறுபாடு நீங்க வேண்டுமென்றால், பிளவு தீர வேண்டும் என்றால், படித்தவர்கள், தங்கள் படிப்பை, குடத்துக்குள் வைத்த விளக்காக வைத்துக் கொள்ளாமல்,குன்றின் மேல் ஏற்றுகின்ற விளக்குபோல் ஏற்றி, தங்கள் திறமையும், தங்கள் அறிவும் ஊர்ச் சமுதாயத்திற்குப் பயன்பட வேண்டும் என்ற ஓர் உணர்விலே, தங்கள் படிப்பை பாமர மக்களும் பயன்படுத்திக் கொள்ளுகின்ற வகையிலே கிராமங்களுக்குச் சென்று மக்களுடன் உறவாட வேண்டும் —அவர்கள் உள்ளங்களுடன் உறவாட வேண்டும் — என்ற அடிப்படையிலேதான் — கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் படிக்கும் இளைஞர்களுக்கு, இளைஞர் முகாம்களும், பயிற்சி வகுப்புக்களும் நடத்தும் பொறுப்பை கிராமப் பயிற்சி நிலையங்கள் ஏற்றுக்கொண்டிருக்கின்றன.

கவிதைகள் யாவை?

கவிகள் கண்ட கனவு என்ன? தியாக சீலர்கள் கண்ட கனவு என்ன? இந்த நாட்டிலே, ஓர் இன்ப சமுதாயத்தை நிலை

(57ஆம் பக்கம் பார்க்க

கல்வித் துறைச் செய்திகள்

99 ஆசிரியர்களுக்குத் தேசிய விருது

அதில் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் விவரம்

புது டில்லி, செப், 5—சமூகத்துக்குப் பாராட்டத்தக்க சேவை செய்ததற்காக 99 ஆசிரியர்களுக்கு இவ்வாண்டு தேசிய விருதுகள் வழங்கப்படும் என சர்க்கார் அறிவித்துள்ளது. அவர்களில் 51 பேர் ஆரம்ப ஆசிரியர்கள்; 39 செகண்டரி ஆசிரியர்கள்; 9 பேர் சமஸ்கிருத பாடசாலை ஆசிரியர்கள். அவர்களுடைய பெயர்களும் வெளியிடப்பட்டுள்ளன.

ஒவ்வொருவருக்கும் நற்சாட்சிப் பத்திரமும், ரூ. 500 ரொக்க வெகுமானமும் அளிக்கப்படும்.

சென்னை ராஜ்யத்தில் விருது பெறும் ஆசிரியர்கள் பின்வருமாறு:—

ஆரம்ப ஆசிரியர்கள்: திரு. கே. எஸ் ராஜலிங்கம்; திரு. ஏ. ஜேம்ஸ் டேவிட் திரு. எஸ். நடேசபிள்ளை.

செகண்டரி ஆசிரியர்கள் திரு. டி. கே. ஷண்முக சுந்தரம்; திரு. பி. பாலகிருஷ்ண ரெட்டி; திரு. எம். பி. எச். ஆல்பர்ட்; திரு. எஸ். ராமசாமி நாயுடு; திரு. எஸ். நரசிம்மன்.

மைசூர் ராஜ்யம்

ஆரம்ப ஆசிரியர்கள் திரு. பி. ஸித்தலிங்கையா; திரு. டி. வி. பாலுலாட்; திரு. ஏ. வீரஷெட்டியப்பா.

செண்டரி ஆசிரியர்கள்: திரு. எஸ். பி. இஞ்சால்; திரு. ஜி. ஜே.

இளைஞர்களுக்கு...

(56ம் பக்கத் தொடர்ச்சி)

நாட்ட வேண்டுமென்பதே; அதற்காகவே அவர்கள் தொண்டாற்றினர், தியாகம் புரிந்தனர்; அதற்காகவே, தமது உடல், பொருள், ஆவி அனைத்தையும், வேள்வித் தீயில் அர்ப்பணம் செய்த தியாக புருஷர் அவர்கள். அவர்களின் தொண்டெல்லாம், நிறைவு பெறுமா? அவர்கள் கண்ட கனவு, நிறைவு பெறுமா? நனவாகுமா?

இந்தக் கேள்விக்குப் பதில் கூறுவது, இளைஞர்களாகிய உங்கள் கையில் இருக்கிறது. அந்த மகத்தான பொறுப்பை உணர்ந்து, நீங்கள் உங்கள் திறமையை நாட்டிற்குக் காணிக்கையாகச் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

—“கிராம நலம்”

மூங்கலாய் திரு. ஏ ஆர். ஹனுமந்தாச்சார், ஹாலப்பநவர்.

மத்தியப் பிரதேசத்தில் விருதுபெறும் இரண்டு செகண்டரி ஆசிரியர்களில் ஒருவர் திருமதி மைத்ரேயி பத்மநாபன்.

15 ஆண்டுகளில் தொடக்கக் கல்வி முன்னேற்றம்

சென்னை, செப். 1—கடந்த 1950 முதல் தொடக்கக் கல்வியில் இந்தியா கண்டுள்ள முன்னேற்றத்தைக் குறித்து மத்திய சமூக நலக் கழகம் செய்துள்ள மதிப்பீட்டில் பல சுவையான விஷயங்கள் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

இப்போது இந்தியாவிலுள்ள ஆறு முதல் பதினொரு வயதிற்கிடைப்பட்ட குழந்தைகளில் பத்தில் எட்டுப்பேர் பள்ளிகளில் கல்வி கற்று வருகின்றனர். 1950 ஆம் ஆண்டு பத்தில் நால்வரே பள்ளி சென்றனர்.

தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் மேற்சொன்ன வயதுப் பிரிவைச் சேர்ந்த குழந்தைகளில் பத்தில் ஒன்பது பேர் 1965 ஆம் ஆண்டு பள்ளி சென்றனர். 1950 ஆம் ஆண்டு பத்தில் மூன்று குழந்தைகளே பள்ளி சென்றனர்.

இந்தியாவின் தொடக்கப் பள்ளிகள் கல்வி பயிலும் குழந்தைகளின் மொத்த எண்ணிக்கை 5 கோடியே 11 லட்சமாகும். இவர்களில் மூன்றிலொரு பங்கினர் சிறுமிகளாவர்.

நடந்து செல்லக்கூடிய தொலைவில் பத்தில் ஒன்பது குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடம் உள்ளது. இப்போது நாட்டில் 4 லட்சம் தொடக்கப்பள்ளிகள் உள்ளன. இது 1950ஆம் ஆண்டிலிருந்தவற்றைவிட இரண்டு மடங்கு அதிகமாகும். தமிழ் நாட்டுத் தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை நான்கு மடங்காக அதிகரித்துள்ளது.

இந்தியாவில் தொடக்கப் பள்ளிஆசிரியர்களில் ஐந்தில் ஒரு ஆசிரியையாயிருக்கிறார். தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் ஐந்து ஆசிரியைகளுக்கு ஓர் ஆசிரியர் வீதம் உள்ளனர்.

அரசாங்கம் இப்போது ஒரு குழந்தையின் தொடக்கக் கல்விக்காக ரூ. 24ஐச் செலவிடுகிறது. இது 1950ஆம் ஆண்டு ரூ. 19ஆக இருந்தது. கடந்த 1965ம்ஆண்டு தொடக்கக் கல்விக்காகச் செய்யப்பட்ட மொத்தச் செலவு ரூ. 122 கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

புது உயர் கல்வி டைரக்டர்

ஸயீத் யாகுப் நியமனம்

சென்னை, ஆக. 18—சென்னை உயர் கல்வி கூட்டு டைரக்டராக உள்ள திரு. ஸயீத் யாகுப் உயர் கல்வி டைரக்டராக நியமிக்கப்பட்டுள்ளார் என்று முதன் மந்திரி திரு. எம். பக்தவத்சலம் தெரிவித்தார்.

திரு. யாகுப் 19ஆம் தேதி திரு சுந்தரவடிவேலுவிடமிருந்து பதவிப் பொறுப்பை ஏற்பார். திரு. சுந்தர வடிவேலு மத்திய கல்வி அமைச்சகத்தில் கூட்டுக் கல்வி ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளது தெரிந்ததே.

கல்வி இலாகாவுக்கான திருத்தியமைக்கப்பட்ட நிர்வாகத் திட்டத்தை திரு. பக்தவத்சலம் இன்று விளக்கினார்.

தற்போது செகண்டரி கல்வி டைரக்டராக உள்ள திரு. எம். டி. பால் இதே பதவியில் நீடிப்பார்.

இது வரை உயர் கல்வி டைரக்டரே நூலக டைரக்டராக இருந்து வந்தார். 19-ந் தேதி முதல் நூலகங்களின் பொறுப்பு செகண்டரி கல்வி டைரக்டரிடம் இருந்து வரும்.

19-ந் தேதி முதல் உயர் கல்வி இலாக்காவில் கூட்டு டைரக்டர் பதவி இராது. உதவி டைரக்டர் பதவிக்கு மட்டுமே வகை செய்யப் பட்டுள்ளது. இப்பதவிக்கு ஒருவர் விரைவில் நியமிக்கப்படுவார்.

செகண்டரி கல்வி இலாகாவில் 19-ந் தேதி முதல் டெபுடி டைரக்டர், 2 கூட்டு டைரக்டர்களே இருப்பர். பதவிகள் மூன்றிலிருந்து 2 ஆகக் குறைக்கப் படும்.

ராஜ்யத்தில் உள்ள பழைய ஜில்லா ஹைஸ்கூல்கள் எண்ணிக்கை 2400 ஆகும். இந்தப் பள்ளிகள் விஷயத்தில் விசேஷ கவனம் செலுத்தப்படும். இப் பள்ளிகள் நிர்வாக அமைப்பில் அபிவிருத்திகள் செய்யப்படும்.

செகண்டரி கல்வி இலாகா திரு. எஸ். வி. சிட்டிபாபுவும், திரு. வி. டி. டைடஸும், கூட்டு டைரக்டராக நீடிப்பர். திரு. சிட்டிபாபு அமெரிக்கா செல்லும் போது அப்பதவி காலியாகவே இருக்கும். மூன்று டெபுடி டைரக்டர்களில் ஒருவர் திரு. சிட்டிபாபு அலுவல்களைக் கவனித்து வருவார். அவர் திரும்பியவுடன் மூன்றாவது டெபுடி டைரக்டர் தமது பழைய பதவியைத் திரும்ப ஏற்பார்.

தனியார் பள்ளிக்குப் போட்டியாகப் பஞ்சாயத்துப் பள்ளி

ரிட் மனுவில் தீர்ப்பு

சென்னை, செப். 3—திரு. பி. கே. ராஜாமணி என்பவர் தாக்கல் செய்துள்ள ரிட் மனுவை ஹைகோர்ட் நீதிபதி திரு. டி. வெங்கடாத்ரி அனுமதித்துத் தீர்ப்புக் கூறினார்

தென்காசி தாலுகா, கடையநல்லூர் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் கம்மராப்பச்சேரி என்னுமிடத்தில் பள்ளிக்கூடம் நடத்தக்கூடாது என்று தடை விதிக்குமாறு ரிட் மனுவில் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

ரிட் மனு விவரம்

திரு. பி. கே. ராஜாமணி சார்பில் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவில் கூறப்பட்டிருப்பதாவது :—

மனுதார் 1941ல் கம்மராப் பச்சேரியில் ஓர் பெரும் பள்ளிக் கூடத்தை ஆரம்பித்தார். அதில் 1 முதல் 5 வகுப்பு வரை ஏற்படுத்தப்பட்டது. அதே இடத்தில் 1 முதல் 3 வரை வகுப்புகள் உள்ள மற்ரோர் பள்ளியை பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் ஆரம்பித்தது. பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் நடந்து கொண்ட முறை மனுதாருக்கு வருத்தத்தை உண்டுபண்ணியது. அதன் மீது மனுதாரர் இந்த ரிட் மனுவை தாக்கல் செய்தார். கிராம மக்களின் நன்மையைக் கருதி பஞ்சாயத்து கவுன்சில் பள்ளிக் கூடத்தை ஆரம்பிக்கவில்லை என்றும் விரோதம் காரணமாகவேபள்ளியை ஆரம்பித்திருப்பதாகவும் ரிட் மனுவில் கூறப்பட்டுள்ளது.

தீர்ப்பு விவரம்

மனுவை அனுமதித்து நீதிபதி அளித்துள்ள தீர்ப்பில் ரிட்குறிப்பிடப்பட்டுள்ளதாவது: பஞ்சாயத்து கவுன்சில் ஆரம்பித்துள்ள பள்ளிக்கூடம் மனுதாருக்குச் சொந்தமான பள்ளிக் கூடத்திற்கு 40 கெஜ தூரத்திற்கு உள்ளாகவே இருக்கிறது. ஆரம்பப் பள்ளிக்கூடங்களுக்கு அங்கீகாரமும் உதவியும் அளிப்பதற்கான விதிகள் இவ்வாறு வேண்டும் என்றேமீறப்பட்டிருக்கிறது. ஒரு தனி நபர் உதவி பெறும் பள்ளியொன்றை ஏற்கெனவே நடத்திக் கொண்டிருக்கும் இடத்தில் மற்றொரு பள்ளியை ஆரம்பிப்பதற்குப் பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்கு உரிமையுண்டா? பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் குறிப்பிட்டுள்ள சர்க்கார் உத்திரவில் ஒரு மைல் சுற்று வட்டத்தில் வேறு பள்ளிக்கூடம் இல்லாத இடத்தில் பள்ளிக்கூடம் ஆரம்பிப்பதற்குத்தான் அனுமதி தரப்பட்டிருக்கிறது. மற்ரோர் ஆரம்பப் பள்ளியை ஆரம்பிக்க வேண்டியது மிகவும் அவசியம் என்பதற்கு அத்தாட்சிகள் காட்டப்படவில்லை. தற்போதுள்ள பள்ளிக்கூடம், பள்ளிக்குச் செல்லவேண்டிய குழந்தைகளுக்குத் தகுந்தவாறு சேவை செய்யவில்லை என்றும் காட்டப்படவில்லை. ஆகவே மனுதாரர் கேட்டுக் கொண்டபடி உத்தரவு பிரப்பிக்கப்படுகிறது.

———

Association Publishing House

‘ ஆரம்பக் கல்வி நிலையம் ’

94/95, New Street, Mannady, Madras-1.

(For High Schools and Higher Ele. Schools)

Phone : 24544 Post Box No. 1818

MATHEMATICS

ஆசிரியர் : பி. வீரராகவன்

சிறுவர் கணக்கு நூல்

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
இரண்டாம் வகுப்பு	0·65		
மூன்றாம் வகுப்பு	0·87	37	18-5-’66

புதுமுறை சங்கக் கணிதம்

ஆசிரியர் : பி. வி. நாகராஜன், பி.ஏ., எல்.டி.

ஆறாம் வகுப்பு	1·50	50	18-5-’66

ஆசிரியர் : A. C. பாலசுந்தரம், பி.ஏ., எல்.டி.

ஏழாம் வகுப்பு	1·75	13	16-5-’62

SCIENCE

இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்

ஆசிரியர் : பி. வீரராகவன்

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
இரண்டாம் வகுப்பு	0·40		
மூன்றாம் வகுப்பு	0·50		

ஆசிரியர் : M. விவேகானந்தா பி.எஸ்ஸி., எல்.டி.,

நான்காம் வகுப்பு	0·75	6	18-5-’66

சிறுவர் ஆரம்ப விஞ்ஞானம்

ஆசிரியர் : கே. லக்ஷ்மிநாராயணசாமி, பி.ஏ.. எல்.டி.

ஐந்தாம் வகுப்பு	1·25	9	18-5-66

பொது விஞ்ஞானம்

ஆறும் வகுப்பு	1·25	25	18-5-'66

ஆசிரியர் : **பி. வி. நாகராஜன்,** பி.ஏ., எல்.டி.

ஒன்பதாம் வகுப்பு	1·75	33	18-5-66
பதினோராம் வகுப்பு	2·50	35	10-5-'61

HISTORY

ஆசிரியர் : **பி. வீரராகவன்**

சிறுவர் வரலாறு

மூன்றும் வகுப்பு	0·60

ஆசிரியர் : **த. சே. உமாபதி,** எம்.ஏ., எல்.டி.

நான்காம் வகுப்பு

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
சென்னை	0·87	11	18-5-66
செங்கற்பட்டு	0·87	12	18-5-66
வட ஆற்காடு	0·87	12	,,
தென் ஆற்காடு	0·87	12	,,
சேலம்	0·87	12	,,
கோயமுத்தூர்	0·87	12	,,
நீலகிரி	0·87	12	,,
தஞ்சாவூர்	0·87	12	,,
திருச்சி	0·87	12	,,
மதுரை	0·87	12	,,
இராமநாதபுரம்	0·87	12	,,
திருநெல்வேலி	0·87	12	,,
ஐந்தாம் வகுப்பு	1·00	42	,,
ஆறும் வகுப்பு	1·00	54	,,

SOCIAL STUDY

ஆசிரியர் : **த. சே. உமாபதி,** எம்.ஏ., எல்.டி.

ஏழாம் வகுப்பு	2·00	18	16-5-'62

GEOGRAPHY

ஆசிரியர் : **பி. வீரராகவன்**

மூன்றும் வகுப்பு

சிறுவர் பூகோளம்

(சென்னை)	0·60

ஆசிரியர் : த. சே. உமாபதி, எம்.ஏ., எல்.டி.

நான்காம் வகுப்பு

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
சென்னை	0·62	46	18-5-66
செங்கற்பட்டு	0·62	19	,,
வட ஆற்காடு	0·62	18	18-5-66
தென் ஆற்காடு	0·62	18	,,
சேலம்	0·62	19	,,
கோயமுத்தூர்	0·62	19	,,
நீலகிரி	0·62	19	,,
ஐந்தாம் வகுப்பு	1·00	19	18-5 '66

TAMIL GRAMMER

இலக்கணமும் மொழிப் பயிற்சியும்

ஆசிரியர் : புலவர் சொ. முருகேசனார்

ஆறாம் வகுப்பு	0·75	4	16-5-'62
எட்டாம் வகுப்பு (III Form)	0·75	4	10-5-'61

இலக்கணம் கட்டுரை மொழிப் பயிற்சி

புதிய பத்தாம் வகுப்பு	1·25	11	18-5-'60
புதிய பதினோராம் வகுப்பு	1·50	31	10-5'-61

ஐந்தாம் வகுப்பு

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
நீதிக் கதைகள்	0·50	17	18-5-60
அறிவுக் கதைகள்	0·50	15	18-5-60

TAMIL NON-DETAILED

ஆறாம் வகுப்பு			
அறிவுச் சுடர்	0·62	22	18-5'-66
பத்தாம் வகுப்பு			
நாடும் மக்களும்	1·00	17	18-5-'60

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
தொண்டை நாட்டு மன்னர்	1·00	19	18-5-'60
பூம்புகார்	0·87	16	,,
திரு. வி. க.	0·87	32	13-5-'59

ENGLISH NON-DETAILED

Author: Mrs. Lucy Arul Raj

VI STANDARD

Mother India Supplementary Reader

	0·50	49	18-5-66

III Form

VIII STANDARD

Mother India Supplementary Reader

	0·62	24	10-5-'61

கணிதம் கற்பிக்கும் முறை

ஆசிரியர் : லீலா பார்த்தசாரதி, பி.எ., எல்.டி.

	2·00	2	5-7-'61

சமூக பாடப் பயிற்சி நூல்

ஆசிரியர் : ஆர். சேஷாத்திரி, பி.எ.,பி .டி.

எட்டாம் வகுப்பு	1·00
பத்தாம் வகுப்பு	1·25
பதினோராம் வகுப்பு	1·50

உமாபதி உரை நூல்

மூன்றும் வகுப்பு	0·40
நான்காம் வகுப்பு	0·50
ஐந்தாம் வகுப்பு	0·60
ஆறும் வகுப்பு	1·00
ஏழாம் வகுப்பு	1·25

Association English Premier III Class 0·60

Association English guide IV Class 0·40 n.p.

புது முறை சங்க வாய்பாடு

100 பிரதிகள் 8·00

Edited Printed and Published by P. VEERARAGHAVAN.
at Venkatesan Press, 2-65, Broadway, Madras-1.